# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-
ஆசிரியர் மு. குலாம் முஹம்மது
Volume-18 Issue-1 ஜனவரி-2025 ஜமாதிஸானி-ரஜப் 1446





## இஸ்ரேலை தண்டிக்க... இந்த் ரஜப் ஃபவுண்டேஷன்!



# ஈரானை அமெரிக்கா தாக்குமா?

## தாடி வைத்தால் தண்டனையா? மதுரை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு..!





# இஸ்ரேலை தண்டிக்க... இந்த் ரஜப் ஃபவுண்டேஷன்!

**1914** முதல் பாலஸ்தீனில் அப்பாவி மக்களைக் கொலை செய்துவிட்டு, எந்தத் தண்டனையையும் பெறாமல் தப்பித்துக் கொண்டார்கள். யூத பயங்கரவாதிகளான ஜியோனிஸ்ட்டுகள்.

ஏன் தாங்கள் நடத்துகின்ற தீவிரவாதத் தாக்குதல்கள். அப்பாவி மக்கள் கொலை இவற்றிலிருந்தும் - மக்கள் கண்களை மறைத்து விட்டார்கள்.

இவர்கள், இந்த ஜியோனிஸ்ட்டுகள் கூட்டுப் படுகொலைகளைச் செய்திடும் போதெல்லாம், அவர்களே பாதிக்கப்பட்டதாக மேலை நாட்டு ஊடகங்கள் ஊதிப் பெரிதாக்கின. மக்களிட மிருந்து, எல்லா உண்மைகளையும் மறைத்தன.

ஏன் பாலஸ்தீன் என்றொன்று உலகில் இல்லை.

இஸ்ரேல் என்ற யூத நாடு மட்டுந்தான் இருக்கின்றது என்றொரு பொய்யைப் பரப்பிட முடிந்தது.

உண்மையில் பாலஸ்தீன பிரச்சனை மக்கள் மனங்களிலிருந்து மெல்ல, மெல்ல மறையத் தொடங்கின.

பாலஸ்தீன் பூமியை ஆக்கிரமித்த யூதர்களோடு சுற்றி இருக்கின்ற அரபு நாடுகள், மறக்கத் தொடங்கின. இஸ்ரேலோடு பல ஒப்பந்தங்களைச் செய்துகொண்டன. கொஞ்சின, குலாவின.

2023 அன்று ஹமாஸ் என்ற இஸ்லாமிய இயக்கத்தின் போர்ப்பிரிவு இஸத்தின் அல்காஸம் பிரிகேட்ஸ் நன்கு திட்டமிட்டார். தாக்குதல் ஒன்றை காஸா வளாகத்தில் நடத்தினார்கள்.

இஸ்ரேல் உடனேயே ஹமாஸ் ஆட்சி செய்து கொண்டிருந்த காஸா மீது போர்ப் பிரகடனம் செய்தது.

ஹமாஸ் இந்தத் தாக்குதல், 56 ஆண்டுகால கடினமான சித்திரவதைகளுக்கு எதிரான போர் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்ரஸ் அண்டோனியோ குறிப்பிட்டார்.

நீண்டநாள் மூச்சுத் திணறலுக்குப் பின் அநீதியும், அவமானமும் கொடூரமும் தாழ முடியாமல் பொட்டித் தெறித்த தாக்குதலே ஹமாஸ் அக்டோபர்-7, 2023இல் நடத்திய தவிர்க்க வியலாத தாக்குதல்.

இஸ்ரேல் ஹமாஸ் மீது போர்ப்பிரகடனம் செய்தது. ஆனால் அதுதான் தாக்குதல்களை நடத்தியது, அப்பாவி மக்கள் மீது, பெண்கள், குழந்தைகள் இவையே இஸ்ரேலின் குறி.

ஹமாஸ்-ஐ அழிக்கப்போகிறேன் என்று நிலவழித் தாக்குதலை அக்டோபர் 27இல் 2023 தொடங்கிய இஸ்ரேல் - அப்பாவிகளையே கொலை செய்தது.

இன்றளவும் அந்தக் கொலைபாதகச் செயல் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றது.

இந்தக் கட்டுரை வடிக்கின்ற இந்த நாள் 1.01.2025இல் 45,000 அப்பாவி பாலஸ்தீன மக்களைக் கொலை செய்திருக்கின்றது. 1,09,000 பேரைக் காயப்படுத்தி இருக்கின்றது.

இதில் 75% பெண்களும் குழந்தைகளும்!

21,000 குழந்தைகள் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். 6,25,000 குழந்தைகள் தங்கள் இளமையையும், கல்வியையும் இழந்திருக்கின்றார்கள்.

இதில் இஸ்ரேல், காஸாவில் தினமும் இடிக்கும் கட்டடங்களில் சிக்கி இறந்தவர்கள் 15,000 பேர் எனக் கணக்கிடப்படுகின்றார். இதிலும் அனேகர் பெண்களும், குழந்தைகளும்தான்.

இந்நிலையில் இந்த மக்களுக்கு - அதாவது அப்பாவி மக்களுக்கு நியாயந்தேடிட உலக மக்கள் பல விதத்திலும் முயற்சி செய்து வருகின்றார்.

அதன் குறியீடாக ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், உலகெங்கிலும் முக்கிய நகரங்களில் திரளும், லட்சக்கணக்கான மக்களைக் கொள்ளலாம். அவர்கள் புதிய புதிய முழக்கங்களையும் கோரிக்கைகளையும், தங்கள் நாட்டு அரசிடம் வைத்து வருகின்றார்கள்.

மாவீரன் நெல்சன் மண்டேலாவின் மண் என அறியப்படுகின்ற தென் ஆப்பிரிக்கா. உலக நீதிமன்றத்தில் ஒரு பெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியது. அது உலக நீதிமன்றம் என்ற ICC - International Criminal Court. சர்வதேச தண்டனை நீதிமன்றத்தில் நடந்தது. அதில் இஸ்ரேலின் கூட்டுப்படுகொலை புகழ், நெதன்யான்ஹுவை சிறை பிடிக்க பிடிவாரண்ட்-ஐ பிறப்பிக்கச் செய்துது.

இஸ்ரேல் இன்னொரு பிணம் தின்னும் கழுகு என அறியப்பட்ட, இராணுவ அமைச்சர் யோவ் கெலண்ட்டுக்கும் இதேபோல் சிறை பிடிவாரண்ட்-ஐ பிறப்பிக்கச் செய்தது. உலக அரங்கில் இவர்கள் இருவரும் போர்க் குற்றவாளிகள்.

அல்லாமல் காஸா போரில் கலந்துகொண்ட அத்தனை இஸ்ரேலிய இராணுவத்தினரும் போர்க் குற்றவாளிகள். மக்களை கொலை செய்தவர்கள் மட்டுமல்ல பின்வருபவனவற்றைச் செய்தவர்களும் போர்க்குற்றவாளிகள்.

பெண்களையும், குழந்தைகளையும், ஆண்களைக் கொலை செய்தவர்கள் மட்டுமல்ல,

- கட்டடங்களை இடித்தவர்கள்

- மக்களை கொலை செய்துவிட்டு அவர்கள் வீட்டை விட்டு துரத்தியவர்கள்

- அந்த வீடுகளைப் பயன்படுத்திய இஸ்ரேலிய இராணுவத்தினர்

- பட்டினியால் வாடுபவர்களுக்கு செல்லும் உணவையும், இதர அடிப்படை தேவைகளையும் தடுத்தவர்கள்

- மருத்துவமனைகளை அழித்தவர்கள் என அந்தப் பட்டியல் நீளுகின்றது.

மொத்தத்தில் காஸாவுக்குள் கால் பதித்த அத்தனை இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் போர்க்குற்றவாளிகளே!

இந்த நிலையை இன்று உருவாக்கியவர்கள், இந்த் ரஜப் ஃபவுண்டேஷன் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்.

### யார் இந்த இந்த் ரஜப்?

2024, ஜனவரி 19ஆம் நாள் காஸாவின் டெல்-அல் ஹவ்வா பகுதி. இங்கே இஸ்ரேலின் குண்டு வீச்சுகள் தொடங்கிவிட்டன. மக்கள் பலர் பிணமாகி விழுகின்றனர்.

இந்த் ரஜப் என்ற ஆறுவயது பெண் குழந்தையின் குடும்பத்தினர், எங்கேனும் சென்றுவிடலாம் என வீட்டை விட்டுக் கிளம்புகின்றனர். 11 பேர் கொண்ட அந்த குடும்பத்தில், இந்த் ரஜப் என்ற குழந்தையும் அவருடன் இன்னும் 5 பேர், ஒரு காரில் ஏறி பயணம் செய்தார்கள். எஞ்சியோர் கால்நடையாகப் பயணப்பட்டார்கள். அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து 350 மீட்டர் பயணப்பட்டவுடன் இஸ்ரேலிய விமானங்கள் அந்தக் காரின் மீது குண்டுகளை வீசிவிட்டார்கள். காரில் இருந்த இந்த் ரஜப் உடன் இருந்த ஐந்து பேரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள். அவள் தன்னைக் காப்பாற்றும்படி அலறுகின்றார்.

PRCS என்ற பாலஸ்தீன செம்பிறை அமைப்பைச் சார்ந்தவர்கள் அவளைக் காப்பாற்றிட வேண்டி வாகனத்தைக் கொண்டு வந்தார்கள். சுற்றி நின்ற இஸ்ரேலிய இராணுவம் அந்த வாகனத்திற்கு அனுமதி மறுத்துவிட்டார்கள். நான்கு இணை

மருத்துவர்கள் வந்து, காப்பாற்றிட வந்திருக்கின்றார்கள். அவர்களையும் குண்டு வீசி, இஸ்ரேலிய இராணுவம் அழித்துவிட்டது.

இந்நிலையில் இந்த் ரஜப் உயிரிழந்தாள். அதாவது இஸ்ரேலிய கூட்டுப்படுகொலை யாளர்கள் கொலை செய்துவிட்டார்கள்.

இந்த விவகாரம் இந்தக் கொலை உலக மக்களின் மனதைத் தொட்டது. மனசாட்சியை உலுக்கியது.

இப்படி குழந்தைகளைத் திட்டம் போட்டுக் கொலை செய்பவர்கள். அவர்களைக் காப்பாற்றிட விடாமல் தடுப்பவர்கள், காப்பாற்றிடச் சென்றவர்களையும் கொலை செய்தவர்களை, நீதியின் முன் நிறுத்தியாக வேண்டும். பாலஸ்தீனில் கொலை செய்யப் பட்ட மக்களுக்கு நீதி தேடிட வேண்டும் என்ற இலட்சியங்களோடு ஓர் இயக்கம் தொடங்கப் பட்டது. அதன் பெயர்தான் இந்த் ரஜப் அறக்கட்டளை. (Hind Rajab Foundation)

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம், கூட்டுப்படுகொலைகளைச் செய்துவிட்டு, தப்பித்துவிடும் இஸ்ரேலை நீதியின் முன் நிறுத்துவது. இதனை செப்டம்பர் 2024ல் தொடங்கியவர் லெபனானைச் சார்ந்த டயாப் அபூ ஜஹ்ஜாஹ் (Dyab Abu Jahjah)

இவர் ஒரு காலக்கட்டத்தில் ஹிஸ்புல்லாவின் பயிற்சிகளைப் பெற்றவர்.

இந்த் அறக்கட்டளையின் தலைநகர், பெல்ஜியத்தில் இருக்கின்றது. இதன் பொதுச் செயலாளர் பெல்ஜியத்தைச் சார்ந்த கரீம், ஹூஸைன்.

சாதனைகள் - விரைவில் இவர்கள் உலகெங் கிலும் கிளைகளைத் தொடங்கிவிட்டார்கள். இது ஓர் அறக்கட்டளை என அறியப்பட்டாலும், இந்த் ரஜப் ஓர் இயக்கமாகவே உலகெங்கும் செயல்பட்டு வருகின்றது. இத்தனைக்கும் இந்த் ஜனவரி 29, 2024 நிகழ்வுக்குப் பின் தொடங்கப் பட்டதே.

இதனுடைய மிகப்பெரிய சாதனை, காஸாவில் நடக்கும் கூட்டுப்படுகொலைகளை செய்த இஸ்ரேலிய ஆக்கிரமிப்புகள், படையின் கொலை பாதங்களைத் துல்லியமாக படம் பிடித்து ஆவணப்படுததியதும், அதனை ICC என்ற உலக தண்டனை நீதிமன்றத்தில், சமர்ப்பித்ததும்.

தாமாகச் சிக்கிக்கொண்ட இஸ்ரேலிய இராணுவத்தினர், இவர்கள் அப்பாவிகளைக் கொலை செய்வதையும், வீடுகளை நெருப்பிட்டுக் கொளுத்துவதையும் படமெடுத்துக் ஒளி பரப்பினார்கள். தங்கள் சாதனைகளாகக் காட்டிக் கொண்டார்கள். இந்தப் படங்களைத் துல்லியமாகச் சேர்த்தார்கள். இந்தப் படங்களை இஸ்ரேலிய இராணுவத்தின் ஒப்புதல் வாக்குமூலம் என்றாக்கினார்கள்.

அதன்பின் மனித உரிமை அமைப்புகளும் (மீடியாக்கள்) ஊடகங்களும் பதிவு செய்த படங்களையும் ஒன்று படுத்தினார்கள். அவற்றையும் ஆவணங்களாக மாற்றினார்கள்.

இப்படி 8000 (எட்டாயிரம்) ஆவணங்களைத் தயாரித்திருக்கின்றார்கள். இஸ்ரேலின் கெடுபிடிகள், படுகொலைகள் இவற்றை யெல்லாம் வைத்துப் பார்த்திடும்போது, இந்த் மிகப்பெரியதொரு பணி.

சைல் நாட்டில் இந்த இயக்கத்தில் 620 வழக்கறிஞர்கள் - வேலை செய்கின்றார்கள்.

இத்தோடு நிற்கவில்லை. பிரிதோர் இமாலயப் பணியைச் செய்து வருகின்றாரகள். அது இஸ்ரேலின் இராணுவத்தினர் இப்போது உல்லாசப் பயணம் போகின்றார்கள். இவர்களை உல்லாசப் பயணத்திற்கு இஸ்ரேலின் அரசே பணம் தந்து அனுப்பி வைக்கின்றது. காரணம், அவர் போர்க்களத்திலிருந்து வந்தவுடன் மன நிலையில் பெரிய பாதிப்பிற்கு ஆளாகின்றார். காஸாவை விட்டு நான் வந்துவிட்டேன். காஸா என்னை விட்டுப் போகவில்லை என ஓலமிடுகின்றார்கள். மீண்டும் போர்க்களம் போக மறுக்கின்றார்கள். தற்கொலை செய்து கொள்கின்றார்கள். இந்த அவலங்களிலிருந்து விடுபட ஓர் “மாற்று” என இந்தப் உல்லாசப் பயணங்களை அரசே ஏற்பாடு செய்கின்றது. இதனால் இராணுவத்திலிருக்கும் ஏனையோரும் உற்சாகமடைவார்கள் என எதிர்பார்க்கப்படு கின்றார்கள், இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள்.

இந்நிலையில் இந்த் ரஜப் இயக்கம், உலகில் இந்த கூட்டுப்படுகொலையாளர்கள், எந்த நாட்டிற்கெல்லாம் உல்லாசப் பயணம் செய்கின்றார்களோ அந்த நாட்டு நீதிமன்றத்தில்




அவர்கள் மீது வழக்குகளைப் பதிவு செய்கின்றார்கள். உடனேயே பிடி வாரண்டுகளைப் பெறுகின்றார்கள். கைது செய்கின்றார்கள்.

இப்படி - சவூதி ஆப்பிரிக்கா, செர்பியா, பிரான்ஸ், நெதர்லாண்ட், சைல், சைப்பிரஸ், சுவீடன், பெல்ஜியம், தாய்லாந்து, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்த யூதத் தீவிரவாத இராணுவத்தினர் மீது வழக்கு தொடரப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இப்போது இஸ்ரேலின் போர் குற்றவாளி நெதன்யான்ஹு, வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தவர்கள், உடனேயே திரும்பி வந்து விடுங்கள், நீங்கள் காஸா போரில் கலந்து கொண்டிருந்தால் கூட உங்களைக் கைது செய்து சிறையில் அடைத்துவிடுவார்கள். பின்னர் அந்த நாட்டிலேயே வழக்குகளை நடத்துவார்கள், தண்டிப்பார்கள். அதனால் விரைந்து திரும்பி வந்து விடுங்கள் எனக் கூறியுள்ளார்கள்.

ஆக உல்லாசப் பயணம் செய்ய சென்றவர்கள் ஊரறியுமுன் வீடு திரும்பிட விரைந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதனை இஸ்ரேலிய இராணுவத்தினர் Global Legal Threat உகலளாவிய சட்ட ரீதியான பீதி எனக் கூறுகின்றார்கள்.

இந்த் இயக்கம் உலகெங்கிலும் கால்பரப்பி வருவதால், இஸ்ரேலிய இராணுவத்தின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக்குறியே!

**இந்த் ரஜப்-ன் பெயரால்**
**அமெரிக்காவில் அரங்கம்**

இந்த் ரஜப் கொலை செய்யப்பட்ட விவகாரம் அதில் இஸ்ரேல் கையாண்ட கோரம் இவையெல்லாம் உலகையே உலுக்கிற்று.

இதன் எதிரொலியாக, உலகெங்கும், மாணவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தினார்கள். 2024, ஏப் 30ஆம் நாள் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக மாணவர் ஒரு பெரும் விழிப்புணர்வு மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாட்டிற்கு ஹாமில்டன் ஹால் என்ற மண்டபத்தில்தான் இந்த மாநாட்டை நடத்தினார்கள். அந்த ஹாமில்டன் ஹாலுக்கு இந்த் ரஜப் ஹால் எனப் பெயர் வைத்தார்கள்.

ஹாத்தி ஹெல்லி (Kathy Kelly) என்பவர், அமெரிக்க வீரர்களை இந்த விவகாரத்தை உலகெங்கும் எடுத்துச் சென்று, அமெரிக்க ஆயுதங்களைக் கொண்டு யூதத் தீவிரவாதிகள் செய்யும் கொலையின் கோரத்தை உலகறிய செய்தார்கள்.

**இஸ்ரேலின் பொய்ப்பிரச்சாரம்**

இந்த் ரஜப்-பும் அவருடன், அவருடைய குடும்பத்தைச் சார்ந்த ஐந்து பேரும் கொலை செய்யப்பட்ட விவகாரம் உலகை உலுக்கவே. இஸ்ரேல் நெருக்கடிகளுக்கு உள்ளானது.

இஸ்ரேலின் இராணுவத்தினர் உலகின் எந்தப் பகுதிக்கு சென்றாலும், கைது செய்யப்படலாம் என்ற நிலை நீடிக்கவே, இஸ்ரேலும் அதன் போர்க்குற்றவாளி நெதன்யான்ஹுவும் இன்னும் பீதிவயப்பட்டார்கள். ஆகவே பொய்களைப் பலகோடி பணத்தில் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டார்கள்.

இந்த் ரஜப் கொலைக்கும் எங்கள் இராணுவத்திற்கும் சம்மந்தமில்லை என பிரச்சாரம் செய்தது. ஆனால், Skynet ஸ்கைநெட் என்ற நிறுவனம் ஓர் ஆய்வை நடத்தி, அதுவும் விண்கோள் வழி நடத்தி, இந்த் ரஜப்-இன் கொலை முழுக்க, முழுக்க இஸ்ரேலின் கைவண்ணம் என்பதை நிரூபித்தது.

ஆக, இப்போதைய நிலையில், இஸ்ரேலின் பொதுமக்கள் வேண்டுமனால் வெளிநாடுகளுக்குப் போகலாம். இஸ்ரேலின் இராணுவத்தினர் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது. சென்றால் கைது செய்யப்படுவார்கள் என்பதுதான் நிலை.

இதுவரைக்கும் பாலஸ்தீன மக்களைக் கொலை செய்துவிட்டு தப்பித்ததைப்போல் இனி இஸ்ரேல் தப்பிக்க இயலாது. **- MGM**

- இது குறித்த காணொளியை வைகறை விஷன் யூடியூப் சானலில் பார்க்கவும்.



# காஸாவில்-இஸ்ரேலின் இனப்படுகொலைகள், அழித்தொழிப்பு!

## அக்டோபர் 2023 முதல் செப்டம்பர் 2024 வரை!

**2023** அக்டோபரில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனின் காஸா பகுதியில் தாக்குதலை தொடங்கியதிலிருந்து, கடந்த 15 மாதங்களாக நிகழ்த்தப்பட்ட அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள், கட்டிடங்கள் மீதான தாக்குதல்கள் பற்றின தரவுகளை, Forensic Architecture - என்றொரு பல்துறை ஆராய்ச்சி குழு சேகரித்து வருகிறது. இதை பகுப்பாய்வு செய்தபோது, கிட்டத்தட்ட காஸா மக்களின் மொத்த வாழ்வாதாரங்களும் இஸ்ரேலிய இராணுவத்தால் அழிக்கப்பட்டுவிட்டன என்பதை அறிய முடிகின்றது.

மேலும் இஸ்ரேலிய ராணுவத்தால் பாலஸ்தீன பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட அறிவிப்புகளையும் பகுப்பாய்வு செய்தபோது அதில், பாலஸ்தீன பொதுமக்களை, "காஸா போன்ற பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுங்கள்" என்ற உத்தரவுகளையும் காண முடிந்தது. இதனால் பொதுமக்கள் மீண்டும், மீண்டும் காஸாவை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். இறுதியில் பெரும் திரளான மக்கள் காஸாவை அடைந்ததும் அங்கு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளை கவனிக்கும் போது, அந்த மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான சூழல்கள் மற்றும் உயிர் வாழ்வதற்கான கட்டமைப்பை, முற்றிலுமாக அழிக்க ஒழுங்கமைக்கப்பட்ட முன் திட்டங்களோடு துல்லியமாக செயல்பட்டதாக தெரிகின்றது.

இந்த பகுப்பாய்வானது, அக்டோபர் 7, 2023 முதல் 16 செப்டம்பர் 2024 வரை இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் நடத்திய தாக்குதல்களை பற்றியது. இதில் தாக்குதல்களின் கோரம், அதனால் அழிப்புகளுக்கு உள்ளானவைகள், மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைகள், வன்முறைகளை இஸ்ரேலிய இராணுவம் கையாண்ட விதம், மேலும் இவைகளெல்லாம் எதார்த்தமாக நடந்தவைகள் அல்ல என்பதனைப் பற்றி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

- பகுப்பாய்வின் ஆறு பிரிவுகள்
- புவியியல் ரீதியான அடக்குமுறைகள்
- நிலமற்ற அகதிகளாக்குவது
- விவசாய மற்றும் நீர் வளங்களை முற்றிலுமாக அழித்தொழித்தல்

- மருத்துவ கட்டமைப்புகளையும், மருத்துவர்களையும் குறிவைத்து அழிப்பது.
- சாலைகள், பள்ளிகள், முகாம்கள், பள்ளிவாசல்கள், அரசு அலுவலகங்கள் போன்ற பொது கட்டமைப்புகளை அழித்தொழித்தல்
- அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு உதவ வரும் கரங்களை அழித்தொழித்தல்

### புவியியல் ரீதியான அழித்தொழிப்பு

*காஸாவின் கிழக்கு பகுதியிலிருந்து ஒரு கிலோமீட்டருக்கு அடுத்துள்ள அனைத்து விவசாய நிலங்கள், கட்டிடங்கள் அழிக்கப் பட்டுள்ளன. அதாவது 55 சதுர கிலோ மீட்டர். இது காஸாவின் மொத்த நிலப்பரப்பில் 15% சதவிகிதம் ஆகும்.*

*காஸா மற்றும் வாடி காஸா பகுதியை பிரிக்கும் 6.5 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையில் இருந்த அனைத்து கட்டுமானங்கள் மற்றும் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதாவது 35 சதுர கிலோமீட்டர். இது காஸாவின் மொத்த நிலப்பரப்பில் 9.6% சதவிகிதம் ஆகும்.*

*சலா அல்தீன் மற்றும் அல்ரஷீத் சாலைகளில் ஏற்கனவே இருந்த இரண்டு சோதனைச் சாவடிகளுடன் கூடுதலாக இடைப்பட்ட நான்கு சோதனை சாவடிகளை ஏற்படுத்தியுள்ளனர்.*

*இஸ்ரேலிய ராணுவத்திலிருந்து காஸாவிற்கு செல்வதற்கான 13 வழித்தடங்களில் உள்ள கட்டுமானங்கள் மற்றும் விவசாய நிலங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இது 62 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும்.*

*எகிப்தின் எல்லையை நோக்கிய காஸாவின் கிழக்கிலிருந்து மேற்குவரை உள்ள அகண்ட நிலப்பரப்பில் 10.8 சதுர கிலோமீட்டர் அளவில் இஸ்ரேலிய இராணுவம் அழித்தொழித்துள்ளது.*

### இஸ்ரேலிய இராணுவத்தின் செயல்முறை

*இஸ்ரேலிய இராணுவம் காஸாவின் கட்டுமானங்கள் மற்றும் விவசாய நிலங்களை அழித்து, தங்களுக்கு ஏற்றவாறு காஸாவை கட்டமைத்துக் கொண்டுள்ளது. இவை எதார்த்தமாக நடத்தப்பட்டவை அல்ல. நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல்முறையாக தோன்றுகிறது.*

*மீண்டும் மீளவே முடியாத அளவிற்கு காஸாவின் விவசாய நிலங்கள், மற்றும் கட்டுமானங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளது. காஸாவில் தப்பி பிழைத்த மக்களை பிளவு படுத்தி இரு துருவங்களை நோக்கி நகர்த்தி யுள்ளனர்.*

*வடக்கு, மற்றும் தெற்காக பிரிக்கப்பட்ட இந்த இரு துருவங்களுக்கிடையே சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி பல கட்டுப்பாடுகளை யும், அடக்குமுறைகளையும் கையாண்டுள்ளனர். தென் துருவத்திலிருந்து ஒருவர் வட துருவத்திற்கு வர முயன்றால் அவர் 4 கடுமையான சோதனைச் சாவடிகளில் சோதனைக்குள்ளாவார். இதனால் தப்பி பிழைத்த காஸா மக்களுக்குள் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.*

*இஸ்ரேலிய இராணுவத் தளத்திலிருந்து காஸாவிற்குள் நுழைவதற்கான 13 வழித் தடங்களும் அவர்களுக்கு இலகுவாக உள்ளன. இதனால் காஸாவிற்குள் நீண்ட நாட்கள் தங்களுடைய இராணுவ தளவாடங்களை நிறுத்தி அவர்களுக்கான சாதகமான சூழ்நிலை களை கட்டமைத்து கொள்வதில் இந்த வழித்தடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது.*

### காஸா மக்களை இடமற்ற அகதிகளாக்குதல்

*காஸாவில் பாதுகாப்பான பகுதிகள் அதாவது,* Humanitarian zone *என்பது அக்டோபர் 2023இல் 228.2 சதுர கிலோமீட்டராக இருந்தது. இது மொத்த காஸா நிலப்பரப்பில் 62.5% சதவிகிதம் ஆகும்.*

*ஆனால், இது படிப்படியாக குறைக்கப் பட்டு ஆகஸ்டு 2024இல் வெறும் 47 சதுர கிலோமீட்டர் மட்டுமே பாதுகாப்பான பகுதிகள் -* Humanitarian zone *என்றாகி விட்டது. அதாவது இது மொத்த காஸா நிலப்பரப்பில் 13% சதவிகிதம் ஆகும்.*

*மேலும் அக்டோபர் 2023 முதல் ஆகஸ்டு 2024 வரை காஸாவின் 84% சதவிகித நிலப் பரப்புகளில் இருந்த மக்களை, வலுக்கட்டாய மாக இடம்பெயர செய்துள்ளது இஸ்ரேலிய இராணுவம்.*

*காஸாவின் அனைத்து பகுதிகள் மீதும்*

இஸ்ரேலிய இராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் பாதுகாப்பான பகுதிகளும் அடங்கும். (Humanitarian zone)

மேலும் Humanitarian zone - பாதுகாப்பான பகுதிகள்குறித்த தெளிவானதகவல்களைதராமல் மக்களை அலைக்கழித்துள்ளது. வடக்கிலிருந்து, தெற்கு பகுதிக்கும், கிழக்கிலிருந்து மேற்கிற்கும் மக்களை அலைக்கழிப்பதே இவர்களின் பாதுகாப்பு நடவடிக்கையாக இருந்துள்ளது.

**விவசாய மற்றும் நீர் வளங்களை முற்றிலுமாக அழித்தொழித்தல்**

83% சதவிகிதம் தாவர வளங்கள் அழிக்கப் பட்டுவிட்டன. 70% சதவிகிதம், அதாவது 104 சதுரகிலோமீட்டர் வயல்கள் மற்றும் பழத்தோட்டங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. 3700க்கும் அதிகமான, அதாவது 45% சதவிகிதம் பசுமைக்குடிகள் அழிக்கப்பட்டுவிட்டன.

நிலத்தடி நீர் ஆதாரமான 47% சதவிகித கிணறுகள், மற்றும் 65% சதவிகித தண்ணீர் தொட்டிகளும் அழிக்கப்பட்டுவிட்டன. மேலும் 29% சதவிகித கிணறுகள் பற்றிய தரவுகள் இன்னும் கிடைக்கவில்லை. கழிவு நீர் மேலான்மை வசதிகள் எதுவுமே காஸாவில் செயல்பாட்டில் இல்லை என்பது கூடுதல் தகவல்.

மொத்தமாக காஸாவினுடைய மொத்த வாழ்வாதாரத்தையே அழித்து மீள் உருவாக்கும் செய்ய முடியாத அளவிற்கு இஸ்ரேலிய ராணுவம் செயல்பட்டுள்ளது.

**மருத்துவ கட்டமைப்புகளை குறிவைத்து அழிப்பது**

இஸ்ரேலிய தரைப்படை காஸாவிற்குள் நுழைந்த கணம் முதலே, காஸாவின் மொத்த மருத்துவ கட்டமைப்புகளையும், மருத்துவர் களையும், செவிலியர்களையும் குறிவைத்து அழித்தொழித்துள்ளது.

காஸாவில் உள்ள 36 மருத்துவமனைகளில், 35 மருத்துவமனைகள் இஸ்ரேலிய இராணுவத்தால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இதில் 31 மருத்துவமனைகள் மீது நேரடியான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 29 மருத்துவமனைகளை நெருங்கவே முடியாத அளவிற்கு சுற்றியுள்ள பகுதிகளையும் தாக்கி அழித்துள்ளனர். 10 மருத்துவமனைகளுக்குள் நேரடியாக படையெடுப்பு நடந்துள்ளது. 11 மருத்துவமனைகள் நீண்ட நாட்களுக்கு முற்றுகையிடப்பட்டுள்ளது.

பின்னர் காஸா முழுவதிலும் செயல்பட்டு வந்த சின்ன சின்ன கிளீனிக்குகளை நோக்கி மக்கள் நகர ஆரம்பித்தவுடன் அதையும் இஸ்ரேலிய இராணுவம் தாக்கி அழித்துள்ளது.

குறிப்பாக காஸாவின் மகப்பேறு மருத்துவ மனைகளும், கர்ப்பினி பெண்களுக்கான உதவிகளை மேற்கொள்ளும் மருத்துவ கட்டமைப்புகளையும் குறிவைத்து அழித்துள்ளது இஸ்ரேலிய இராணுவம்.

மேலும் மருத்துவ உதவிகளை மேற்கொண்டுவரும் செவிலியர்களையும், தன்னார்வலர்களையும் தாக்கி அழித்துள்ளது இஸ்ரேலிய இராணுவம்.

காஸா மருத்துவ கட்டமைப்புகளின் மீதான இஸ்ரேலிய இராணுவத்தின் இந்த தாக்குதல்களை பகுப்பாய்வு செய்யும் போது, இனி மீள முடியாத அளவிற்கு அழித்தொழிப்புகளை திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளதை அறிய முடிகின்றது

**பொது கட்டமைப்புகளை அழித்தொழித்தல்**

57% சதவிகிதம் சுகாதார கட்டமைப்புகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

71% சதவிகிதம் தங்குமிடங்களை தாக்கியுள்ளது இஸ்ரேலிய இராணுவம்.

53% சதவிகிதம் பொதுப் பயன்பாட்டு தளங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

75% சதவிகிதம் பள்ளிகள் தாக்கப்பட்டு, 91 பள்ளிக்கூடங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது.

81% பல்கலைக் கழகங்கள் தாக்கப் பட்டுள்ளது.

82% அரசு கட்டிடங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

80% சதவிகிதம் வழிபாட்டுத்தளங்கள் தாக்கப்பட்டுள்ளது.

91% சதவிகிதம் கலாச்சார மையங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

47.3% சதவிகிதம் சாலைகள் பாதிப்புக் குள்ளாகியுள்ளது.

இவைகள் அக்டோபர் 7, 2023 முதல் 6 ஜூலை 2024 அரை நடந்த தாக்குதல்களாகும். இதில் கடைசி 60 நாட்களில் தான் அதிகளவு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

சரியாக ஒரு இடத்தில் மக்கள் அதிகமாக கூடும் வரை காத்திருந்து பின்னர் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளது இஸ்ரேலிய இராணுவம்.



**அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு உதவ வரும் கரங்களை அழித்தொழித்தல்**

அகதிகளாக்கப்பட்ட காஸா மக்களுக்கு கிடைக்கும் உதவிகளையும் தேடித்தேடி அழித்துள்ளது இஸ்ரேலிய இராணுவம்.

முகாம்கள், பேக்கரிகள் போன்ற ஸ்தாபனங்கள் மீது 322 தாக்குதல்களை நடத்தியுள்ளது. பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகமை - UNRWA மீதும் தாக்கியுள்ளது. இதில் 195 பேர் இறந் துள்ளனர். 40 பேரை சிறைபிடித்துள்ளது இஸ்ரேலிய இராணுவம்.

Forensic Architecture - என்ற பல்துறை ஆராய்ச்சி குழுவியின் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்புகள், புவியியல் ரீதியான இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டதற்கான வரைபட விளக்கம், மற்றும் அக்டோபர் 2023லிருந்து இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் நடத்திய இனப்படுகொலைகளை புவியியல் ரீதியாக பகுப்பாய்வு செய்து வெளியிடப்பட்ட 827 பக்க ஆய்வறிக்கையை மையமாக கொண்டு இந்த ஆய்வு கட்டுரை மேற்கண்ட தரவுகளை அளிக்கின்றது.

இந்த அறிக்கையில், அக்டோபர் 7, 2023 முதல் காசாவில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகள் பற்றின விரிவான தரவுகளை வெளிக்காட்ட முயன்றுள்ளது. மேலும், இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் பரவலாக பொதுமக்களுக்கு தீங்கு விளை விக்கின்றன. எனவே அவற்றை கண்காணிக்க, புவியியல் சார்ந்த பகுப்பாய்வு (Spatial Analysis) மற்றும் அவை செயல்படுத்தப்படும் முறைகள் பற்றின (pattern Analysis) பகுப்பாய்வு செய்துள்ளது.

காஸாவில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதல் முறைகளை கூர்ந்து கவனித்த போது, காஸாவின் வரைபடத்தில் மட்டுமே ஆயிரக்கணக்கான தரவுகளை குறிக்க முடிகிறது தாக்குதல்களை வகைப்படுத்தும் போது இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களின் ஒருங்கமைப்பட்ட வடிவங்கள் அப்பட்டமாக வெளிப்படுகின்றது. (உதாரணத்திற்கு, காஸாவிற்குள் இஸ்ரேலிய தரைப்படையின் வருகையும், அதன் பின்பான காஸாவின் மருத்துவ கட்டமைப்புகளின் அழிவிற்கும் உள்ள தொடர்பை கூறலாம்.)

மேலும் காஸாவின் வெவ்வேறு பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் எதார்த்தமாக நடத்தப்பட்டவை அல்ல. அவைகள் வெவ்வேறு பகுதிகளில், நேரங்களில் நிகழ்த்தப்பட்டிருந்தாலும், ஒரே மாதிரியான முறைமைகளை பின்பற்றிதான் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

(மேற்சொன்னதகவல்களின் அடிப்படையில் தேதிவாரியாக எப்படி இந்த இனப்படுகொலை காஸாவில் நடத்தப்பட்டது என்பதை https://forensic-architecture.org/investigation/a-cartography-of-genocide?s=08 என்ற இணையதளத்தில் காணலாம்.)

Source: A Cartography of Genocide: Israel's Conduct in Gaza since October 2023

தமிழில் : **Adv. Jasmine Fathima**



**2024**

# ஈரானின் அணு ஆயுத உலையை தகர்த்திட முயற்சி செய்த இஸ்ரேல்

**ஈரான்** அணு ஆயுத உலைக்கு வேண்டிய பல உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்துதான் வாங்கிட வேண்டிய நிலை. காரணம், அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைதான்.

வெளிநாடுகளிலிருந்தும், இப்போது தனது அணு உலைக்கு வேண்டிய உபகரணங்களை வாங்கிட இயலுவதில்லை. காரணம் புதியதாக விதிக்கப்பட்டுள்ள மிக நெருக்கடியான பொருளாதாரத் தடைகள்.

இந்தத் தடைகளைத் தாண்டிட பல இடைத்தரகர்கள் வழியாகத்தான் இன்றைய நாட்களில் அணு உலை உபகரணங்களை வாங்கி வருகின்றது. இந்த இடைத்தரகர்களை இஸ்ரேலின் உளவுத்துறை கவனித்து வருகின்றது. இஸ்ரேல் இவர்கள் வழியாக ஈரான் வாங்கிடும், அணு உலை பொருள்களில் வெடிக்கும் பொருள்களை பதித்து விடுகின்றது. இதனால் முழு அளவில் உலை வேலை செய்து கொண்டிருக்கும்போது உலை வெடித்து விடுகின்றது. இஸ்ரேல் பெருமைப் பாராட்டிக் கொள்கின்றது. 2018ஆம் ஆண்டில் இப்படியொரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. 2021ஆம் ஆண்டில் நாடாஸ் என்ற இடத்தில் பூமிக்குக் கீழிலிருந்து அணு உலையை வெடிக்கச் செய்தது.

இப்போது நடந்துகொண்டிருக்கும் காஸா போரில் இஸ்ரேல் பல முகங்களிலும் தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. அதனால் அது தனது கடைசி ஆயுதமாக அணு குண்டுகளின் பக்கம் போகலாம் என்றொரு எதிர்பார்ப்பு வரலாறு முழுவதும், துரோகங்களையே செய்து பழகிப்போன இஸ்ரேல் இதையும் செய்யும் என்பதனால் ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நோக்கி விரைந்துக் கொண்டிருக்கிறது.

இன்றளவும் அணுகுண்டுகளைத் தயாரிக்கக்கூடாது என தடுத்து வந்த உலமாக்கள், இப்போது மட்டும் ஈரான் அதை தயாரிக்கலாம் என அனுமதி அளித்துள்ளார்கள். கடைசி நேரத்தில் எனது அனுமதியைத் திரும்பப் பெற்றிட வேண்டும் எனவும் கூறி இருக்கின்றார்கள்.

இதை தனக்கு மிகப்பெரிய ஆபத்து என இஸ்ரேல் பிரச்சாரம் செய்து வருகிறது.

இப்போதும் ஈரான் சிலபல உபகணரங்களை இடைத்தரகர்களிடம் தான் வாங்கி வருகின்றது. அதையும் ஈரானின் அணு சக்தி முகமை நேரடியாகவே வாங்கி வருகின்றது. இந்த முகமை - Atomic Energy Agency -

அட்டோமிக் எனர்ஜி ஏஜென்சி என அறியப் படுகின்றது.

2024ஆம் ஆண்டில் ஈரானின் இந்த முகமை வாங்கிய அணு ஆலை உபகரணங்களை இடைத் தரகர்கள் வழியாக இஸ்ரேல் விற்பனை செய்திருக்கின்றது. இந்தப் பொருள்களில் வெடிக்கும் பொருள்களை வைத்துக் கொடுத் திருக்கின்றது இஸ்ரேல். இதை ஈரான் கண்டு பிடித்து அழித்திருக்கின்றது.

இந்தத் தகவலை ஈரானின் இணை அமைச்சர் முஹம்மத் ஜாவத் ஷெரீஃப் என்பவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆதாரம் - The Hindu, 15-1-2025 ஈரான் இதைக் கண்டுபிடிக்காமல் விட்டிருந்தால் இஸ்ரேல் ஈரான் மீது இன்னொரு வெற்றியைப் பெற்றதாக அறிவித்திருக்கும்.

**அணு விஞ்ஞானிகள் - இஸ்ரேலின் கொலைகள் :**

ஈரானின் அணு சக்தி பெருக்கத்தைப் பொறுத்துக்கொள்ளாத இஸ்ரேல், ஈரானில் அணு ஆற்றல் விஞ்ஞானிகளைக் குறிவைத்துக் கொலை செய்யத் தொடங்கியது. 2010 ஆண்டில் தொடங்கி 2012 ஆம் ஆண்டுக்குள் 19 ஈரான் அணு ஆற்றல் ஆய்வாளர்களைக் கொலை செய்தது இஸ்ரேல்.

இப்போது சிரியாவை HTS என்ற ஹயாத் தஹ்ரீஃப் அல்ஷாம் என்ற அமைப்பு கைப் பற்றியது. இந்த அமைப்பு இஸ்ரேல், அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகளின் கைப்பாவை.

இந்த அமைப்பு சிரியாவில் பெற்ற, ஆதிக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு டெமாஸ்கஸ், சிரியாவின் கோலான் ஹைட்ஸ் என்ற இடங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இப்படி ஆக்கிரமிப்பை நடத்தி, சிரியாவில் 20 இஸ்ரேலிய இராணுவ நிலையங்களை நிறுவியது. இந்நிலையில் சிரியா முழுமையாக இஸ்ரேலின் கண்காணிப்பின் கீழ்வந்தது.

தன் கட்டுப்பாட்டுக்குள் ஹயாத், தஹ்ரீஃப் அமைப்பும், சிரியாவும் வந்தவுடன், சிரியாவின் இரசாயன ஆலைகளை அழித்தது இஸ்ரேல்.

அதேவேகத்தில் சிரியாவின் இராணுவத் தளங்களையும் அழித்தது.

அடுத்து சிரியாவின் விஞ்ஞானிகளைக் கொலை செய்தது. இந்த விஞ்ஞானிகள் என வருகின்றபோது அதுமிக முக்கியமாகக் குறி வைத்தது அணு ஆற்றல் ஆராய்ச்சியாளர் களைத்தான்.

இப்படி நயந்தும், நல்லுறவு பாராட்டியும் எதிர்த்தும், இஸ்ரேல் செய்ததெல்லாம், இஸ்லாமிய நாடுகள் அல்லது முஸ்லிம் நாடுகள் அணு ஆற்றலைப் பயன்படுத்திக் கூடாது என்பதுதான். இந்த அணு சக்தியை இஸ்லாமிய நாடுகள் மின்சாரம் போன்றவற்றை தயாரிக்கக்கூட பயன்படுத்திடக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றது.




அணு ஆற்றல் நண்பனோ - எதிரியோ எந்த இஸ்லாமிய நாட்டின் கைகளிலிருந்தாலும் அது தனக்கு எதிராகவே போகும் எனக் கருதுகின்றது. இந்த விவகாரத்தில் இஸ்ரேல் தானொரு ஆக்கிரமிப்பு நாடு என்பதை உணருகின்றது. இதனால் இஸ்லாமிய நாடுகளின் கைகளில் கிடைக்கும் அணு ஆற்றல் நிச்சயமாகத் தனக்கு எதிராகத் திரும்பும் என்றும் எண்ணுகின்றது. இதனால் ஆபத்து, ஆபத்து என்ற கூப்பாட்டைப் போட்டுக்கொண்டே இருக்கின்றது.

இந்தப் பின்னணியில் ஈரானின் அணு ஆற்றல் வரலாற்றை இங்கே தருகின்றோம்

**- MGM**




**ஈரானை** அமெரிக்கா தாக்குமா? இப்படியொரு வினா பெரிதாகப் பேசப்பட்டு வருகின்றது.

ஆக்ஸிமோஸ் என்ற செய்தி நிறுவனம், அடிக்கடி இன்றைய நாட்களில் இதுதொடர்பான யூகங்களை வெளியிட்டு வருகின்றது.

இப்போதைய அமெரிக்க அதிபர் : பைடன் ஓர் ஜியோனிஸ்ட், இது அவரை பிரகடனப் படுத்தியது. இவர் 2025 ஜனவரி 20ஆம் நாள் பதவியைத் துறக்கின்றார். இவர் தன்னுடைய ஆலோசகர்களை அழைத்து ஈரானை தாக்கிட திட்டம் தீட்டுகின்றார்.

இப்போது அமெரிக்காவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் டொனால்டு டிரம்ப். இவர்கூட கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிறவெறி அமைப்பைச் சார்ந்தவர். இவர் தான் பதவியில் அமர்ந்தவுடன் ஈரானின் அணு உலைகளைத் தாக்கிடத் திட்டங்களை போட்டு வருகின்றார்.

எந்த நிலையிலும் ஈரான் மீதான தாக்குதல் உறுதி எனப்படுகிறது.

இதற்கு அணு உலைகள் - அணு ஆராய்ச்சிகள், ஆயுதங்கள் இவையெல்லாம் காரணமாகக் காட்டப்படுகின்றன.

இதுகுறித்த ஒரு முன்னோட்டத்தை இங்கே தருகின்றோம். இஃது ஈரானின் அணு ஆயுத வரலாறு...

அமெரிக்கா, தனது ஆதிக்கத்தை அகில மெல்லாம் நிலை நாட்டிட திட்டம் போட்டு செயல்படுகின்றது. இந்தத் திட்டத்திற்கான பணம் அல்ல பெரும் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது.

படையும் களத்தில் நின்று பணியாற்று கின்றது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் 2001இல் ஆப்கானிஸ்தான், 2003இல் ஈராக் என தாக்குதல்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆப்கானிஸ்தானைத் தாக்குவதற்கு, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதைத் காரணம் சொன்னார்கள்.

ஆனால் இன்றளவும் நம்பக்கூடிய அளவில் ஒரு ஆதாரத்தைக்கூட அமெரிக்காவினால் காட்டிட இயலவில்லை.

அப்படியேதும் நம்பக்கூடிய அளவில் ஆதாரத்தைக் காட்டினால் நாங்கள் பின்லேடனையே நீதியின் முன் நிறுத்தத் தயார் என அப்போதைய ஆப்கானிஸ்தான் அரசு (தாலிபன் அரசு) அறிவித்தது.

அமெரிக்கா நம்பிடக்கூடிய அளவில் எந்த ஆதாரத்தையும் அன்று தந்திடவில்லை. இன்றும் தந்திடவில்லை.

இன்று அடுக்கடுக்காய் கிடைக்கும் ஆதாரங்கள், இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்பு ஒரு திட்டமிட்ட செயல் என்பதை நிரூபிக்கின்றன.

அமெரிக்க ஆய்வாளர்களே அமெரிக்காவை நோக்கி கேள்விக்கணைகளைத் தொடுக்க தலைப்பட்டு விட்டார்கள்.

இந்தக் கேள்விகளைத் தவறாமல் விடியல் வெள்ளியில் இடம்பெறச் செய்திருக்கின்றோம்.

9/11 அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களை இடித்தவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிப்பதற்குள் சதாம் ஹுஸைனை தீவிரவாதியென அழைக்கத் தலைபட்டார்கள் அமெரிக்கர்கள்.

அதிசயமான அணு ஆயுதங்கள் ஈராக்கில் உண்டு எனக்கூறி ஈராக்கை ஆக்கிரமித்தார்கள்.

ஆப்கானிஸ்தானிலும் சரி - ஈராக்கிலும் சரி அமெரிக்கர்கள் அத்தனை இயற்கை வளங்களையும் கைப்பற்றினார்கள். அத்தனை இயற்கை எழில்களையும் அழித்தார்கள்.

இந்த இரண்டு நாடுகளிலும் இன்னொன்றையும் தவறாமல் செய்தார்கள். அதுதான் அங்குள்ள இஸ்லாமிய தடங்களையும் தொல்பொருள்களையும் அழித்தார்கள்.

ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் இஸ்லாம் காலாகாலமாக கோலோச்சியது என்பதை எடுத்துக் காட்டும் விதத்திலுள்ள எல்லா வரலாற்று அடையாளங்களையும் அழித்துவிட்டார்கள்.

அந்த இடங்களில் மதுக்கடைகளையும், சினிமா தியேட்டர்கள் என்ற திரையரங்கங் களையும் நிறுவி வருகின்றார்கள்.

அறிவிக்கப்படாத கலாச்சாரப் போர் இந்த இடங்களில் தங்குதடையின்றி தொடுக்கப் பெற்றுத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பெண்கள் தங்களை முழுமையாக மறைத்து வாழ்ந்த நாட்களை மறக்கச் செய்ய முழு அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் இந்த இரண்டு நாடுகளிலும் இருந்த இஸ்லாமிய தடயங்கள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. மக்களது இஸ்லாமிய அடையாளங் களும் மாய்க்கப்பட திட்டங்கள் பல செயல்படுத் தப்பட்டு வருகின்றன. இந்த நாடுகளிலுள்ள இயற்கை வளங்கள் சூயையாடப்படுகின்றன.

அமெரிக்கா அடுத்த இலக்காக ஈரானை நிர்ணயித்துள்ளது.

அங்கேயும் ஆக்கிரமிப்பு ஒன்றை நடத்திடவும், அந்த மக்களின் மத அடையாளங் களை அழிக்கவும், அங்குள்ள இயற்கை வளங்களை சூறையாடவும் திட்டங்களை வகுத்துள்ளது.

அமெரிக்காவின் உலக ஆதிக்க திட்டங்களின்படி, அது ஆக்கிரமிக்க விரும்பும் நாடுகளை எடுத்த எடுப்பிலேயே ஆக்கிரமித்து விடுவதில்லை.

அமெரிக்கா பொதுவாகத் தனது தாக்குதல் களை மூன்று கட்டங்களாக நடத்தும் அவை..

1. பொருளாதாரத் தடை

2. கடுமையான கண்காணிப்பு. அதாவது தான் ஆக்கிரமிக்க விரும்பும் நாடுகளின் உள்ளே என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்கும். அந்த நாடுகளின் உள் கட்டமைப்புகளை சீர்குலைக்க தனது உளவுப்படையை பயன்படுத்துவது.

3. ஆயுத பலத்தையும் படை பலத்தையும் கொண்டு அந்த நாடுகளை ஆக்கிரமிப்பது.

இதைத்தான் அது ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் செய்தது.

ஈராக்கை நீண்ட நாட்களாகப் பொருளாதாரத் தடையின் கீழ் வைத்திருந்ததோடு நில்லாமல், 1991 முதலே ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் குண்டு வீசிவந்தது.

இந்தக் குண்டு வீச்சுகளால் கல்விக் கூடங்கள், கல்லூரிகள், தொழிற்கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள், மருத்துவமனைகள் இவை தரை மட்டமாயின. இப்படி ஈராக் மீதான



போர் கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது.

இந்த வழியேதான் இப்போது ஈரான் மீதும் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது அமெரிக்கா. அதற்காகப் பல பொய்களைக் குற்றச்சாட்டுகளாக ஈரான் மீது சுமத்தி வருகின்றது.

ஈரான் சர்வதேச விதிகளை மீறி அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தி வருவதாக ஒரு பொய்யை அனைத்து ஊடகங்கள் வழியாகவும் பரப்பி வருகின்றது. அதற்காக ஐக்கிய நாடுகள் சபையைத் தன் வயப்படுத்திட தகிடுத்தத்தங்களை செய்து வருகின்றது அமெரிக்கா.

ஐக்கிய நாடுகள் சபையைப் பொறுத்தவரை அமெரிக்கா கடந்த பல ஆண்டுகளாக இப்படிக் கூறி வருகின்றது.

"ஐக்கிய நாடுகள் சபையோ, ஜெனீவா ஒப்பந்தங்களோ இன்றைய நாட்களுக்கு ஒத்துவராது. இன்றைய நாட்கள் தீவிரவாதத்தின் மேல் நாம் தொடுக்கும் போரின் நாட்களாகும்." Fl. Oct. 21. 2005.

ஆனால், அமெரிக்கா, இப்போது ஈரானை தாக்கிடாதாம். காரணம், ஈராக்கில் அதற்கு ஏற்பட்ட இழப்புகள்தாம்.

அடுத்து சிரியா மீது பொருளாதார தடையைக் கொண்டுவர முயற்சிகளைச் செய்து வருகின்றது. அதற்காக அங்கு நடத்த அரசியல் கொலையொன்றைப் பயன்படுத்திட முயற்சி செய்து கொண்டிருக்கின்றது.

இந்த நாடுகளையும், இன்னும் சில நாடுகளையும்தான் அமெரிக்கா "Axis of Evil" தீமைகளின் அச்சு... எனக் கூறி வருகின்றது. இதில் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், கொரியா, சிரியா, கியூபா ஆகிய நாடுகளும் இன்னும் சில நாடுகளும் அடங்கும்.

இப்படி உலகை ஒட்டுமொத்தமாக ஆக்கிரமிக்கும் நீண்ட திட்டம் ஒன்றை அமெரிக்கா தீட்டியுள்ளது. அந்தத் திட்டத்தின் பெயர்தான் "PNAC" Project for New American Century.

அடுத்து நூற்றாண்டிற்கான அமெரிக்க ஏகாதிபத்திய திட்டம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரான்தான். அதற்கு சில நொண்டிக் காரணங்களைக் கண்டு பிடிக்கின்றது.

இந்தத் திட்டத்தைப் பற்றிய விரிவான தகவல்களை விடியல் வெள்ளியில் விரிவாக வெளியிட்டிருக்கின்றோம்.

இதன் மறுபெயர்தான் "The clash of Civilization and the remarking of world order"

கலாச்சாரங்ளின் மோதலும், புதிய உலகின் உருவாக்கமும், இதனைப் பற்றியும் விடியல் வெள்ளியில் விரிவாக விவாதித்துள்ளோம்.

எது எப்படி ஆனாலும் அமெரிக்கா அடுத்து ஈரானைக் குறி வைக்கின்றது. அதற்கு ஈரான் அணு சோதனைகளில் சர்வதேச விதிகளை மீறியதாகக் கூறுகின்றது. இந்தக் குற்றச் சாட்டு எந்த அளவுக்கு உண்மை என்பதை சற்று விளக்கமாகப் பார்ப்போம்...





# ஈரான் அணு சக்தியின் வரலாறு..!

## History of Iran's Nuclear Energy

**1953இல்** அமெரிக்காவின் உளவுத்துறை நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பில் மன்னர்ஷா ஈரானின் ஆட்சியைப் பிடித்தார்.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து அமெரிக்காவின் உளவுத்துறை (CIA - Central Intelligence Agency), சாவக் (SAVAK) என்ற ஈரானின் உளவுத்துறையை உருவாக்கியது.

இந்த சாவக் என்ற ஈரானின் உளவுத்துறை எண்ணற்ற படுகொலைகளைச் செய்தது.

ஈரானிலிருந்த கம்யூனிஸ்ட்டுகளையும், மதச்சார்பற்ற கொள்கையைப் பேசியவர் களையும் கொன்று குவித்தது.

உலகில் அமெரிக்க உளவுத்துறைக்கு (CIA) அடுத்தாற்போல் அதிகமாகப் படுகொலை களைச் செய்வதும் இந்த சாவக் என்ற ஈரான் உளவு நிறுவனம்தான் என்பது வரலாற்றுக் குறிப்பு.

அப்போது ஈன்ஸ் சன் ஹோவர் என்பவர் அமெரிக்காவின் அதிபராக இருந்தார். இவர் ரஷ்யாவுடனான பணிப்போரை (முறைமுகப் போரை) நடத்திக் கொண்டிருந்தனர்.

ஈரானில் மன்னர் ஷா எதிரிகளைப் படுகொலை செய்யும் ஓர் படுகொலை ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தார்.

ஈரான் மன்னர் ஷாவும் அமெரிக்காவின் அதிபர் ஈன்ஸ்சன் ஹோவரும், 1957இல் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள்.

இந்த 1957 ஒப்பந்தத்தின்படிதான் ஈரானுக்கு அணு சக்தி வந்தது. இதனை அமெரிக்கா ஈரான் அமைதி வழி அணுசக்தி ஒப்பந்தம் என்றழைத்தனர். (America - Iran Vivil Nuclear Agreement)

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அணுசக்தி தொடர்பான அனைத்து நுணுக்கங் களையும் ஈரானுக்குக் கற்றுத் தந்தது அமெரிக்கா. அத்தோடு அணுகுண்டு தயாரிக்கும் கருப்பொருளைத் தயாரிக்கும் வழியையும் காட்டிக் கொடுத்தது. (Enriched Uranium and Plutonium with Fissile Isotopes)

மன்னர் ஷாவின் ஆட்சியின்போது இதையெல்லாம் கற்றுக்கொடுத்தது அமெரிக்கா.

‘ஆனால், அந்த மன்னரிடம் நீங்கள் இந்த அணுசக்தி உத்திகளை அணு ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்த மாட்டார்கள்’ என உறுதிமொழி தாருங்கள் என அமெரிக்கா எப்போதும் மன்னர் ஷாவைக் கேட்டதுமில்லை. நிபந்தனை விதித்ததுமில்லை.

அப்போது ஈரானில் ஜனநாயகம் வேண்டு மென்றோ ஜனநாயகம் நிலை நாட்டப் பட்டால்தான் இதுபோன்ற அணு சக்தி உத்திகளைக் கற்றுத் தருவோம் என்றோ அமெரிக்கா நிபந்தனை விதிக்கவில்லை.

உண்மையைச் சொன்னால் ஈரானில் மன்னராட்சியைக் கொண்டு வந்தது அமெரிக்கா! அதை பாதுகாத்தது அமெரிக்கா! பின்னாளில் ஈரான் மக்கள் மன்னராட்சியை ஒழித்தபோது அந்த மன்னருக்கு அடைக்கலம் தந்ததும் அமெரிக்காதான். இவர்கள் அமெரிக்கர்கள் ஜனநாயகத்தின் மீது காட்டும் ஆர்வம் போலியானது என்பதற்கு இஃதோர் பட்டவர்த்தனமான எடுத்துக்காட்டு...

1970களில் அமெரிக்காவில் ஜெரால்டு ஃபோர்ட்டு என்பவர் ஆட்சிக்கு வந்தார். அல்லது குடியரசுத் தலைவரானார்.

இவரது ஆட்சிக் காலத்தில் (8) எட்டு அணு சக்தி உலைகள் ஈரானுக்கு விற்பனை செய்யப் பட்டன. அணு ஆயுத்களைத் தயாரிப்பதற்கு அவசியமான அனைத்தும் அள்ளி வழங்கப் பட்டன.

இத்தனையும் ஈரான் அணுமின் சக்தி தயாரிப்பதற்காகத் தரப்பட்டது என்று யாரும் சொல்லிடமுடியாது. காரணம், ஈரான் இயற்கை வாயு, பெட்ரோலியம் ஆகியவை போதிய அளவுக்கு பெற்ற நாடு. இவற்றிலிருந்து அது தனக்குத் தேவையான எல்லா சக்திகளையும் தயாரித்துக்கொள்ள இயலும்.

ஆனாலும் அமெரிக்கா ஈரானுக்கு அணுசக்தி உத்திகளைக் கற்றுக் கொடுத்தது.

1970களில் கூட ஏன் ஈரானுக்கு அணுகுண்டு தயாரிக்கும் அளவுக்கு அணுசக்தி உத்திகளையும் உலைகளையும் தாரை வார்க்கின்றீர்கள்? என்று யாரும் கேட்டிடவில்லை. அமெரிக்காவுக்கு உள்ளேயும் யாரும் எதிர்க்கவில்லை. அமெரிக் காவுக்கு வெளியேயும் யாரும் எதிர்க்கவில்லை.



**Treaty on the Non-Proliferation of Nuclear Weapons British Foreign Secretary Michael Stewart (third from right) signing the Treaty on the Non-Proliferation of Nuclear Weapons, London, 1968.**

ஈரான் மன்னர்ஷா, தனக்குத் தரப்பட்ட இந்த அணு ஆற்றலைப் பயன்படுத்தி தனது ஆதிக்கத்தை உலகமெங்கும் பரப்பிடுவார். ஒரு வல்லரசாக இல்லாவிட்டாலும் ஒரு வலிமைமிக்க அரசாக மாறி உலகில் ஆதிக்கம் செலுத்தி விடுவார் என்று யாரும் அஞ்சிட வில்லை ஏன்?

மன்னர் ஷா அப்போது அமெரிக்க ஆட்சியாளர்களின் சட்டைப் பைக்குள் இருந்தார். ஈரானின் பெட்ரோலியத்தையும் இயற்கை வாயுவையும் அமெரிக்காவுக்கு அள்ளி வழங்கினார்.

ஆகவே அமெரிக்காவை விஞ்சி ஈரான் போய்விட்டது என்று அமெரிக்கா உறுதியாக நடந்தது. பின்னாளில் அங்கு நடந்த புரட்சியை அமெரிக்கா சற்றும் பார்க்கவில்லை.

மன்னர் ஷா இஸ்ரேலுக்கு எதிராக திரும்புவார் என்ற அச்சம் எள் மூக்கின் முனையளவு அமெரிக்காவுக்கு இருந்திருந்தால் கூட இப்படி அணு சக்தியையும் உக்தியையும் ஈரான் மன்னர் ஷாவுக்குத் தந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் மன்னர் ஷா அமெரிக்காவுக்கு அடிவருடியாக இருந்தார் என்பது மட்டுமல்ல, அவர் இஸ்ரேலுக்கு இணையற்ற நண்பராகவும் இருந்தார்.

இதில் வேதனை என்னவெனில் அன்று ஈரான் மன்னர் ஷாவுக்கு அணு ஆற்றலை வழங்கலாம் என அதிபர் ஜெரால்டு போர்டுக்கு ஆலோசனைக் கூறியவர்களுள் ஒருவர்தாம் இந்த டோனால்டு ரம்ஸ் ஃபீல்டு.

அவர் இன்றுபோல் அன்றும் அமெரிக்க நிர்வாகத்தில் பாதுகாப்புச் செயலாளராக (Security of Defence) இருந்தார். இன்றும் இவரே அமெரிக்க நிர்வாகத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருக்கின்றார். ஆனால் இன்று ஈரானிடம் எந்த அணுசக்தியும் இருக்கக்கூடாது என்று கதறுகின்றார். ஈரான் அமைதியான பணிகளுக்காகக்கூட அணு ஆற்றலைப் பயன்படுத்திடக்கூடாது எனப் பிதற்றுகின்றார், பதறுகின்றார். ஈரான் மீது அனைத்துத் தடைகளையும் கொண்டுவந்திட வேண்டும் என கர்ஜிக்கின்றார். முடிந்தால் ஈரானை தாக்கிட வேண்டும் என தாவுகின்றார். குதிக்கின்றார். இவருக்கு டோனால்டு ரம்ஸ் ஃபீல்டுக்கு பிரிதொரு வரலாற்றுச் சிறப்பும் உண்டு. அது இவர் பின்னாளில் சதாம் ஹுஸைனுக்கும் உற்ற நண்பராய் இருந்தார். ஈரான் மன்னராட்சி ஒழிக்கப்பட்டபோது, இவர் சதாம் ஹுஸைனிடம் ஓடோடி வந்து, ஈரான் மீது போர் தொடுக்கும்படி சதாமைப் பணித்தார். சதாமும் பணிந்தார். சதாம் ஹுஸைனுக்கு அணு ஆயுத்களை தந்து ஈரான் மீது வீசப் பணித்தார்.

'டிக்செனி' இவர் இப்போது அமெரிக்காவின் துணை அதிபர். இவர் அப்போது 1970இல் ஜெரால்டு ஃபோர்டு அமெரிக்காவின் அதிபராக இருக்கும்போது அமெரிக்கப் படைகளின் தலைவராக, தளபதியாக இருந்தார். (Chief of Staffo) இவர் அன்று ஈரான் மன்னர் ஷாவுக்கு அணு ஆயுதங்களை வழங்குவதால் எந்த ஆபத்துமில்லை என அறிவுரை பகர்ந்தவர்தாம். இன்று இவர் ஈரானை தாக்கியே ஆக வேண்டும். அதன் அணு ஆற்றலை அழித்தே ஆக வேண்டும் என முழங்குகின்றார். காரணம் ஈரான் சக்தி பெற்ற நாடாக மாறிவிட்டது. இஸ்லாமிய குடிரயசு என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

டோனால்டு ரம்ஸ் ஃபீல்டு, டிக்செனி, இவர்களைப் போல் இன்று அமெரிக்காவில் அதிகமாக அடிபடும் பெயர் பால் வில்போவிச். இவர் 1970களில் அதாவது அமெரிக்கா ஈரானுக்கு அணு யுக்திகளையும் வழங்கிக் கொண்டிருந்தபோது உயர் பதவி ஒன்றில் இருந்தார். அந்தப் பதவி, அணு ஆயுத சக்தி அமெரிக்காவுக்கு வெளியே பரவி விடாமல் தடுக்கும் பதவிதான் அது.

ஃபால் வில்போ விச் என்ற இவருக்கு பிரிதொரு பொறுப்பும் அப்போதிருந்தது. அது, அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகளிடம் அந்த அணு ஆயுதங்களை அழித்துவிடும்படி அறிவுரையும் ஆலோசனையும் வழங்குவதாகும். இந்த அறிவுரைகள், ஆலோசனைகள், இவற்றின் வழி உலக நாடுகளிடமிருக்கும் அணு ஆயுதங் களைக் குறைக்க வேண்டும் என்று பொருப்பும் சுமத்தப்பட்டிருந்தனர். (Head of Non Proliferation Section of The U.S. Arms Control and Disarnament Agency)

அமெரிக்காவின் ஃபால் வில்போவிச் என்ற ஈரானின் முதல் எதிரியாக ஏற்றம் காணுகின்றார். ஆனால் அன்று ஈரான் மன்னர் ஷாவின் படுக்கையறை நண்பர். இன்று இவர் மன்னராட்சி சர்வாதிகாரம் இவற்றின் முதல் எதிரி என தன்னைக் காட்டிக்கொள்கின்றார். ஆனால் அன்று ஈரான் மன்னரின் ஆட்சியில் உற்ற நண்பராய் அனைத்து சுகத்தையும் அனுபவித்தார்.

இந்தக் கும்பல்தான் (அதாவது ரம்ஸ் ஃபீல்டு, டிக்செனி, ஃபால்வில் போவிச் என்பவர்கள் அடங்கிய கும்பல்தான்) பின்னாளில் ஈராக்கை ஆக்கிரமித்தது. இப்போது ஈரானை ஆக்கிரமிக்க வேண்டும் என்று குதிக்கின்றது. காரணம் ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றனவாம். ஈரானுக்கு அடிப்படை அணு உத்திகளை அன்று வாரி வாரி கேட்காமலேயே வழங்கியவர்கள். இன்று அதையே காரணம் காட்டி போர் தொடுக்க பொருளாதார தடைகளை விதிக்க முன்வந் திருப்பது வேடிக்கையிலும் வேடிக்கை! இத்தனைக்கும் இன்று ஈரானில் ஜனநாயகம் இல்லை என்று இவர்களால் சொல்லிட இயலாது.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும்.

அன்றே அமெரிக்கா அணு ஆயுத பரிசோதனை தடை ஒப்பந்தம் என்றொன்றை அறிமுகப்படுத்தியது. அதனை ஆங்கிலத்தில் நியூக்கிளியர் நான் பெரோலிபெரேசன் டிடீட்டி (Nuclear Non Proliferation Treaty - NPT)என அழைப்பார்கள்.

"இந்த ஒப்பந்தத்தின்படி, உலகின் எந்தப்

புதிய நாடும் அணு ஆயுத பரிசோதனைகளைச் செய்யக்கூடாது. ஏற்கெனவே அணு ஆயுத நாடு என அறிவிக்கப்பட்ட நாடுகளைத் தவிர ஈரான் மன்னர்ஷா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட அப்போது மறுத்தார். ஆனாலும் அவருக்கு அணு சக்தி உத்திகள் தங்கு தடையின்றி கிடைத்தன. அவர் மன்னர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கா கட்டாயப்படுத்திட வில்லை.

இன்றைய ஈரான் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்டும் இன்னுமுள்ள சர்வதேச விதிகளுக்கு உட்பட்டும் தான் இன்றைய ஈரான் அணு சக்தியைப் பயன்படுத்துகின்றது. ஆனாலும் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளைச் சுமத்துவேன்; கண்காணிப்பேன்; போர்த் தொடுப்பேன் என மிரட்டுகின்றது. இதற்காக உலக நாடுகளை ஒன்று திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இதுதான் ஈரானின் அணுசக்தி அணு ஆயுதம் ஆகியவற்றின் குறுகிய வரலாறு. ●

# ஈரான் அணுசக்தி ஒப்பந்தங்களையோ, சர்வ தேசிய விதிகளையோ மீறியதா?

**உலக** மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும். அவர்கள் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும் என்றால், எந்த நாடும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்திடக் கூடாது.

எந்த நாடும் அணு ஆயுதங்களைப் பயன் படுத்திடாமலிருக்க ஒரு வழி காண வேண்டும்.

அந்த வழி இதுதான்.

எந்த நாடும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யாமலிருக்க வேண்டும்.

எந்த நாடும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யாமலிருக்க வேண்டும் என்றால், எந்த நாடும் அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளாமலிருக்க வேண்டும்.

ஆமாம்! ஏற்கெனவே ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அணு ஆயுதங்களை கண்டு பிடித்துக் கைநிறைய வைத்துக் கொண்டிருக்கும் நாடுகளை என்ன செய்வது?

அமெரிக்கா என்ற அடாவடி நாடு உலகில் அணுகுண்டை தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றதே அதற்கு என்ன செய்வது?

இந்த நாடுகள் தங்களிடமிருக்கும் அணுகுண்டுகளையும் அணு ஆயுதங்களையும் அழிக்க வேண்டும்.

இப்போதிருக்கும் அணு ஆயுதங்களை அழித்தபின், அந்த அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆலைகளை அழிக்க வேண்டும்.

ஆலைகளை அழித்தபின் அவை அணு ஆயுதங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைக் கைவிட வேண்டும்.

இத்தனையும் செய்தால் உலக மக்கள் அணு ஆயுத அபாயங்களை மறந்து நிம்மதியாக வாழ்வார்கள்.

ஆமாம்! அணுசக்தி ஒரு சிறந்த விஞ்ஞான கண்டுபிடிப்பாயிற்றே! அதைப்பயன்படுத்தாமல் அப்படியே மண்மூடிப்போகச் செய்வதா?

ஆம்! அணுசக்தி ஒரு சிறந்த விஞ்ஞான கண்டுபிடிப்புத்தான். அதனை நாம் ஆக்கப்பூர்வமான வழிகளில் மனித இனத்திற்கு நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தத்தான் வேண்டும்.

அதற்கான அவகாசமும் அனுமதியும் உலக நாடுகளுக்கு வேண்டும்.

சில வழிதவறிய - நேர்மையற்ற நாடுகள் நாங்கள் ஆக்கப்பூர்வமானப் பணிகளுக்குத்தான் அணு ஆற்றலைப் பயன்படுத்துகின்றோம் என்று கூறிக்கொண்டு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்தால் என்ன செய்வது?

ஆமாம் அந்த நாடுகளில் நடக்கும் அணுசக்தி ஆய்வுகளைக் கண்காணிக்க வேண்டும். அணுசக்தி ஆலைகளை அந்த நாடுகள் ஏற்படுத்தினால் அவற்றில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.



சரி, இவற்றையெல்லாம் யார் பார்ப்பது, கண்காணிப்பது? உலக நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட ஓர் அவை அதைச் செய்ய வேண்டும்.

இப்படியொரு பிரதிநிதிகளின் அவையை உருவாக்கிடும் பட்சத்தில் உலகநாடுகள் அந்தப் பிரதிநிதிகளின் அவையோடு ஒத்துழைக்க வேண்டும்.

இப்படி ஏற்படுத்தப்பட்ட அவையைத்தான் (IAEA : International Atomic Energy Agency) சர்வதேச அணுசக்தி ஏஜென்சி என அழைக் கின்றார்கள்.

இந்த அவை ஐக்கிய நாடுகளின் சபையின் கீழ் இயங்குகின்றது.

இந்த அமைப்பு 1957இல் தொடங்கப் பெற்றது.

இதன் இலட்சிய முழக்கம் இப்படி அமைந்தது. 'Atoms for Peace' அமைதிக்கு அணுசக்திகள், ஆஸ்திரியாவில் உள்ள வியன் னாவில் இதன் தலைமையகம் இருக்கின்றது.

இதில் 2200 விஞ்ஞானிகள் வேலை செய்கின்றார்கள். இவர்கள் உலகிலுள்ள 90 நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

இந்த அமைப்பின் இப்போதைய இயக்குநர் (Director General) முஹம்மத் அல் பருண்டை! இவருக்கு ஆறு துணை இயக்குநர்கள் உதவி செய்கின்றார்கள். 35 பேரைக் கொண்ட ஆளுநர் வாரியம் ஒன்று இதன் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கின்றது.

இதில் வேலை செய்யும் விஞ்ஞானிகளின் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று ஆங்காங்கு நடக்கும், அணு சக்தி ஆய்வுகளை கண்காணித்து, அவ்வப்போது ஐக்கிய நாடுகளின் அவைக்கு அறிக்கைத் தருகின்றார்கள்.

ஏதாவது ஒரு நாடு அமைதியான வழிகளல்லாமல், அல்லது ஆக்கப்பூர்வமான பணிகளுக்கல்லாமல், அகிலத்தை அழிக்கும் அணு அயுதங்களைத் தயாரிக்க முன்வந்தால் அதன்மீது ஐக்கிய நாடுகளின் அவை நடவடிக்கை எடுக்கும். அதைத் தடுக்கும். அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும், இதர தண்டனைகளையும் திணிக்கும்.

சரி, ஏற்கெனவே அணு ஆயுதங்களைக் கண்டுபிடித்து கைநிறைய வைத்திருக்கும் நாடுகளை எப்படித் தடுப்பது. அவற்றை எப்படி அழிப்பது. உலக நாடுகள் இதுவரை இதற்கோர் வழியைக் கண்டுபிடிக்கவில்லை. இந்த அணு அயுதங்களை வைத்திருப்பதிலும் அதனை அப்பாவிகள் மீது பயன்படுத்திடுவதிலும் முன்னணியில் நிற்கும் நாடு அமெரிக்கா!

அதனைத் தட்டிக் கேட்கும் திராணியும் தெம்பும் எந்த நாட்டுக்குமில்லை. அதனால் அமெரிக்கா அணு ஆயுதங்கள் தயாரிப்பை அதிகரித்தக்கொண்டே செல்கின்றது.

அமெரிக்காவை காரணம் காட்டி ரஷ்யா, சைனா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் அணு அயுதங்களை உற்பத்திச் செய்துகொண்டே இருக்கின்றன.

ஆனால் உலக நாடுகளெல்லாம் இணைந்து ஒரு கொடுங்கோண்மை ஒப்பந்தத்தை கொண்டு வந்தன. அந்த ஒப்பந்தத்தின் பெயர்தான் Nuclear Non Protiferation treaty இதனை சுருக்கமாக அணு ஆயுத பரிசோதனை தடுப்பு ஒப்பந்தம் எனக் கூறலாம்.

இந்த ஒப்பந்தம் புதிதாக எந்த நாடும் அணு ஆயுத பரிசோதனை செய்வதைத் தடுத்தது. ஆனால் எற்கெனவே அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகளைக் கட்டுப்படுத்த வில்லை.

இதனால் உலகிலுள்ள பல நாடுகள் இந்த ஒப்பந்தத்தை நிராகரித்தன. கையெழுத்துப் போட்டிட மறுத்தன. இப்படி மறுத்த நாடுகளில் நமது இந்தியாவும் ஒன்று. இன்று நமது நாடு ஓரளவுக்காவது உலக அரங்கில் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்றது என்றால் அதற்குக் காரணம் நாம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடாததுதான்.

மட்டுமல்ல இந்த ஒப்பந்தம் அநியாயமானது. வளரும் நாடுகளின் வளர்ச்சியைத் தடுப்பது. எதை வேண்டுமானாலும் செய்திட வல்லரசு

களுக்கு உத்திரவாதம் தருவது என்று ஓங்கி குரல் கொடுத்த நாடு நம் நாடு. அமெரிக்கர்கள் கொடுத்த நெருக்கடிகளைத் தாண்டி வளர்ந்த நாடு நமது நாடு.

ஆனால் இந்த ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்தப் போட்டது. தனது அணுசக்தி ஆராய்ச்சிகளை ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவந்தது.

எப்போது, ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பு ஏஜென்சி அல்லது அமைப்பான "IQEA" சோதனை செய்ய வேண்டும் எனக் கேட்டாலும் தனது அணுசக்தி அய்வு மையங் களையும், ஆலைகளையும் திறந்து காட்டியது.

இத்தோடு நிற்கவில்லை ஈரான், பெருந் தன்மையோடும் நடந்து கொண்டது. அதாவது,

தனக்கிருக்கும் அணு அறிவை அகிலத்தை அழிக்கும் ஆயுதங்களைத் தயாரிக்க பயன்படுத்த மாட்டோம் என்பதை உறுதி செய்ய, தான் அணுமின் தயாரிக்கும் ஆலைகளில் பிரிட்டன்! ஜெர்மனி அல்லது உலகிலுள்ள நாடுகள் வேண்டுமானால் கூட்டாளிகளாகச் சேர்ந்து கொள்ளலாம் எனக் கூறிற்று.

இப்படி உலகில், அணு சக்தியைப் பயன்படுத்திடும் பணிகளில் உலகின் இதர நாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்கள் பங்கேற்கலாம் என அழைப்பு விடுத்த ஒரே நாடு இன்றைய நாட்களில் ஈரான்தான்.

ஈரான் இப்படி அழைப்பு விடுப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஈரானின் வேகமான வளர்சிக்கு அதிகமான மின்சாரம் தேவைப்படுகின்றது. அதனை தயாரிக்க அணுசக்தி பெரியளவில் பயன்படும். இதனால் அது உலகில் எந்த நாட்டோடு இணைந்தும் (அல்லது தனியார் நிறுவனத்தோடும் இணைந்தும்) இதை சாதிக்க விரும்புகின்றது. இதை அது செய்து சாதித்தால் அது வளர்ந்த நாடுகளில் ஒன்றாக மாறும்.

இஃது மட்டுமல்ல, ரஷ்யா, சைனா, ஈரான் ஆகிய நாடுகள் இணைந்து Asian Energy Security Grid அதாவது ஆசிய ஆற்றல் பாதுகாப்பு (மின்சாரம் முதலாய சக்திகள்) பிணைப்பு ஒன்றை ஏற்படுத்திட இருக்கின்றார்கள்.

இந்தக் கூட்டு முயற்சியின் நோக்கம் அல்லது பிணைப்பின் நோக்கம் ஆசிய நாடுகள் தங்களுக்கு வேண்டிய மின்சாரம் இன்னும் இதுபோன்ற சக்திகளைப் போதிய அளவுக்கு (Power/Energy) தயாரித்துக் கொள்வதாகும்.

இதன்மூலம் உலகில் கிடைக்கும் சக்திகளின் மேல் மேலை நாடுகள், குறிப்பாக அமெரிக்கா செலுத்தி வரும் ஆதிக்கத்தை உடைக்க திட்டமிட்டுள்ள அமெரிக்காவின் ஆதிக்கத்தை உடைப்பதோடு ஆசியாவில் ஓர் தொழிற்புரட்சி ஏற்படவும் அது வழிவகுக்கும்.

இத்தனைக்கும் ஈரான் மிகவும் முக்கிய மானது. ஈரான் இல்லை என்றால் இந்த எனர்ஜி கிரிட் - பிணைப்பு இல்லாமலாகிவிடும் (Fl.21.9.2005)

இதனை நன்றாக அறிந்த அமெரிக்காவும் இஸ்ரேலும், ஈரானை சீர்குலைத்தாக வேண்டும் என எண்ணுகின்றனர்.

இதனால் ஈரான் மீது இல்லாத பொல்லாத பொய்களையெல்லாம் கட்டி விடுகின்றன. உலக நாடுகளை ஈரானுக்கு எதிராகத் திருப்பிட முயற்சி செய்கின்றன.

அத்தோடு இஸ்ரேலுக்கு இப்போது இருக்கும் ஒரே வலுவான எதிரி ஈரானும், சிரியாவும்தான் என்பது இஸ்ரேலின் கணிப்பு.

ஏனெனில், ஈராக் எழுந்திட இயலாமல் ஆகிவிட்டது. எகிப்தை நடுவுநிலை நாடாக மாற்றியாகி விட்டது. அதனால் ஈரான் வலுப்பெற்று விடக்கூடாது என இஸ்ரேல் விரும்புகின்றது.

ஈரானை நசுக்கும்படி தொடர்ந்து அமெரிக்காவுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றது இஸ்ரேல்.

இஸ்ரேல் அணு ஆயுதங்களை நிறையவே வைத்திருக்கின்றது. இதனை மனத்தில் வைத்துக்கொண்டு ஈரான் ஒரு கோரிக்கையை எப்போதும் முன் வைத்து வருகின்றது. அஃது,

கிழக்காசிய நாடுகள் எவற்றிலும் அணு ஆயுதமில்லை என்றொரு Nuclear Free Zone ஐ அணு ஆயுதமற்ற மண்டலத்தை உருவாக்கிட வேண்டும் என்று கூறி வருகின்றது. இதுவும் இஸ்ரேலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றது. ஏனெனில் இஸ்ரேலும் இந்த வட்டத்திற்குள் வருகின்றது.

ஈரான் இதுவரைதான் அணு ஆயுதங்கள் எதையும் தயாரிக்கவில்லை என்பதை உறுதி செய்து வருகின்றது.

அதற்காக எத்தனை குழுக்கள் வேண்டு மானாலும் வந்து ஈரானை சோதனையிடலாம் என்றும் அறைகூவி அழைக்கின்றது.

ஆனால் அமெரிக்கா ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கின்றது எனக் கூறி பொருளாதார தடைகளை விதிக்க வருகின்றது. ஈரான் மீதும் எந்தக் காரணமுமின்றி லிபியா மீதும் பொருளாதாரத் தடைகளை விதிப்பதற் காக ஏற்படுத்தப்பட்ட அல்லது இயற்றப்பட்ட சட்டமே "Iran Libiya Sanctions Act" ஈரான் லிபியா பொருளாதார தடைச் சட்டம்.

ஈரான் அணுசக்தி ஆராய்ச்சி எதையும் மேற்கொள்ளக்கூடாது. அதற்கு வேண்டிய அடிப்படை அணுசக்தி பொருள்களை E.U. 3 என்ற நாடுகள் தரும் என்றொரு ஒப்பந்தம் E.U. 3 நாடுகளுக்கும் ஈரானுக்குமிடையில் பாரிசில் நவம்பர்-24,2024இல் கையெழுத்தானது.

E.U. 3 நாடுகள் எனப்படுபவை பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளாகும். ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட இந்த மூன்று நாடுகளுமே தாங்கள் தந்த வாக்குறுதியை மீறின.

இதனால் ஈரான் தானாகவே முன்வந்து மூடிய அணுசக்தி ஆலை ஒன்றை மீண்டும் திறக்க வேண்டியக் கட்டாயத்திற்கு ஆளானது.

உடனேயே அமெரிக்காவும் அதற்குப் பக்கத்துணையாக வந்த நாடுகளும் ஈரான் அத்துமீறி மீண்டும் அணு ஆயுத ஆலை ஒன்றை திறந்துவிட்டதாக ஓலமிட்டன.

ஈரான் நான் எந்த சர்வதேச விதிகளையும் மீறிடவில்லை. நாங்களாகவே மூடிய அணுசக்தி நிலையத்தைத்தான் திறந்தோம் என்று எவ்வளவோ கூறியும், உலக நாடுகள் செவிசாய்க்கவில்லை.

இப்படி அமெரிக்கா கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும்போதே ஐ.நா.வின் ஆய்வுக்குழு தலைவர் மஹ்மூத் அல் பரண்டி இப்படி அறிக்கை விட்டார்.

"ஈரானிலுள்ள எல்லா அணுசக்தி நிலையங் களையும் ஆய்வு செய்தோம், அணு சக்தி




கச்சாப் பொருள்கள், பக்குவப்படுத்தப்பட்ட பொருள்கள், அனைத்தும் அய்வுக்கு உட்படுத் தினோம். எந்த அணுசக்தி நிலையமும், எந்த கச்சாப் பொருளும் தடை செய்யப்பட்ட எந்த நடவடிக்கைகளும் பயன்படுத்தப்படவில்லை"

இப்படி சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தலைவர் அறிவித்ததும் அவர் ஈரானின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துவிட்டார் என்றொரு பிரச்சாரத்தை அமெரிக்கா கட்டவிழ்த்துவிட்டது.

இந்தப் பிரச்சாரத்தைக் கண்டு சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தலைவர் அதிர்ந்துபோனார்.

ஏனெனில் அவருடைய பதவிக்காலம் இந்த வருடத்தோடு முடிவடைகின்றது.

அவர் மீண்டும் அதே பதவியில் நீடிக்க விரும்புகின்றார். இதனால் அவர் அமெரிக்காவுக்கு பணிய தொடங்கிவிட்டார்.

உடனேயே ஈரான் அண்மையில் ஓர் அணு ஆலையைத் தொடங்கி இருக்கின்றது. அது தொடர்பான எந்தத் தகவலையும் தரவில்லை என அறிக்கைவிட்டார்.

ஈரான்தான் ஒரு அணு சக்தி நிலையத்தை தொடங்கியது உண்மைதான். ஆனால் அது 2014இல் செயல்படத் தொடங்கும்.

இதுவரைக்கும் ஒத்துக்கொள்ளப்பட்ட விதிகளின்படி ஒரு அணுசக்தி ஆலை செயல்படுத்துவதற்கு ஆறுமாதங்களுக்கு முன் சர்வதேச ஏஜென்சிக்குத் தகவல் தந்தால் போதும்.

இந்த விதிகளின்படி 2014இல் செயல்பட இருக்கும் ஓர் அணு ஆலையைப் பற்றி

இப்போதே தகவல் தந்திடத் தேவையில்லை என்று கூறியுள்ளது.

உண்மையில் இதுவரை ஒத்துக்கொண்டுள்ள விதிகள் ஒப்பந்தங்கள் இவற்றின் படி ஆறு மாதங்களுக்கு முன் இந்தத் தகவல் தந்தால் போதும்.

ஆனால் அமெரிக்கா ஏதேனும் பொய்க் காரணங்களைச் சொல்லி உலக நாடுகளை ஈரான்மீது திருப்பிட முயற்சிகள் செய்து வருகின்றது.


எப்படியும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதலோடு ஏற்கெனவே இருக்கும் பொருளாதாரத் தடைகளை விஞ்சும் மாபெரும் பொருளாதார தடையொன்றை விதிக்க முயற்சி செய்து வருகின்றது.


இந்தப் பொருளாதாரத் தடைகள்தாம் அமெரிக்கா தான் அழிக்க நினைக்கும் நாடுகளின்மேல் பிரயோகிக்கும் முதல் ஆயுதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கான முதல் அடியையும் எடுத்து வைத்துவிட்டது. ஈரானின் அணு சக்தி செயல்பாடுகளில் ஐ.நா. சபை தலையிட வேண்டும் என வற்புறுத்தி வருகின்றது.


இதற்காக முதன்முதலில் இந்த விவாகரத்தை "IAEA" என்ற ஐ.நா. சபையின் அணுசக்தி ஆய்வு ஏஜென்சியிடம் ஓட்டுக்கு விட வேண்டும். அதில் இந்த ஏஜென்சியிடமிருந்து இந்த விவகாரத்தை ஐ.நா.சபையின் பாதுகாப்புக் குழுவுக்கு மாற்றிட வேண்டுமா? வேண்டாமா? என்பதை முடிவு செய்ய வேண்டும் எனக் கூறியது. ஓட்டுக்கும் விட்டது. முதல் சுற்றில் வெற்றியும் பெற்றுவிட்டது.


## இப்போது பரபரப்பான விற்பனை



# கிறிஸ்தவமும்! இஸ்லாமும்!!



**பரலோகத்திலிருக்கிற** என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. மத்தேயு 7:21

இந்த வசனத்தில் இயேசுவே தெளிவாக சொல்கிறார் என்னை கடவுளே என்று அழைக்காதீர்கள் என்று. அதன் பின்வரும் வசனங்களில் மறுமையில் உங்களை நிராகரித்து விடுவேன் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

அப்படி என்றால் இயேசு யார்? இதோ திருக்குரான் கூறுகிறது.

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள்; நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸா மஸீஹ் அல்லாஹ் வின் தூதர் தான்; இன்னும் ("குன்" ஆகுக என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார்; அதை அவன் மர்யமின்பால் போட்டான்; (எனவே) அவரும் அவனிடமிருந்து (வந்த) ஓர் ஆன்மா தான்; ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொள்ளுங்கள்; இன்னும், (வணக்கத்திற்குரிய இறைவன்) மூன்று என்று கூறாதீர்கள் - (இப்படிக் கூறுவதை விட்டு) விலகிக் கொள்ளுங்கள்; (இது) உங்களுக்கு நன்மையாகும் - ஏனெனில் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன் தான்; அவனுக்கு எவரும் சந்ததியாக இருப்பதிலிருந்து அவன் தூய்மையானவன். வானங்களிலும்; பூமியிலும் இருப்பவையெல்லாம் அவனுக்கே சொந்தம். (காரியங்கள் அனைத்துக்கும்) பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.

(அல்குர்ஆன் : 4:171)

இதோ பைபிளும் சொல்கிறது.

அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து எனப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். யோவான் 4:25

அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார். யோவான் 4:26

இதுபோல பல இடங்களில் தான் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதை சொல்கிறார். அதுவும் இஸ்ரவேலருக்கு மட்டுமே அனுப்பப் பட்டவர் என்று.

இதோ குரானில்

மேலும், மர்யமின் குமாரர் ஈஸா: "இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும்; எனக்குப் பின்னர் வரவிருக்கும் "அஹமது" என்னும் பெயருடைய தூதரைப் பற்றி நன்மாராயம் கூறுபவனாகவும் இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்" என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) எனினும், அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளை அவர் கொண்டு வந்த போது, அவர்கள் "இது தெளிவான சூனியமாகும்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் : 61:6)

இதோ பைபிளில்

அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு



அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார். மத்தேயு 15:24

இவ்வளவு தெளிவாக இருந்தும் மற்ற சமுதாய மக்களுக்கும் அவர் உரித்தானவர் என நம்ப வைக்கப் படுகிறது.

இயேசுவை கடவுளாக சொல்லப்படும் காரணங்களில் ஒன்று. அவரது பிறப்பு. இயேசுவின் படைப்பு அவரையும் அனைத்தையும் படைத்த கடவுளின் அற்புதம். இதை குரானில் இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப் பின் “குன்” (ஆகுக) எனக் கூறினான்; அவர் (மனிதர்) ஆகிவிட்டார். (அல்குர்ஆன் : 3:59).

தான் விரும்பிய வண்ணம் எப்படி வேண்டு மானாலும் படைத்தல் கடவுளுக்கு எளிது.

அடுத்ததாக அவர் நமது பாவங்களுக்காக சிலுவையில் இறந்தார் என்பது. ஆதம் (அலை) அவர்களின் பாவத்தை அவர் பூமியில் வாழ்ந்த காலத்திலேயே இறைவன் மன்னித்து விட்டான். ஆகவே அந்த பாவம் எந்த மனிதரையும் தொடராது. வாதத்திற்காக ஒருவேளை தொடர்வதாக வைத்துக் கொண்டால் அது ஒருவரை கொல்வதால் எப்படி போகும்? அப்படி என்றால் இயேசுவுடன் சிலுவையில் கொல்லப்பட்டவர்களும் கடவுளா?. கடவுளை கொல்ல முடியுமா? உண்மையில் நடந்தது என்னவென்று இறைவன் குரானில் கூறுகிறான்.

(ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள்; அல்லாஹ்வும் சதி செய்தான்; தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான். (அல்குர்ஆன் : 3:55)

“ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்; நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன்; மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன்; பின்னர் உங்களுடைய திரும்புதல் என்னிடமே இருக்கிறது; (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்” என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நினைவு கூர்வீராக)!

(அல்குர்ஆன்: 3:55)

பிறப்பவரும் இறப்பவரும் கடவுளாக முடியாது. இதோ இறைவன் கூறுகின்றான்.

(நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. (அல்குர்ஆன் : 112:1)

அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். (அல்குர்ஆன் : 112:2)

அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை.

(அல்குர்ஆன் : 112:3)

அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (அல்குர்ஆன் : 112:4)

அன்பார்ந்த கிருஸ்தவ சகோதர சகோதரிகளே நம் அனைவருக்கும் பொதுவான விஷயம் ஒன்று உண்டு அது ஒரு கடவுள் மட்டுமே என்பது. அதன் பக்கம் நாம் விரைவோம்.

(நபியே! அவர்களை நோக்கி) கூறுவீராக: ‘‘வேதத்தை உடையவர்களே! நமக்கும் உங்களுக்கும் ஒரு சமத்துவமான விஷயத்தின் பக்கம் வருவீர்களாக! (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கமாட்டோம். நாம் அவனுக்கு எதையும் இணையாக்கமாட்டோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வைத் தவிர எவரையும் இறைவனாக எடுத்துக் கொள்ளமாட்டோம்” (என்று கூறுங்கள். நம்பிக்கையாளர்களே! இதையும்) அவர்கள் புறக்கணித்தால் “நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் (அவன் ஒருவனுக்கே வழிப்பட்ட வர்கள்) என்று நீங்கள் சாட்சி கூறுங்கள்!’’ என்று நீங்கள் கூறிவிடுங்கள். (அல்குர்ஆன் : 3:64)

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்.
தமிழ்நாடு.

# தாடி வைத்தால் தண்டனையா? சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு..!



**கடந்த** 2018 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களிடையே 1 மாதம் விடுப்பு எடுத்துக் கொண்டு... மக்கா & மதீனா நகர்களுக்கு புனிதப்பயணம் மேற்கொண்டார்.

2018 ஆம் ஆண்டு டிசம்பரில் புனித யாத்திரை முடித்துவிட்டு திரும்பிய பிறகு, காலில் ஏற்பட்ட காயம் ஏற்படுத்திய தொற்று வலி காரணமாக, மேலதிகாரியிடம் சென்று விடுப்பை நீட்டிக்கக் கோரினார்.

ஆனால், உதவி காவல் ஆணையர் அவரது விடுப்பை நீட்டிக்க மறுத்து, அதற்கு பதிலாக அவரது முகத்தில் வளர்ந்து இருந்த தாடி குறித்து விசாரிக்கத் தொடங்கினார்.

காவலர் தம் தாடியை நீக்க மறுத்து விட்டதால்...

2019 ஆம் ஆண்டின் துவக்கத்தில், துணை போலீஸ் கமிஷனர் (டிசிபி) அவரது தாடிக்கு முறையான விளக்கம் கோரினார்.

இதையடுத்து, கான்ஸ்டபிள் அப்துல் காதர் இப்ராஹிம் மீது... காவல்துறையால் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஒன்று தாடி வைத்ததற்காகவும், மற்றது... 1 மாத விடுப்புக்குப் பிறகு மீண்டும் பணியில் சேராததற்காகவும்..!

இதுகுறித்து... சமூக வலைத்தளத்தில் மிகவும் வருத்தப்பட்டு... தம் மீதான வழக்குகள் குறித்து காவலர் வீடியோ வெளியிட்டார்.

உடனடியாக அப்போதைய... டிஜிபி சைலேந்திர பாபு... இவரை பணி இடை நீக்கம் செய்து 2 ஆண்டுகளுக்கு உரிய ஊதிய உயர்வுத் தொகையை நிறுத்தி வைத்தார்.

இதனை எதிர்த்து காவலர் அப்துல் காதர் இப்ராஹிம், மதுரை ஹைக்கோர்ட்டில்... 2019 ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்தார். பிறகு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்

ஆக... இவ்வளவும் நடந்தது... பாஜக கூட்டணியில் இருந்த அதிமுக ஆட்சியில்.

அந்த வழக்கு... மதுரை உயர்நீதிமன்ற கிளையில்... நீதியரசி விக்டோரியா கௌரி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இந்த விசாரணை சுமார் 5 ஆண்டுகள் நடக்க... அதில்,

காவலர் அப்துல் காதர் இப்ராஹிம் தரப்பு வாதங்களையும் தமிழ்நாடு காவல்துறை தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்...

இறுதியாக...

“இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றும் இஸ்லாமியர்கள் தம் வாழ்க்கை முழுவதும் தாடி வைத்திருப்பது வழக்கம். பல மதங்கள், இனங்களை கொண்ட இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே நமது சிறப்பு” என்று காவல்துறைக்கு படிப்பினைகள் கூறிவிட்டு...

“தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் முஸ்லிம் காவலர் தாடி வைக்க தடையில்லை. அவர்கள் நேர்த்தியாக தாடி வைத்து கொள்ள அனுமதி உண்டு. எப்படியெனில், “1957 மதராஸ் காவலர்கள் உரிமை” சட்டப்படி, சிறுபான்மை சமூகத்தினர் அவர்களுக்குண்டான மத உரிமைகளை பேணிக்கொள்ள வழியிருக்கிறது” என்று கூறி...

காவலர் இப்ராஹீம் தரப்பு வாதங்களை சரியென ஏற்ற நீதியரசி விக்டோரியா கௌரி அவர்கள்... காவலரின் பணி நீக்கம் மற்றும் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்ட ஆணைகளை ரத்து செய்து... காவல்துறைக்கு அதிரடியாக உத்தரவிட்டார்..!

காவல்துறையில் பணிபுரியும் முஸ்லிம் அதிகாரிகளுக்கும் இன்னபிற அரசு அலுவலர் களுக்கும் இருந்த தாடி வைக்கும் உரிமையை எடுத்துக்கூறி அதனை கடைபிடித்துக்கொள்ள உத்தரவிட்டு... இப்படியொரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை கடந்த வருடம் 2024 ஜூலை 13ந்தேதி... தனி நீதியரசி விக்டோரியா கௌரி அவர்கள் அளித்து... காவலர் இப்ராஹிம் வழக்கினை முடித்து வைத்துள்ளார்.

ஆனால்...

இதோடு இப்பிரச்சினையை விடாத தமிழ்நாடு காவல்துறையும்... தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும்... இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளனர்.

சமூகநீதி ஆட்சி என்று பெருமை பேசும்...

திமுக ஆட்சியில்தான் இந்த அவலம் நடந்துள்ளது.

அரசுக்கு தெரியாமலே... இவர்கள் மேல்முறையீடு செய்துள்ளனர் என்றால்... அது மிகப்பெரிய வெட்கக்கேடு.

இப்போது என்ன ஆயிற்று...?!

தாடிக்கு எதிரான தமிழ்நாடு அரசின் மேல் முறையீட்டு மனு தள்ளுபடி.... என்று மேலும் அசிங்கப்பட்டு நிற்கிறது தமிழ்நாடு அரசு..!

அந்த காவலர்... 2019-ல் வீடியோ வெளி யிட்டது குறித்து அது ஒரு பெரிய குற்றம் போல கூறி... 'அதனால் பணியில் மீண்டும் சேர்க்க முடியாது' என்று வாதாடி இருப்பார்கள் போலும்.

இதற்குத்தான் நெத்தியடி கேள்வி ஒன்றை காவல்துறையை நோக்கி ஜட்ஜ் கேட்டு... குட்டு வைத்துள்ளார். (பார்க்க செய்தியில் கடைசி பகுதி).

இப்போது நம்முன் எழும் கேள்விகள்...

தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் இன்னும் திமுகவின் கட்டுப்பாட்டில் வரவில்லையா...

அல்லது...


அதிமுக - பாஜகவின் கட்டுப்பாட்டில்தான் தமிழ்நாடு அரசின் காவல்துறை இப்போதும் உள்ளதா..?!

எத்தனை எத்தனை கொடிய குற்றங்கள் செய்த காவலரை எல்லாம் அதிக பட்சம் தண்ணி இல்லா காட்டுக்கும்... ஆயுத படைக்கும் டிரான்ஸ்ஃபர் அல்லது சஸ்பெண்ட் மட்டுமே செய்யும் காவல்துறை... தாடி வைத்ததுக்கு எல்லாம் டிஸ்மிஸ் செய்கிறது என்றால்...

ஹை கோர்ட்டு தீர்ப்புக்கு பிறகும்... அவரின் வீடியோவுக்காக... மேல்முறையீடு செய்கிறது என்றால்...

மிக வன்மையான கண்டனங்கள்..!

Mohamed Ashik அவர்களின்
முகநூல் பதிவிலிருந்து



# அண்ணாமலை விதைத்துள்ள கலவர விதைகளில் சில துளிகள்...



## இவன் காமெடி பீஸ் அல்ல கலவரம் செய்ய விதை தூவும் ஓர் குற்றவாளி!

**தமிழ்நாட்டில்** பணிபுரியும் பீஹாரி தொழி லாளர்கள் தமிழர்களால் தாக்கப்படுகிறார்கள் என்ற காணொளிகளை தனது சமூகவலைத்தள பக்கத்தில் பகிர்ந்தார். அது பொய் என்று தமிழ்நாடு அரசும் தேஜஸ்வி யாதவும் நிரூபித்தார்கள்.

ஒரு ராணுவ வீரரின் மனைவியை பலரும் சேர்ந்து தாக்கினார்கள் என்று காணொளியை பரப்பினார். அது பொய் என்று நிரூபிக்கப் பட்டது.

மைகேல்பட்டி மாணவியின் காணொளியை பரப்பி மதமாற்றத்தினால் அவள் தற்கொலைக்கு முயன்றாள் என்றார். சித்தி கொடுமையால் தற்கொலைக்கு முயன்றாள் என்று நிரூபிக்கப் பட்டது.

விலை உயர்ந்த ரபால் கை கடிகாரத்தை கட்டிக்கொண்டு பத்திரிகையாளர்களை சந்தித்தார். அந்த கடிகாரத்தின் விலையை பற்றி கேள்வி எழுந்தவுடன், கைகளால் எழுதப்பட்ட ஒரு invoice-ஐ காட்டி இதுதான் அந்த கடிகாரத்தின் விலை என்று மக்களின் காதுகளில் பூ சுற்ற நினைத்தார்.

மருதமலை கோவிலில் 1962 வரை மின்சாரம் வராததிற்கு திமுகதான் காரணம் என்றார். திமுக ஆட்சிக்கு வந்ததே 1967ல் தான் என்பது கூட தெரியாமல்.

1956 மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நிகழ்ச்சியில் நாத்திகம் பேசியதால் முத்து ராமலிங்க தேவரின் கோவத்திற்கு பயந்து அறிஞர் அண்ணா மன்னிப்பு கேட்டார் என்ற செய்தி ஹிந்து நாளிதழில் வந்தது என்றார். அடுத்த நாளே அப்படி ஒரு செய்தியை தாங்கள் வெளியிடவேயில்லை என்று ஹிந்து நாளிதலே மறுத்தது.

TR பாலு 100 ஆண்டு கால பழமையான கோவில்களை இடித்ததாக கூறினார் என்று சொன்னார். TR பாலு GST சாலை விரிவாக் கத்தின் பொழுது இடித்த கோவில்களுக்கு பதிலாக பெரிய கோவிலாக கட்டிக்கொடுத்தேன் என்று தான் பேசி இருந்தார்.

2022ல் காமன்வெல்த் போட்டியில் இந்தியா வெல்வதற்கு முன்பு வரை அது ஒரு கனவாகவே இருந்து வந்தது என்றார். அதற்கு முன்னர் 2010ல் இந்தியா 101 பதக்கங்களை வென்ற சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை.

EWS இடஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்ட வர்களும் பயன்பெறலாம் என்றார். EWS



இடஒதுக்கீடு பொது பிரிவு என்னும் முன்னேறிய ஜாதியினருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு உளவுத்துறையில் 60% மேற்பட்டவர்கள் மாற்று மதத்தினர் என்றார். வெறும் 18% மட்டுமே மாற்று மதத்தினை சேர்ந்தவர்கள்.

ஜல் ஜீவன் திட்டத்தை தமிழ்நாடு 50% கூட நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார். 2022ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஜல் ஜீவன் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றியகற்காக தமிழ்நாடு அரசிற்கு விருது வழங்கியுள்ளது.

இந்திய அளவில் 180000 முதுநிலை மருத்துவ படிப்பிற்கான இடங்கள் நிரப்பப் படாமல் காலியாக இருப்பதினால் percentile 0% குறைக்கப்பட்டது என்றார். ஒன்றிய அரசின் இணையதளத்தில் முதுநிலை மருத்துவ படிப்பிற்கான மொத்த எண்ணிக்கை 67,802 என்றிருக்கிறது. முதுநிலை மட்டும் இல்லாமல், மொத்த மருத்துவ படிப்பிற்கான இடங்களை மொத்தமாக கூடினால் கூட 180000 இடங்களுக்கு குறைவாகவே வருகிறது.

பொது அறிவு தான் கொஞ்சம் கம்மிபோல, மற்றபடி அறிவாளியாக இருப்பார்போல என்று எண்ணி ஏமாந்து விட வேண்டாம்.

தான் பணி செய்த 11 ஆண்டுகளில் 2 லட்சம் வழக்குகள் பதிவு செய்துள்ளதாக சொன்னார். அவர் IPS ஆக பணி செய்தது வெறும் 9 வருடங்கள். அதில் 20,000 குறைவான வழக்குகளே பதிவாகியுள்ளன.

இதுவரை 20000 நூல்களை படித்துள்ளதாக தெரிவித்தார். அவரின் வயதை கணக்கிட்டு அவர் பிறந்ததில் இருந்து தினம் ஒரு நூல் என்று வைத்தால் கூட 20000 வராது என்பதை யாரும் கணக்கிட்டு தெரிந்து கொள்ளலாம்.

தன்னை தானே சாட்டையால் அடித்துக் கொண்டதை இணையதளம் காமெடி ஆக்கி கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அதை விட பெரிய பெரிய காமெடிகள் எல்லாம் அண்ணாமலை தொடர்ந்து செய்து கொண்டு தான் இருக்கிறார்.

அண்ணாமலை செய்வது காமெடி அல்ல, கலவரங்கள் செய்வதற்கான விதை.

அண்ணாமலை சொன்ன பொய்களில் மிக சிலவை தான் மேற்சொன்னவை. மொத்த பட்டியலும் இடவேண்டும் என்றால் பல பதிவுகளை தாண்டும்.

அண்ணாமலை ஒரு காமெடி பீஸ் அல்ல கலவரம் செய்ய திட்டமிட்டு செயல்பட்டு வரும் ஓர் வழக்கமான குற்றவாளிக்கு உரிய அனைத்து அம்சங்களும் பொருந்திய நபர்.

வாழ்வாதாரத்திற்காக போராடும் விவசாயிகள் மீது குண்டர் தடுப்பு சட்டம் போட்டு ஓராண்டுக்கு சிறையில் தள்ளும் தமிழ்நாடு காவல்துறை,

அண்ணாமலையை குண்டர் தடுப்பு சட்டம் அல்லது தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அடைக்க வேண்டியதில்லை, ஒரு FIR ஆவது போட்டு உளளார்களா?

திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களின் கீழ் செயல்படும் தமிழ்நாடு காவல்துறை அண்ணாமலை என்ற கலவர செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் கலவர காரனை பார்த்து பம்முவது ஏன்?

**தமிழக சமூக ஆர்வலர்களிடையே உள்ள மில்லியன் டாலர் கேள்வி இதுதான்?**






# டைம்ஸ் ஆப் இந்தியா

**இன்று** டைம்ஸ் ஆப் இந்தியாவில் வந்திருக்கும் முக்கியமான டேட்டா இது இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய மாநில அரசுகள் தங்களுடைய மக்களுக்கு எத்தனை விதமான நலத்திட்டங்களை வழங்குகின்றன அதற்கு எத்தனை கோடிகள் செலவாகிறது எத்தனை மக்கள் பயன் பெறுகிறார்கள் என்பது குறித்த RBI வெளியிட்டு இருக்கும் ஒரு முழுமையான தரவு இது..

இப்படி இலவசத் திட்டங்கள் கொடுப்பதால் அரசுக்கு கடும் நிதிச் சுமை. அடுத்து மக்களிடம் ஓட்டுக்காக மாநில அரசுகள் இதை செய் கிறார்கள், சுருக்கமாக சொன்னால் மலிவான அரசியல் செய்து அரசுக்கு கடனை கூட்டிக் கொண்டே போகிறார்கள் நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் அதுதான் இவர்கள் தொடர்ந்து நம்மிடம் திணிக்கும் கருத்து..

இந்த டேட்டாவின் மூலமாக பாஜக இங்கு தொடர்ந்து பரப்பி வரும் பிரச்சாரம் ஒன்று சுக்குநூறாக உடைந்து போகிறது, அது தமிழ்நாடு அரசு தான் ஓட்டுக்காக அதிகமான அதிகமாக இலவசங்களை கொடுக்கிறது என்ற கருத்து, உம்மைவிட அதிகமாக பாஜக ஆளும் உத்தர பிரதேச முத்திரைப் பிரதேசம் போன்ற மாநிலங் களே அதிக இலவசங்களை கொடுக்கின்றன..

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த மகளிர் உரிமைத்தொகை என்னும் திட்டம் இந்திய அளவில் மாபெரும் வெற்றி பெற்று இருக்கிறது. இந்தத் திட்டத்தை கடுமையாக விமர்சித்த பாஜக தான் ஆளும் மாநிலங்களிலேயே இந்த திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறது, இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்தியா முழுவதும் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்பதையே இந்த டேட்டா காட்டுகிறது..

சரி முக்கியமான விவாதத்திற்கு வருவோம்..

இப்படி இந்தியா முழுவதும் மாநில அரசின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மொத்த மதிப்பீடு 4 லட்சத்து 4 ஆயிரத்து 478 கோடி.. இதன் மூலம் எத்தனை மக்கள் பயனடைகிறார்கள் என்றால் சுமார் 40 கோடி.. பாஜக ஆளும் உத்தர பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களின் தரவுகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை, இதையும் கூட்டினால் பயனடையும் மக்களின் எண்ணிக்கை 60 கோடியை தாண்டும்..

60 கோடி மக்கள் பயனடைவதற்கு ஆண்டுக்கு சுமார் 4 லட்சம் கோடியை மாநில அரசுகள் செலவு செய்கின்றது என்று தோராய மாக மதிப்பிடலாம்..

இதுதான் அரசின் நிதிச் சுமையை கூட்டு கிறதா?.. இதுதான் நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதா?

சரி கடந்த ஆண்டு ஒன்றிய பாஜக அரசு

*கார்ப்பரேட்டுகளுக்கு வங்கிகளில் செய்த கடன் தள்ளுபடி மட்டும் 1.70 லட்சம் கோடி. 2019 செப்டம்பரில் மோடி அரசு அமல்படுத்தப்பட்ட கார்ப்பரேட் டேக்ஸ் 30ல் இருந்து 22 ஆக குறைத்ததின் மூலம் கடந்த ஆண்டு மட்டும் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி, இவை இரண்டும் ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு ஏற்படும் இழப்புகள். இந்த இரண்டு தொகையை மட்டும் கூட்டினாலே மூன்று லட்சத்து 15 ஆயிரம் கோடி வருகிறது, இது அரசுக்கு இழப்பு இல்லையா? அரசுக்கு நிதிச்சுமை ஏற்படுத்தாதா?*

*சரி இந்த மூன்று லட்சம் கோடியின் மூலமாக பலன் பெறுபவர்கள் யார் என்றால் சில நூறு கார்ப்பரேட்டுகள்தான்..*

*இதுதவிர அவர்களுக்கு ப்ரொடக்சன் இன்சென்டிவ் ஸ்கீம், எம்ப்ளாய்மென்ட் லிங்க் இன்சென்டிவ் (ELI)ஸ்கீம் என்று பல லட்சம் கோடியை கூடுதலாக மோடி அரசு செலவு செய்கிறது, கார்ப்பரேட்டுகள் லாபம் ஈட்டு வதற்கு, அவர்களுடைய கம்பெனியில் ஊழியர் களுக்கு காட்டவேண்டிய பணத்தை கூட அரசு கட்டுவதாக ஒத்து கொள்கிறது. எல்லாமே நம்முடைய வரிப்பணத்தில் இருந்துதான் கார்பரேட்களுக்கு செலவு செய்யப்படுகிறது.*


*ஒரு வாதத்திற்காக இதனால் கார்ப்ப ரேட்டுகள் அதிகமான வேலை வாய்ப்புதானே உருவாக்குவார்கள் அரசு செய்வது நமக்கு நன்மைதானே என்று சொல்வார்கள், இந்த திட்டத்தின் கீழ் கார்ப்பரேட்கள் புதிதாக சேர்க்கும் தொழிலாளிகளுக்கு அடுத்த இரண்டு வருடங்களுக்கு EPFO பணத்தை மாதந்தோறும் ஒன்றிய அரசு செலுத்தும், மூன்றாம் ஆண்டி லிருந்து நாம் செலுத்த வேண்டும் அதற்கு பதிலாக அவர்களை வேலையை விட்டு தூக்கி விட்டு புதிதாக ஆட்களை எடுத்தால் மீண்டும் அரசையே EPFO பணத்தை கட்ட வைக்கலாம் என்று கார்ப்பரேட்டுகள் யோசிக்க மாட் டார்களா, இந்தத் திட்டமே அதற்காகத்தானா என்பது இனி தெறிந்து விடும்..*

*இவ்வளவு செலவு செய்து அரசின் வருவாயில் கார்ப்பரேட்டுகள் பங்கு என்பது நம்மை போன்ற தனிநபர்கள் செலுத்தும் வருமான வரியை விட குறைவாகத்தான் இருக்கிறது.. 2024 ஆம் ஆண்டு இந்திய அரசின் வருவாயில் கார்ப்பரேட் வரியின் பங்கு 17 சதவீதம் நம்முடைய பங்கு 19 சதவீதம்.. என்றால் நாம் எவ்வளவு தூரம் சுரண்டப்படுகிறோம் என்று பாருங்கள்..*

*சரி இவ்வளவு கார்ப்பரேட்டுகளுக்கு சலுகை அளித்துவிட்டு மாநில அரசுகள் நமக்கு செலவு செய்யும் 4 லட்சம் கோடியால் நாட்டின் வளர்ச்சியே தடைபடுவதாக அரசே திவால் ஆவதாக ஒரு போலி தோற்றத்தை மோடி அரசும் அதன் ஊடகங்களும் நமக்கு தர முயற்சிக்காரர்கள் என்றால் நம்மை எவ்வளவு முட்டாள்களாக மதிப்பிடுகிறார்கள் என்றுதான் அர்த்தம்..*

- Anbe Selva


**கஷ்மீர் மக்களின்**
**இன்றைய அவலங்களை**
**அறிந்திட படியுங்கள்...**
**கஷ்மீரின் பாதி விதவைகள்..**
**வேர்கள் பதிப்பகம்..**




**விலை**
**ரூ.70/-**

**கிடைக்குமிடம்**
**வேர்கள் பதிப்பகம்**
மண்ணடி, சென்னை – 600 001.
**பேசி : 8148129887, 74012 13394**

பாகம்-2



## பாபரி மஸ்ஜித்
## எல்லாம் கெட்டுப்போய்விடவில்லை

# பாபரி மஸ்ஜித்

## என்றும் நம் நினைவில்...

**பாபரி மஸ்ஜித் தீர்ப்புப் பற்றி...**

**பாபரி** மஸ்ஜித் என்றும் நம் நினைவில்... “பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்” என நாம், வேர்கள் பதிப்பகம் வெளியிட்ட நூலின் விரிவாக்கப்பட்ட ஆறாம் பதிப்பை அண்மையில் வெளியிட்டோம். பல புதிய அத்தியாயங்களை இணைத்துள்ளோம். அதன் முன்னுரையில் பாபரி மஸ்ஜித் விவகாரததில் எல்லாம் கெட்டுப்போய்விடவில்லை. நம்பிக்கையோடுசெயல்பட்டால், காலம் மாறும், நீதி நிலைக்கும், மீண்டும் பாபரி மஸ்ஜித் அது நின்று கொண்டிருந்த இடத்தில் வரும் (இன்ஷாஅல்லாஹ்) எனக்குறிப்பிட்டிருந்தோம்.

முடிந்துபோனதை ஏன் கூறுகின்றீர்கள்? என சிலர் முணு, முணுப்பது நமக்குக் கேட்கவே செய்கின்றது. ஆனால் நாம் நீதியைப் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ் நிச்சயம் நீதி நிலைக்கும். சாத்தியம் வரும், அசத்தியம் அழியும், நாம் பயணிக்கும் பாதை சரியாக இருந்தால் இதை நமது அசைக்க வியலாத நம்பிக்கை!

நாம் மேலே குறிப்பிட்ட நூலில் நவம்பர் 29,2019இல் வழங்கப்பட்ட அநீதியான அறுதித் தீர்ப்பை பற்றி அதிகமாகவே குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது 2024 அக்டோபர்-நவம்பர் மாதங்களில் அந்தத் தீர்ப்புக் குறித்து எழுந்த விமர்சனங்களை வரிசைப்படுத்தி இருந்தோம். இந்த விமர்சனங்களை சாதாரண சாமானியர்கள் முதல் - சட்டமேதைகள் வரை சொன்ன, எழுதிக் காட்டிய விமர்சனங்கள் சில முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எடுத்து வீசிய விமர்சனங்களும் உண்டு.

2024விமர்சனங்களை கிளப்பிவிட்டார் ஓய்வு பெற்ற இந்திய தலைமை நீதிபதி D.Y.சந்திர சூட். இவர் பாபரி மஸ்ஜித் இறுதி தீர்ப்பை எழுதுவதில் இடம்பெற்ற ஒரு நீதிபதி.

பாரம்பரியமாக இந்துத்துவ சிந்தனையை வளர்த்துக் கொண்டவர். அப்பட்டமாக இந்தத்



நீதிபதி சந்திரசூட்

தீர்ப்பில் அம்பலப்படுத்தினார்.

எந்த நீதிபதியும் கையெழுத்திடாத அந்த அநீதியான, அனாதையான தீர்ப்பை எழுதியது நான்தான் எனக் காட்டிக்கொள்ள "நான் கடவுளைக் கேட்டுத்தான் அந்தத் தீர்ப்பை எழுதினேன்" எனப் பிரஸ்தாபித்துக் கொண்டார். ஒரு பொது நிகழ்ச்சியில்.

நவம்பர் 11,2024 இவர் ஓய்வு பெற்றார். தனது பதவியின் இறுதிநாட்களில் இந்தத் தீர்ப்புப் பற்றிய விமர்சனத்தை கிளப்பினார். தன்னை முன்னிலைப்படுத்தினார்.

"இன்றைய பாசிச அரசிடம், நான்தான் தீர்ப்பை எழுதினேன். ஆகவே உரிய சன்மானத்தைத் தாருங்கள் எனக் கேட்கின்றார்." என்ற விமர்சனத்தை வெளிப்படையாகவே சட்ட மேதைகள் வைத்தார்கள்.

அவர் D.Y.சந்திரசூட், பாரதீய ஜனதாவின் கைப்பாவையாக மாறிவிட்டார்" என்று முன்னாள் உச்ச நீதிமன்ற "பார்" சட்டக் குழுத்தலைவர் நேரடியாக குற்றம் சாட்டினார். கரன் தாப்பூர் அவர்களுக்கு (WIRE) தந்த பேட்டியில்

அதே பாணியில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ரோஹின்பாலி நாரிமன் அவர்கள் 2025 ஜனவரி திங்களில் ஆற்றிய உரையில்...

பாபரி மஸ்ஜித் தீர்ப்புப் பற்றிய விமர்சனங்களை முன் வைத்தள்ளார். அவர் நீதிபதி A.M.அஹ்மதி நினைவுக் கருத்தரங்கில் உரையாற்றினார். அவருக்குக் கொடுத்த தலைப்பு "Secularism and Indian Constitution" மதசார்பின்மை - இந்திய அரசியல் சாசன சட்டமும்...

தனது உரையில் அவர் பாபரி மஸ்ஜித் அறுதித் தீர்ப்புப் பற்றியே அதிகமாக பேசினார். அதில் இடம்பெற்ற தகவல்களின் சுருக்கம் இதோ...

'பாபரி மஸ்ஜித் அறுதித் தீரப்பு, முரண்பாடுகள் நிறைந்தது. மஸ்ஜித்-இல் சிலை வைத்தும், மஸ்ஜித்-ஐ இடித்ததும் தண்டனைக்குரிய குற்றம் எனக்கூறிவிட்டு, மஸ்ஜித் இருந்த இடம் இந்துக்களுக்கே சொந்தம் எனக் குறிப்பிட்டார்கள். இது சட்டத்திற்குப் புறம்பானது. முன்னுக்குப் பின் முரணானது.

மதச்சார்பின்மை, நீதிமன்ற ஒழுக்கங்கள் இவையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்ட அநீதியான தீர்ப்பே பாபரி மஸ்ஜித் தீர்ப்பு.

1528இல் கட்டப்பட்டது. 1857இல்தான், அதாவது 300 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பிரச்சனையாக்கப்பட்டது. அப்போதும் அது முஸ்லிம்களின் இடம் என்பதே உறுதி செய்யப்பட்டது. ஆங்கிலேயர்கள் 1857இல் (1853) எழுப்பிய சுவருக்கு முன்னும் பின்னும் அங்கே முஸ்லிம்கள் தொழுது கொண்டேதான் இருந்தார்கள். 1949இல் சிலை வைக்கப்பட்ட பின்னரே - அவர்களை தொழுகை நடத்துவதிலிருந்து தடுத்தார்கள். இப்படி 400 வருடங்களாக முஸ்லிம்களுக்கே சொந்தமாக இருந்த மஸ்ஜித். அதை சுற்றியுள்ள இடங்கள், இவையெல்லாம், எப்படி யாரும் பொறுப்பேற்காத தீர்ப்பின் வழி இந்துத்துவத்திற்கு சொந்தமாக்கப்பட்டது.

பாபரி மஸ்ஜித் வழக்கில் வரலாறு முழுதும் நீதிபதிகளுக்கு லஞ்சம் தந்துதான், தீர்ப்புகள் பெறப்பட்டன என்ற உண்மை வரலாறு முழுவதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த லஞ்சம் அரசில் தரப்படும் உயர் பதவிகள் என்ற அளவில் அமைந்தன.

பாபரி மஸ்ஜித் இடிப்பு வழக்கில், அத்தனை பேரையும் விடுதலை செய்தவுடன் அந்த நீதிபதி ஓய்வு பெற்றார். அவருக்கு "உப லோக் ஆயுத்தா" என்ற பதவியை உத்திரப் பிரதேச அரசு வழங்கிற்று. (1949இல் பாபரி மஸ்ஜிதில் வைத்த சிலைகளை அகற்றிட மறுத்த மாவட்ட நீதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும், அவருடைய மனைவிக்கு மாநில அளவில் ஓர் பதவியும் வழங்கப்பட்டது. பல ஏக்கர் விவசாய

நிலங்களும் லஞ்சமாகத் தரப்பட்டன.)

பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் 5-ஐந்து பக்கங்களுக்கு அளந்து கொட்டப்பட்ட ஒரு விவகாரம் Places of Worship act 1991. வழிபாட்டுத் தளங்களின் (தடை)சட்டம். இந்தச் சட்டத்தின் அடிப்படையில், பாபரி மஸ்ஜித்-ஐ தவிர இதர வழிபாட்டுத் தளங்கள் 1947, ஆகஸ்ட் 15இல் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கும். அவை எந்தப் பிரச்சனைகளுக்கும் உள்ளாக்கப்படக்கூடாது. நீதிமன்றங்கள் எந்த மனுவையும் ஏற்கக்கூடாது எனக் கூறப்பட்டன.

ஆனால் நீதிபதி சந்திரசூட் அவர்கள் அதையும் கவிழ்த்து, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை வழங்கி நீதித்துறையை களங்கப்படுத்தினார். சிறுபான்மை முஸ்லிம்களை அவலங்களுக்கு ஆட்படுத்தினார்.

நீதிபதி பாலிநாரிமன் அவர்கள் 2014 முதல் 2021 வரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். இப்படி பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் நடந்த அநீதி மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. நாட்டு மக்கள் பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் முஸ்லிம்களுக்கு நடந்தது மிகப்பெரிய அநீதி என்பதை வெகுவாக உணர்ந்து வருகின்றார்கள்.

இந்த உணர்வை, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருபவர்கள் - பாபரி மஸ்ஜித்-ஐ வைத்து அரசியல் நடத்தியவர்கள் அல்ல, மாறாக சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


அதனால்தான் கூறுகின்றோம் காலம் மாறும், மக்கள் கருத்தும் மாறும். நீதி நிலைக்கும்.


இன்ஷாஅல்லாஹ்.

- MGM

- நன்றி : Radiance Views Weekly, January 5-1-2025


## இப்போது பரபரப்பான விற்பனை





# ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பில் (2007) குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலையான கதை!

## அழுத்தமான ஆதாரங்கள் அலட்சியப்படுத்தப்பட்டன

**டிசம்பர் மாத தொடர்ச்சி....**

அத்தியாயம் ஒன்றில், மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பை பற்றிய விபரங்களைத் தந்திடும்போது, ஒரு முக்கிய செய்தியைக் குறிப்பிட்டோம். அது, குண்டுவெடிப்பு நடந்த மூன்று நாட்களிலேயே வட்டார காவல் நிலை யத்தவர்கள், குண்டுவெடிப்பில் ஈடுபட்டவர் களின் செல்போன் சிம்கார்டுகளைக் கண்டு பிடித்துவிட்டனர்.

அதாவது, குண்டு வெடிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட செல்போன்களின் சிம்கார்டுகளைக் கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால், இந்த மிக முக்கியமான தடயத்தை விட்டுவிட்டு, அவர்கள் முஸ்லிம்களின்மேல் பழியைப் போடுவதிலேயே கவனமாக இருந்தார்கள்.

பின்னர் எழுந்த கொந்தளிப்புகளால், வழக்கு NIA என்ற தேசிய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது.

NIA சரியான திசையில்தான் முதலில் தொடங்கியது. இன்னும் விளக்கமாகச் சொன்னால் இராஜஸ்தான் வட்டார (ATS) காவல்துறை எந்தக் கோணத்தில், அஜ்மீர் ஷெரீப் குண்டு வெடிப்பை விசாரித்ததோ அதே கோணத்தில்தான் விசாரித்தது, அதேநேரத்தில் சுவாமி அசீமானந்தா இவர் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பில், ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். இது NIA (எ) தேசிய புலனாய்வு முகமையின் கையில் சிறந்ததொரு ஆதாரத்தை சாட்சியத்தைத் தந்தது. தேசிய புலனாய்வு முகமை, தனது புலனாய்வை முடித்தது. அத்தோடு ஆர்.எஸ்.எஸ்., ஜெய் வந்தே மாதரம் அபிநவ்பாரத் ஆகிய அமைப்புகளின்மேல் குற்றப் பத்திரிகையையும் தாக்கல் செய்தது.

இந்த வழக்கில் தீர்ப்பு – ஹைதராபாத் சிறப்பு NIA நீதிமன்றத்தில் *2018* ஆம் ஆண்டு ஏப்ரல் *16* ஆம் நாள் வழங்கப் பெற்றது. அசைக்க முடியாத விஞ்ஞானப் பூர்வமான, ஆதாரங்களும் சாட்சி யங்களும், இருந்தாலும் நீதிமன்றம், குற்றம் சுமத்தப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தது.

இந்த வழக்கில், இருந்த முக்கியமான ஆதாரங்கள் குண்டுகளை வெடிக்கச் செய்யப் பயன்படுத்தப்பட்ட சிம்கார்டுகள், செல்போன்கள், சுவாமி அசீமானந்தா தாமாக முன்வந்து வழங்கிய வாக்குமூலங்கள் என்பன வாகும். இத்தனையுமிருந்தும் நீதிமன்றம் ஏன் இந்த சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்தது, என்பதை நாம் கீழே விவாதிப்போம்...

## I) சிம்கார்டுகளும் செல்போன்களும்

மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்புகளில் பயன்படுத்தப்பட்ட 'சிம்' (SIM) கார்டுகளும், செல்போன்களையும் பொறுத்தவரை, புலன்விசாரணையில் பின்வரும் உண்மைகள் தெரியவந்தன.

*1)* போலியாகத் தயாரிக்கப்பட்ட உரிமம், (டிரைவிங் லைசென்ஸ்) வாக்காளர் அட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தித்தான் (SIM) சிம்கார்டுகளை வாங்கி இருந்தார்கள். இப்படி சிம்கார்டுகளை வாங்கியவர்கள் தேவேந்திர குப்த்தா (குற்றவாளி எண்–*1*) (A1), லோகேஷ் ஷர்மா (குற்றவாளி எண்.–*2*) (A2), சுனில் ஜோஷி (குற்றவாளி எண்–*5*) (A5)

இவர்கள் *11* (பதினொரு) சிம்கார்டுகளை வாங்கி இருந்தார்கள். அத்தனையும் போலி பெயர்களிலேயே வாங்கப்பட்டிருந்தன. அந்தப் போலி பெயர்கள், பாபுலால் மனோகர் யாதவ், பாபுலால் ராம்பர் யாதவ், ரமேஷ் அகர்வால்.

## 2) இந்த சிம்கார்டுகள் பின்வரும் இடங்களில் வாங்கப்பட்டிருந்தன

ஜம்தாரா – JAMTARA, மிகிஜாம், மிகிஜாம் மாவட்டம், திம்கா & அசான்சோல். இந்த மாவட்டங்கள், ஜார்க்கண்ட் மாநிலம், பிகார் மாநிலம், மேற்கு வங்க மாநிலம் இவற்றிற்குப் பக்கத்தில் இருக்கின்றன. இந்த சிம் கார்டுகள் ***24***, மே, ***2006***க்கும், ***26***, நவம்பர் ***2006***க்கும் இடையே வாங்கப்பட்டிருந்தன.

இந்தக் காலக்கட்டத்தில் குற்றவாளி எண்.–*1* (A1) தேவேந்திர குப்தா, RSS-இன் பிரச்சார பிரமுகர் (முக்கிய தலைமை பிரச்சாராக ஜார்க் கண்ட் மாநிலத்தின் ஜம்தாரா மாவட்டத்தில் இருந்தார்.

*2)* குற்றவாளி எண்.–*2* (A2) லோகேஷ் ஷர்மா, இரண்டு செல்போன்களை பாபுலால் யாதவ் என்ற பெயரில், பரீதா பாத்தில் உள்ள (ஹரியானா) LEC எல்.இ.சி. கம்யூனிகேஷன்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி இருந்தார்.

*3)* மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும், அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பிலும், நான்கு சிம்கார்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த நான்கும் இந்தக் குற்வாளிகள் வாங்கிய பதினொரு சிம்கார்டுகளில் உள்ளவை.


**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

*4)* கைரேகை நிபுணர்களின் விரிவான ஆய்வின் அடிப்படையில், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் நோக்கியா (NOKIA) செல்போன்தான் குண்டுகளை வெடிக்கச் செய்யப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் பயன்படுத்தப்பட்ட சிம் கார்டு எண். ***97321 10289***. இது நாம் மேலே குறிப்பிட்ட ***11*** சிம் கார்டுகளில் ஒன்று. அதில் பயன்படுத்தப்பட்டிருந்த செல்போனின் ஐ.எம்.இ.ஐ. IMEI - 353938014288999. இது குற்ற வாளி எண். *(2)* (A2). பாபுலால் என்ற பெயரில் வாங்கிய இரண்டு செல்போன்களில் ஒன்று.

*5)* மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட செல்போன் சிம்கார்டு எண். ***9732107289***, தான் அஷ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அந்த சிம்கார்டு இன்னொரு செல்போனில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த செல்போனின் IMEI No. 357088006508510. ஆனால் இவையெல்லாம் வெடிக்காத குண்டுகளை ஆய்வு செய்தபோது கிடைத் தவை. அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பில் இன்னொரு சிம்கார்டை பயன்படுத்தியிருந் தார்கள். அந்த சிம்கார்டு எண். ***9732110207***. இந்த சிம்கார்டுகள் எல்லாம், நாம் மேலே குறிப்பிட்ட ***11*** சிம்கார்டுகளில் உள்ளவையாகும்.

நாம் மேலே குறிப்பிட்ட செல்போன் IMEI 35708800650810-ஐ இந்த குண்டு வெடிப்பு களில் குற்றம் சாட்டப்பெற்ற குற்றவாளி ஒருவன், சர்காம் ஆடியோ விஷன் – Sargam Audio Vision எனும் நிறுவனத்தில் வாங்கி இருந்தார்.

இந்த நிறுவனம் மேற்கு வங்கத்திலுள்ள சித்ரஜ்ஜன் எனுமிடத்தில் இருக்கின்றது. இதுவும் – இந்த சிம்கார்டும் செல்போனும் பாபுலால் யாதவ் எனும் பெயரில் வாங்கப் பட்டதுதான். இவையெல்லாம் ஓர் உண்மையை உறுதி செய்கின்றன. அது, அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பும், மக்கா மஸ்ஜித் குண்டு

வெடிப்பும் ஒரே சதித்திட்டத்தில் பிறந்தவை தான்.

*6)* தொலைபேசி அழைப்புகளின் பதிவுகள் (CDR) குண்டு வெடிப்பை நடத்திய (ஆர். எஸ்.எஸ்.) அமைப்பைச் சார்ந்தவர்கள் அடிக்கடி தங்களோடு தொடர்புடன் இருந்திருக்கின் றார்கள் என்பதை உறுதி செய்தன. அந்த செல்போன்களைத்தான் குண்டு வெடிக்கச் செய்யவும் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.

*7)* தேவேந்திர குப்த்தா 29 ஏப்ரல் 2010இல் இராஜஸ்தான் காவல்துறையினர் கைது செய்தார்கள். அவரை அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பிற்காகவே கைது செய்தார்கள். அதில், அவர் சுனில் ஜோஷி என்பவர்தான், அந்தக் குண்டுவெடிப்பின் முக்கிய மூளை என ஒப்புக்கொண்டார். அத்தோடு, சந்தீப் டாங்கே, இராம்ஜி கல்சங்கரா, லோகேஷ் ஷர்மா ஆகியோரோடு தானும் அந்தக் குண்டுவெடிப் பின் சதியில் கலந்து கொண்டதாக ஒப்புக் கொண்டார்.

*8)* அத்தோடு அவர் (தேவேந்திர குப்த்தா) தனக்கும் சுனில் ஜோஷிக்குமான ஓட்டு உரிமத்தை தானே தயாரித்தாக ஒப்புக் கொண்டார். அவற்றையெல்லாம் மனோஜ் என்ற பெயரில் தயார் செய்தார். இந்த ஓட்டுநர் உரிமங்களையும், சில திருத்தப்பட்ட வாக்காளர் அட்டைகளையும் கொண்டு எல்லா ‘சிம்’ கார்டுகளையும் அவர் வாங்கினார். அந்த ‘சிம்’ கார்டுகள்தாம், இந்த (மேலே சொன்ன) குண்டு வெடிப்புகளில் வெடிக்கச் செய்ய பயன்படுத் தப்பட்டன.

*9)* அவர், அந்த போலி ஓட்டுநர் உரிமங் களைத் தயாரித்தவரின் கடையையும் காட்டினார். அத்தோடு அவர், ‘ஜாம்தா’ விலுள்ள ஆர்.எஸ். எஸ். அலுவலகத்தையும் அடையாளம் காட்டி னார். இங்கே வைத்துத்தான் அஜ்மீர் ஷெரீஃப், மக்கா மஸ்ஜித் ஆகியற்றின் குண்டுகளை வைப்பது பற்றிய கலந்தாலோசனை, அடிக்கடி நடந்ததாகவும் குறிப்பிடடார். நாட்டின் இதர இடங்களில் குண்டுகள் வைப்பது பற்றியும் இந்த ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வைத்துத் தான் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

*10)* லோகேஷ் ஷர்மா என்பவரை 15, மே–2010 இல், இராஜஸ்தான் காவல் துறை யினரைச் சார்ந்தவர்கள் அஜ்மீர் தர்கா ஷெரீஃப் குண்டுவெடிப்பு சம்மந்தமாகக் கைது செய்தனர். அவர் குண்டுவெடிப்பில் தனக்குள்ள பங்கை ஒப்புக் கொண்டார். அத்தோடு இந்தூர் தேவாஸ் ரோட்டில் ஓர் இடத்தில் குண்டுகள் கை மாற்றப்பட்டன என்பதையும் ஒப்புக் கொண்டார். அத்தோடு அவர் தலைமறைவாக இருக்கும் இராம்ஜி கல்சங்கராவின் வீட்டையும் அடையாளம் காட்டினார். அது ஷாந்தி விகார் காலனி, பெங்காளி சவ்ராஹா, இந்தூர். இந்த முகவரியில் பல கூட்டங்கள் நடத்தப் பட்டன. குண்டுகளும் இங்கே வைத்துத்தான் தயாரிக்கப்பட்டன.

*11)* லோகேஷ் ஷர்மா, அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பிலும், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்புகளில், குண்டுகளை வெடிக்கச் செய்த செல்போன்களை தான்தான் வாங்கினான் என்றும், அவற்றை LEC Communications - எல்.இ.சி. கம்யூனி கேஷன்ஸ் என்ற கடையில் தான் வாங்கினான் என்றும் அந்த நிறுவனம் ஃபரீதாபாத்–இல் உள்ள அனாஜ் மண்டி என்ற அங்காடியில் இருக்கின்றது எனக் கூறினான். அடையாளம் காட்டினான். இந்த இரண்டு செல்போன்களையும் பாபுலால் யாதவ் என்ற பெயரில்தான் வாங்கினான் என்றும் கூறினான். அந்தசெல்போன் நிறுவனத்தின் ‘பில்’ 24–ஏப்ரல் 2007இல் இரண்டு நோக்கியா செல்போன் 6030 மாதிரி, பாபுலால் யாதவ் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகக் காட்டியது.

அந்த செல்போன் நிறுவனத்தின் விற்பனை யாளர் இஷ்ஹாந் சவ்லாலோஷ் ஷர்மா (PW 187) தான் அந்த இரண்டு செல்போன் களையும் வாங்கியதாக அடையாளம் காட்டி னார். அத்தோடு அந்த விற்பனையாளர், தனியாக நடத்தப்பட்ட அடையாளம், காட்டும் அணி வகுப்பிலும் லோகேஷ் ஷர்மாவை மாஜிஸ்ட்ரேட் – நீதிபதி முன் அடையாளம் காட்டினான். இந்த இரண்டு செல்போன்களும் தான் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும், அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பிலும் பயன் படுத்தப்பட்டன. ஆனால் நீதிமன்றம் இத்தனை முக்கிய நிரூபணங்களையும் நிராகரித்துவிட்டது. அதற்கு அது சொன்ன காரணங்கள்...

*1)* அரசு வழக்கறிஞர் இராஜஸ்தான் தீவிரவாத தடுப்புப் படையின் அதிகாரி பாட்நகர் அவர்களை விசாரிக்கவில்லை. இவரிடமிருந்துதான் மக்கா மஸ்ஜித், குண்டு

வெடிப்பு வழக்கை விசாரித்த மத்திய புலனாய்வு அதிகாரி ராஜஸ் பாலாளி (PW26) தொலைபேசி பதிவுகளின் நகல்களையும் இன்னும் சில ஆவணங்களையும் பெற்றார்.

2) அரசு வழக்கறிஞர், தொலைபேசி அழைப்புகள் அனைத்தையும் நிரூபிக்க செல்போன் கம்பெனியின் எல்லா பிரதிநிதி களையும் விசாரிக்கவில்லை. (இது வழக்கை தட்டிக்கழிக்க கூறப்பட்ட காரணங்களுள் ஒன்று)

3) செல்போன்களை விலைக்கு வாங்கிட சமர்பிக்கப்பட்ட விண்ணப்படிவத்தில் (Customer Application Form) (CAF) இல் உள்ள கையெழுத்துக்கள் குற்றவாளிகளின் கையெழுத்துதான் என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணர்களுக்கு அந்த விண்ணப்பப் படிவங்களை அனுப்பவில்லை.

4) தேவேந்திர குப்த்தா (குற்றவாளி எண்.–1) லோகேஷ் ஷர்மா, (குற்றவாளி எண்.–2) இவர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை இராஜஸ்தான் போலிசிடம் சொன்னார்கள். அவற்றின் அடிப்படையில் பல பொருட்களும், ஆவணங்களும் கைப்பற்றப் பட்டன என்றால் அவற்றையெல்லாம் ஏன் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.


5) அரசு வழக்கறிஞர் இந்த ஆவணங்களை இராஜஸ்தான் நீதிமன்றத்திலேயே மிக எளிதாகப் பெற்றிருக்கலாம்.

6) ஆளை அடையாளம் காட்டும், அணி வகுப்பு ஒன்றை நீதிபதி ஒருவர் நடத்தினார். (PW194) அதில் லோகேஷ் ஷர்மா (A2) என்பவரை, LEC Communications - எல்.இ.சி. கம்யூனி கேஷன்ஸ் என்ற கம்பெனியின் விற்பனையாளர் அடையாளம் காட்டினார். (PW187). இந்த அடையாளம் காட்டும் அணி வகுப்பில் பல குறைபாடுகள் உண்டு. அவற்றுள் ஒன்று மாஜிஸ்ரேட், அந்த இடத்திலேயே அணிவகுப்பு நடைமுறைகளைப் பதிவு செய்திட வேண்டும். ஆனால் அவர் அதை செய்யவில்லை. நீதிமன்றம் வந்த பின்பே அதைச் செய்தார். அதேபோல் அணிவகுப்பு வரிசையை அதாவது – குற்றவாளிகளும், மற்றவர்களும் நிறுத்தப்பட்ட வரிசையை, வலமிருந்து பார்வை இட்டாரா? இடமிருந்து பார்வையிட்டாரா? என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவர், அதையும் செய்யவில்லை. ஆனால் இறுதி சாட்சி எதிராக மாறிவிட்டான். அதாவது பிறழ் சாட்சியாக மாறிவிட்டான்.

ஆனால், அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பில் இவையெல்லாம் மேலே சொன்னவையெல்லாம் நீதிமன்றம் சொன்ன வையெல்லாம் பொய்ப்பிக்கப்பட்டது. இதே அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பும், இதே சதியின் கீழ் நிறைவேற்றப்பட்டதுதான்.

## 3) இதே உண்மைகள் எல்லாம் அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பில் நிரூபிக்கப்பட்டன (அதுவும் இதே சதியின் வெளிப்பாடுதான்)

மக்கா மஸ்ஜித் தீர்ப்பை வழங்கிடும்போது, அரசு வழக்கறிஞருக்கும், நீதிமன்றத்திற்கும் நன்றாக ஒன்று தெரியும். அது, அஜ்மீர் ஷெரீஃப் வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டி ருக்கின்றார்கள். (என்பது.) அத்தோடு இராஜ ஸ்தான் நீதிமன்றம், (அதாவது அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு வழக்கை விசாரித்த நீதிமன்றம்) சமர்ப்பிக்கப்பட்ட எல்லா சாட்சியங்களையும் ஏற்றுக் கொண்டது. **அடுத்த இதழில் தொடரும்..**



# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



டிசம்பர் மாத தொடர்ச்சி....

### 1931-1935 பாலஸ்தீன் நிலங்களை யூதர்கள் விலைக்கு வாங்கியபோது இந்திய முஸ்லிம்கள்!

1931க்கும் 1935க்குமிடையில் ஆயிரக் கணக்கான யூதர்கள் பாலஸ்தீனை நோக்கி வந்தார்கள். ஜெர்மனி என்ற நாட்டின் ஆட்சி யாளன் ஹிட்லர் கொடுத்த தொல்லைகள் தாளாமல் தான் யூதர்கள் அங்கிருந்து ஓடினார்கள். பாலஸ்தீன் வந்தார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் பாலஸ்தீன் பரிபாலனத்தைத் தங்கள் கைகளில் வைத்திருந்த ஆங்கிலேயர்கள் பல நிலங்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இஃதல்லாமல் பல இடங்களை யூதர்கள் விலைக்கு வாங்கிடவும் செய்தார்கள். இதற்காக யூதர்கள் வைத்திருந்த (Jew- ish Fund) யூத நிதி, பெரிதும் அவர்களுக்கு உதவியது. இந்த நிதி 1895/97 களில் தொடங்கப்பெற்றது.

பாலஸ்தீனில் பல நிலங்களை லெபனான் நாட்டைச் சார்ந்தவர்களும், சிரியா நாட்டைச் சார்ந்தவர்களும் இன்னும் இதுபோல் இதர நாடுகளைச் சார்ந்த முஸ்லிம்களும் வாங்கி வைத்திருந்தார்கள்.

பாலஸ்தீன் முஸ்லிம்கள் ஆங்கில அதிகாரி களிடம் (British High Commissioner) தங்கள் எதிர்ப்பை தெரிவித்தார்கள். அத்தோடு பாலஸ்தீனிலுள்ள நிலங்களைப் பாதுகாப்பதற்கென ஓர் அரபு கமிட்டியையும் நியமித்தார்கள். (Lajant Inquadh Al Aribai Arab Committee for the Protection of Palestian Lands)

நிலங்கள் முஸ்லிம்களின் கைகளை விட்டுப்போகின்றன என்பதைக் கேள்விப் பட்ட இந்திய முஸ்லிம்கள் கிலாபத்

கமிட்டியின் சார்பில் ஷவ்கத் அலீ அவர்களைப் பாலஸ்தீன் அனுப்பி வைத்தார்கள்.

ஷவ்கத் அலீ அவர்கள் 1933 ஏப்ரலில் பாலஸ்தீன் சென்றார்கள். அங்கே வெள்ளிக் கிழமை (ஜும்ஆ)வில் தொழுகையில் பேருரை நிகழ்த்தினார்கள்.

உரையில் "ஒவ்வொரு இந்திய முஸ்லிமும் பாலஸ்தீனில் விற்பனைக்கு வரும் நிலத்தில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி பாலஸ்தீன் முஸ்லிம்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இதைச் செய்தால் அல்லாஹ் அவர்களுக்குச் சொர்க்கத்தில் இதைவிடப் பெரிய இடமொன்றை தந்திடுவான்" எனக் கூறினார்கள்.

இந்தப் பின்னணியில் பாலஸ்தீனில் விற்பனைக்கு வந்த பல நிலங்களை இந்திய முஸ்லிம்கள்வாங்கிபாலஸ்தீனமுஸ்லிம்களுக்குத் தந்தனர். இந்திய முஸ்லிம்களின் இந்தச் செயல் ஆங்கிலேயர்களை ஆத்திரமடையச் செய்தது.

இந்நிலையில் 1933 ஆகஸ்ட் மாதம் பாலஸ்தீன் முஃபத்தி ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் இந்தியா வந்தார்கள். பல இடங்களில் உரையாற்றினார்கள். இந்திய முஸ்லிம்களின் உதவிக்கு நன்றி கூறினார்கள்.

1933 ஆகஸ்ட் 15ஆம் நாள் பம்பாயில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் ஒன்று திரண்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு ஹாஜி சுலைமான் காஸ்ஸம் ஹஜ் மித்தா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மாநாட்டில் உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாய் இணைந்து மஸ்ஜிதுல் அக்ஸாவை காப்போம் என உறுதி எடுத்துக் கொள்ளப் பட்டது.

**பத்திரிகைகளின் விஷமம்**

இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் வேலை செய்வதில் இன்றைய பத்திரிகைகளைப் போலவே அன்றைய பத்திரிகைகளும் வேலை செய்திருக்கின்றன.

உலக முஸ்லிம்கள் இந்தியாவை மையமாகக் கொண்டு ஒற்றுமைக் குரல் கொடுப்பதை அன்றைய பத்திரிகைகளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

பத்திரிகைககள் குறிப்பாக நியு பிரஞ்சி பிரஸ்ஸி என்ற பத்திரிகை (Neue Frenche Pressee), இந்திய முஸ்லிம்கள் பாலஸ்தீன் முஸ்லிம்கள், முஃப்த்தி, ஆங்கிலேயர்கள், ஹாஜி அமீன் ஹுஸைன் ஆகியவர்களுக்கிடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அதில் ஆங்கிலேயர்கள், யூதர்கள் பாலஸ்தீனில் வந்து குடியேறுவதைத் தடுத்திட ஒத்துக் கொண்டார்கள். அதே நேரத்தில், இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களுடன் இந்தியாவில் ஒத்துழைக்க ஒத்துக்கொண்டார்கள் என ஒரு நீண்ட கதையை வெளியிட்டது.

இதனை அடுத்த நாளே மறுத்தார்கள் முஃப்த்தி அமீன் ஹுஸைன் அவர்களும் ஷவ்கத் அலீ அவர்களும்,

**ஜெர்மன் அதிகாரிகள்... ?**

ஷவ்கத் அலீ அவர்களும் முஃப்த்தி அமீன் ஹுஸைன் அவர்களும், பாலஸ்தீன் வந்திருந்த ஜெர்மனியின் அதிபர் ஹயின்ரிச் வால்ஃப் அவர்களிடம், யூதர்கள் பாலஸ்தீன் வருவதைத் தடுத்திட வேண்டும் எனக் கேட்டார்கள்.

ஆனால் ஜெர்மானியர்கள் யூதர்களை வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தனர்.

(Source : Ali Mahafdha, the role of France, Germany and Italy From Arab Unity: Beruit 1985 p:326)

அடுத்து ஜெர்மனியிடமிருந்து வந்த யூதர்கள் பாலஸ்தீனில் குடியேறினார்கள். ஆங்கிலேயர்கள் அதற்கு வழிவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

**இன்னொருபோர்**

பாலஸ்தீன் மக்கள் வீதிக்குவீதி வந்து போராடினர். வீதிக்கு வந்த போராடிய பாலஸ்தீன் மக்கள் தலைவர்களில் ஒருவரான மூஸா காசிம் அல்ஹுஸைனி அவர்களைச் சுட்டுக் கொன்றார்கள் ஆங்கிலேயர்கள்.

ஷஹீதான - வீரமரணத்தை எய்திய - மூஸா காசிம் - அல் ஹுஸைனி அவர்களை கொலை செய்த குற்றத்திற்காக ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்திய முஸ்லிம்கள் கண்டித்தார்கள். இந்தியா முழுவதும் போராடினார்கள். இறுதியில், பம்பாயில் மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். அதில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றி னார்கள்.

"அகில இந்திய முஸ்லிம் கூட்டமைப்பு இந்தியா எங்கிலுமுள்ள சுன்னத் ஜமாஅத் மற்றும் ஷியா ஜமா அத்களுடன் இணைந்து அரபு கிருஸ்தவர்கள் மீதும், அரபு முஸ்லிம்கள் மீதும் ஆங்கிலேயர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டை கண்டிக்கின்றது"

(India Offcie File : London L/P and S/12/3347 from Indian Muslim Federation to the Secretary of State for India Nov.17,1933)

போராட்டங்களைத் தொடர்ந்தார்கள் இந்திய முஸ்லிம்கள். இந்தியாவில் நடந்த கபளீகரங்கள், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அதிர்ச்சியைத் தந்தன.

இந்தியாவிலிருந்த ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரி வைசிராய், நவம்பர் 5, 1933 அன்று லண்டனிலுள்ள வெளிவிவகாரத்துறைக்கு தந்திகளை அனுப்பினார். அதில், பாலஸ்தீனில் ஆங்கிலேயே அரசின் அணுகுமுறை குறித்து இந்திய முஸ்லிம்கள் கொதித்துப் போயிருக்கின்றார்கள். பயங்கர எதிர்ப்புகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் பாலஸ்தீனில் மேற்கொள்ளும் அணுகு முறையை நியாயப் படுத்திட நம்மிடம் நியாயமான காரணங்களிலிருந்தால் தெரிவியுங்கள். அது இந்திய முஸ்லிம்களைச் சமாதானப் படுத்திட பெரிதும் உதவிடும். ஆதாரம் : India Office London File )

இதே போன்றதொரு தந்தி ஆர்தர் வச்சுபி (Arther Wachubi) என்ற பாலஸ்தீனை நிருவகித்துக் கொண்டிருந்த அதிகாரிக்கும் சர் சாமுவேல் ஹோயரிய் என்ற லண்டனிலுள்ள ஆங்கில அதிகாரியால் அனுப்பப்பட்டது.

## 1934 : பாலஸ்தீன நிருவாக அவை:

பாலஸ்தீனில் ஆங்கிலேயர்கள் நிர்வாகம் அவை என்றொன்றைத் தொடங்கினார்கள். இந்தச் சபையில் பாலஸ்தீன் முஸ்லிம்களின் எண்ணிக்கையின் அளவிற்கு யூதர்களும், கிருஸ்தவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இதனை பாலஸ்தீன் முஸ்லிம்கள் எதிர்த்தார்கள். 7,23,427 ஏழு லட்சத்து இருபத்து மூவாயிரத்து நானூற்று இருபத்தேழு முஸ்லிம்களுக்கு தரப்படும் அதே அளவு பிரதிநிதித்துவம் 2,09,207 இரண்டு லட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஏழு பேரை கொண்ட யூதர்களுக்கும் தரப்படுகின்றது. இந்த யூதர்களிலும் ஒன்றரை லட்சம் யூதர்கள் அண்மையில் 1920க்குபின் பாலஸ்தீன் வந்து குடியேறியவர்கள்.

அதேபோல் கிருஸ்தவர்களுக்கும் அதே பிரதிநிதித்துவம் தரப்பட்டது. அவர்கள் எண்ணிக்கையில் வெறும் 95,165 பேர் மட்டுமே!

பாலஸ்தீன் மக்கள் இந்தப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்தார்கள்.

இந்த எதிர்ப்பு இந்தியாவிற்குள்ளும் வரும் என்பதை ஆங்கிலேயர்கள் அறிந்தார்கள். ஆகவே இந்தியாவிற்குள் எதிர்ப்பு வருவதற்கு முன்னரே லண்டன் ஆங்கில அரசுக்கு இந்திய ஆங்கில அதிகாரிகள் தங்கள் அச்சத்தைத் தெரிவித்தார்கள், இப்படி

"நான், பாலஸ்தீனில் அமையவிருக்கும் நிருவாக அவையை, இந்தியாவின் சூழலிலிருந்து பார்த்திடக் கடமைப்பட்டுள்ளேன். காரணம் அதன் பிரதிபலிப்பு நிச்சயமாக இந்தியாவிற்குள் வரும். அது எனக்கோர் பிரச்னையாகும். இந்திய முஸ்லிம்கள் அதனை எளிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். இங்கே ஒரு பெரும் கபளீகரத்தை உருவாக்கிவிடுவார்கள்."

இதன் அடிப்படையில் நிருவாக அவை அமைப்பு ஒத்திப்போடப்பட்டது.

## 1935 ஜெரூசலத்தில் மாநாடு - ஃபத்வா

ஜெரூசலத்தின் முஃப்த்தி ஆமீன் ஹுஸைன் அவர்கள் ஜனவரி 25,1935 இல் ஜெரூசலத்தில் ஒரு மாநாட்டை கூட்டினார்கள். அதில் கலந்து



கொள்ளும்படி உலகெங்கிலுமிருந்து முஸ்லிம் களின் பிரதிநிதிகளை அழைத்தார்கள். குறிப்பாக உலமா பெருமக்களை அழைத்தார்கள்.

முஃபத்தி அவர்களின் அழைப்பை ஏற்று உலமாக்கள் பெருமளவில் பாலஸ்தீனில் குழுமினார்கள். மாநாட்டின் முடிவில் பின்வரும் பஃத்வாவை (மார்க்கத் தீர்ப்பை) வழங்கினார்கள்.

“நாங்கள் அல்குத்ஸ் இன் முஃப்த்திகள், இன்றைய தினம், இந்தப் ஃபத்வாவை வழங்கு கின்றோம். பாலஸ்தீனில் நிலங்களை யூதர்களுக்கு தந்திடும் முஸ்லிம்கள், அந்தப் பரிவர்த்தனையில் ஈடுபடும் முஸ்லிம்கள் இவர்களை கபுர்ஸ்தான் களில் (புதையிடங்களில்) அடக்கஞ் செய்யக் கூடாது. அவர்களை எல்லா வகையிலும் புறக்கணிக்க வேண்டும்”

இந்தப் பஃத்வா மார்க்க தீர்ப்பு எல்லா அரபு பத்திரிகைகளிலும் - இந்தியாவில் முஸ்லிம்கள் நடத்திய எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இந்தியாவிலுள்ள உலமா கமிட்டி தலைவர், முஹம்மத் அல் காதிரி அவர்கள், இந்தியாவிலும் இப்படியொரு பஃத்வாவை வழங்கினார்கள்.

அந்த ஆண்டு மக்காவில் குழுமும் ஹஜ்ஜாஜி களிடம் (ஹஜ் கடமையை நிறைவேற்றிட வந்தவர்களிடமும்), பாலஸ்தீன் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட, இந்திய உலமா கமிட்டியிலிருந்து (Ulma Indian Committee) பல உலமாக்கள் மக்கா சென்றார்கள். உலக முஸ்லிம்களிடையே ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

## 1936 பாலஸ்தீன் பொது வேலை நிறுத்தம்

ஆங்கிலேயர்களின் பாலஸ்தீன் கொள்கையை மறுக்கும் முகமாக 19 ஏப்ரல் 1936 ஆம்ஆண்டு ஒரு பொதுவேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார்கள் பாலஸ்தீன் முஸ்லிம்கள். “இந்த அழைப்பு வந்தவுடன் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயே அதிகாரி எம்.ஜி. ஹாலத் தன் லண்டன் எஜமானர்களுக்கு செய்திகளை அனுப்பினான். அதில் நிச்சயமாக ஷவ்கத் அலீ அவர்கள் இந்தப் பிரச்னையை இங்கே (இந்தியாவில்) எழுப்புவார்கள். நான்



அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றேன். நீங்கள் நிலைமை கையை விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.’

இந்நிலையில் யூதர்களும் ஆங்கிலேயர்களும் ஒரு சூழ்ச்சியைச் செய்தார்கள். இந்திய முஸ்லிம் களிடையே ஷியா - சுன்னி பிரச்னையையும், எது ஏகத்துவம்? என்ற ஒரு விவாதத்தையும் உசுப்பிவிட்டார்கள்.

இந்தச் சூழ்ச்சியில் பல முஸ்லிம்கள் வீழ்ந்து விட்டார்கள். முஸ்லிம்களின் ஒற்றுமையைக் காட்டிடும் அளவில் பல மாநாடுகளைக் கண்ட பம்பாய் தான் இந்த வீண் விவாதத்தின் மையமாக இருந்தது. ஒட்டுமொத்த முஸ்லிம் களின் கவனமும் பாலஸ்தீனிலிருந்து சற்றே திரும்பிற்று. இஃது ஆங்கிலேயர்களுக்கும் யூதர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நிலைமையை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்திட ஷவ்கத் அலீ அவர்கள் கிலாபத் இயக்கத்தின் சார்பில் தான் நடத்தி வந்த “ரோஸ்ராமா - இ - கிலாபத்” இதழில் பின்வருமாறு எழுதினார்கள்.

“பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்கள் தாய் நாட்டிற்காகவும், உலக முஸ்லிம்களின் புனித இடங்களுக்காகவும், காலாகால மாய்ப் போராடி வருகின்றார்கள். இதில் அவர்கள் காட்டிவரும் வீரம் அலாதியானது. நான் பம்பாய் முஸ்லிம்கள் தங்கள் நேரங்களைத் தேவையற்ற (உள்மார்க்க) விவகாரங்களில்

செலவு செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்." (Al Jameal al Arabia News 31.6.1936)

அத்தோடு ஆங்கிலேயர்களை இப்படி எச்சரித்தார்கள்.

"ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனில் கையாளும் அணுகுமுறை இந்திய முஸ்லிம்களிடையே கடுங்கோபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனில் தங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளாவிட்டால் அவர்களால் கட்டுப்படுத்திட இயலாத கட்டுங்கடங்காத எதிர்ப்பு ஒன்று இந்தியாவில் எழும்" (மேலே சொன்ன ஆதாரம் : Indian Office London File)



## ஜூன்-9,1936 முஸ்லிம் லீக் மாநாடு

ஜூன் 9ஆம் நாள் 1936 இல் "அகில இந்திய முஸ்லிம் லீக்" ஓர் மாநாட்டை நடத்தியது. அதில் பாலஸ்தீனில் ஆங்கிலேயர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் இந்திய முஸ்லிம்கள் கவலையில் ஆழ்த்துகின்றது. ஜூன் 19ஆம் நாளை பாலஸ்தீன் தினம் என அறிவிக்க வேண்டும். அன்றைய தினத்தை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் நடத்தும் எல்லா பள்ளிக் கூடங்களுக்கும் கட்டாயம் விடுமுறை வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, கிஃபாயத்துல்லாஹ், ஷவ்கத் அலீ, ஜாபர் ஆலீகான், ஷம்சுல் உலமா நஹ்ஹர் அல் ஹஸன், தாவூத் கஸ்னவி, ஆகியோர் பிரகடனப்படுத்தினர். இவர்கள் பாலஸ்தீன் மக்களுக்கு ஆதரவு தரும் கூட்டங்களை இந்தியா முழுவதும் நடத்தினார்கள்.

முஸ்லிம் லீக் - இன் செல்வாக்கின் கீழ் பண்டித ஜவஹர் லால் நேரு போன்றவர்களும் பாலஸ்தீன் முஸ்லிம்களுக்கு ஆதரவாக அறிக்கை விட்டார்கள். பாலஸ்தீனில் ஆங்கிலேயர்கள் மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளைக் கண்டித்தார்கள்.

மகாத்மா காந்தியும் ஆங்கிலேயர்களை வண்மையாகக் கண்டித்தார்.

கல்கத்தாவில் முஸ்லிம் லீக் இன் சார்பில் விடப்பட்ட அறிக்கையில் சிலுவைப் போர்களுக்கு நிகரான போர் ஒன்றை நடத்திட இந்திய முஸ்லிம்களும் உலக முஸ்லிம்களும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

இப்படி தரப்பட்ட நெருக்கடிகளால் அக்டோபர் 13, 1936 ஆம் ஆண்டு பாலஸ்தீனில் நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

**- அடுத்த இதழில் தொடரும்..**



**இவர்** ஒரு வீரம் செறிந்த பெண்மணி. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அநீதியான அறியாமைக் கோட்பாட்டை நிலை நாட்டிட தன் வீரத்தை வீணடித்துக் கொண்டிருந்தார். இஸ்லாத்தை ஆரத் தழுவிடும் முன்னரும் தழுவிய பின்னரும் இவர் ஒரு வீராங்கணையாக இருந்தார் என்றே இவரை வரலாறு வளித்தப் போற்றுகிறது.

மக்காவின் ஏற்றமிகு உயர்குலமாம் குரைஷிக் குலத்தில் பிறந்து புகழ் மேவிய பெண்மணியாய் திகழ்ந்தார். இஸ்லாமிய வரலாற்றில் உமய்யா கலீஃபாக்களின் வரிசையில் முதலாமவராய் இடம் பெறுகின்ற அமீருல் முஃமினீன் முஆவியா (ரழி) அவர்களின் அன்புத் தாயார். அவர் பெயர் ஹிந்த் பின்த் உத்பா (ரழி).

வீரம், விவேகம், துணிச்சல் சொல்வன்மை ஆகிய மெச்சத்தகுந்த குணங்களின் இலக்கிய வாதி. இவர் வாய் திறந்து பேச ஆரம்பித்தால் கவிதைகளும், தத்துவ முத்துக்களும் போட்டி போட்டுக்கொண்டு தெறித்து வந்து விழும். இதனால் அரபுலகத்தில் மிக்குயர்ந்த இடத்தைப் பெற்றார் ஹிந்த் பின்த் உத்பா அவர்கள்.

மல்யுத்த நிகழ்வையும் சொல்யுத்தப் போட்டியையும் நிகரெனக் கொண்டாடியது அன்றைய அரபுலகம். மன்னனின் செங்கோலை விட கவிஞனின் எழுதுகோலே ஏற்றம் நிறைந்தது என்ற நம்பிக்கையில் உறுதியாய் நின்றார்கள் அரபுக்கள். வறுமையைச் சொல்லவும் பெருமையை நிலைநாட்டவும் துக்கத்தைப் பகிரவும் மகிழ்ச்சியை பறைசாற்றவும் எளிய உரைநடைகளுக்குப் பதிலாக வலிய கவிதை களையே பாடி பெருமைப்பட்டுக் கொண்டிருந் தனர் அன்றைய அரபு மக்கள். போர்க்களத் தினுள் புகுந்து பாய்ந்து செல்கின்ற புரவியின் கால் குளம்புகள் கிளரி விடுகின்ற புழுதிகள் பற்றியே பத்து பக்கங்களுக்கு பாடித் தீர்க்கின்ற கவிக்கோமான்கள் வாழ்ந்திருந்த ஒரு தேசத்தில் ஹிந்த் பின்த் உத்பாவும் தன்னுடைய நயம்மிக்க கவிதைகளால் அரபுலகின் கவனத்தை ஈர்த்திருந்தார்கள்.

இனிமையான இளமைப் பருவத்தில் ஹிந்துவுக்கும் ஃபாகிஹாபின் முகீரா அல் மக்சூமி என்பவரக்கும் திருமணம் நன்மக்களின் வாழ்த்துக்களோடு நடந்தேறியது. இருவருக்கு மான உறவின் சாட்சியாக அபான் என்றொரு குழந்தையும் பிறந்தது. எனினும் உறவு தொடர்ந்திடவில்லை. இருவருக்குமிடைய எற்பட மணமுறிவில்தான் முடிந்தது.

இதன்பின்னர் தன் தந்தையார் உத்பாவிடம் இப்படிச் சொன்னார் ஹிந்த்..

“நான் ஒரு அழுத்தமான பெண். எனக்குத் தேவையான முடிவுகளை நானே எடுத்துக் கொள்ளும் வலிமை எனக்குண்டு என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள். எனவே துணை ஏதுமின்றி தனியாக வாழ்ந்துவிடலாம் என்று முடிவெடுத்து விட்டேன். இன்னொரு ஆண் மகனுக்கு என்னை மனைவியாக்கிப் பார்த்து விடலாம் என்று நீங்கள் எண்ணியிருந்தால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்”



# வீரத்தின் விளைநிலம் ஹிந்த் பின்த் உத்பா (ரழி)

தன் அன்பு மகளின் வார்த்தைகளில் தொனித்த உறுதியைக் கண்ட உத்பாவுக்கு "சரி மகளே.." என்று தலையசைக்க மட்டுமே முடிந்தது.

எனினும் ஹிந்த் அவர்கள் தன் முடிவை மறுபரிசீலனை செய்திட வேண்டிய நாள் வராமல் போகவில்லை. ஒருநாள் தந்தை உத்பா கனிவு நிறைந்த கண்களோடு தன் மகளை நோக்கிச் சொன்னார். "மகளே... ஹிந்துவே... உன்னை வாழ்க்கைத் துணையாக்கிட விரும்பி பெண் கேட்டு இரண்டு நபர்கள் என்னை அணுகியுள்ளனர். அவர்களின் பெயர்களை உனக்கு நான் கூற மாட்டேன். அவர்களின் பண்புகளையும் குணங்களையும் எடுத்துரைக் கிறேன். அவற்றை முன்வைத்து நீ ஒரு முடிவெடுத்துக்கொள். முதல் நபர் கீர்த்திமிக்க குலத்தவர். செல்வாக்கு மிக்கவர். பழக இனிமை யானவர். அழைப்புக்கு அழகிய பதிலளிப்பவர். நீ அவரைப் பின்பற்றிச் சென்றால் அவர் உன்னை பற்றிடுவார். நீ ஒரு முடிவெடுத்தால் அதற்கு அவர் கட்டுப்படுவார். சிந்திக்கும் ஆற்றல் அவரிடம் குறைவாக இருந்தாலும் உன் சிந்தனைத் திறன் அதை ஈடுகட்டிவிடும். சுருங்கச் சொன்னால் மென்மையான தன்னடக்க மான, எளிமையான, அமைதியான ஒரு மனிதர்.

இன்னொருவர் உயர் குலத்தவர். சிறந்த சிந்தனையாளர், நற்குணங்களை யாரும் அவருக்குக் கற்றுத்தர வேண்டியதில்லை. அவர் பிறருக்கு அவற்றைப் பயிற்றுவிப்பார். தன்னைப் பின் பற்றுவோரை அழகிய வழியில் அழைத்துச் செல்வார். ரோஷக்காரரர். பொங்கிவரும் கோபத்தை விரைவாக விரட்டி விடுவார். வீழ்த்திவிட முடியாத வீரர். கண்ணியமான வழியில் உழைத்துப் பொருளீட்டி பசியை போக்குகின்றவர். இருவரின் தரத்தையும் தகுதியையும் தந்தை உத்பா தன் மகள் ஹிந்துவிடம் கூறி முடித்தபின் உடன் ஹிந்த் கூறினார்.

முதல் நபர் யாரென்று கூறிட வேண்டாம். அவரின் பெயர் என்னவென்று அறிந்திட எனக்கு ஆர்வமில்லை. இரண்டாவது நபர் எனக்கு ஏற்ற கணவராக இருப்பார் என நம்புகின்றேன். எனவே இரண்டாமவரின் பெயரை மட்டும் கூறுங்கள். தந்தை உத்பா கூறினார்...

அவரின் பெயர் அபூசுப்யான் பின் ஹர்ப் ஆகும் என்று. சரி அபூசுப்யான் அவர்களையே எனக்கு மணமுடித்து வையுங்கள் என்று ஹிந்துவும் இதயப்பூர்வமாக ஒப்புக் கொண்டார்.

அபூசுப்யான், ஹிந்த் இருவருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நிகழ்ந்தது. இருவருக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. முஆவியா என்ற அழகுப் பெயர் சூட்டி அந்த ஆண் மகவை வளர்த்தெடுத்தனர். பொது நலத் தொண்டில் இயல்பாகவே நாட்டம் கொண்ட ஹிந்த் தன்னைப் போலவே தன் குலக் கொழுந்தாம் முஆவியாவையும் வளர்த்தெடுத்தார்.

ஒருநாள் மக்காவின் வீதியில் முஆவியா வையும் தன்னோடு அழைத்துக்கொண்டு ஹிந்த் சென்று கொண்டிருந்தார். எழிலார்ந்த அக்காட்சியைக் கண்ட பெருமக்கள் முஆவியா வின் முகத்தில் இலங்கிப் பொலிந்த வசீகரத்தை வனப்பைக் கண்ணுற்றனர். பின்னர் கூறினர், இவர் பின்னொரு காலத்தில் தன் சமுதாயத்துக்கு தலைமை ஏற்றிடும் வாய்ப்பினைப் பெறுவார் என்று.

இந்தப் புகழுரைகள் ஹிந்துவுக்கு ஒன்றும் பெருமகிழ்ச்சியைத் தந்துவிடவில்லை. தயக்கம் தாமதம் எதுவுமின்றி உடனே சொன்னார் :

"என் மகன் முஆவியா தன் சொந்த சமுதாயத்துக்கே தலைமை ஏற்பார். இல்லை யென்றால் அவர் என்னை இழப்பார். அத்துணை உறுதிகொண்ட நெஞ்சினராய் வார்ந்தவர் அவர்.

அண்ணலார் (ஸல்) அவர்களின் தலைமையில் பாங்காய் அமைந்தது இஸ்லாமிய அரசொன்று மதீனத் திருநகரில், இணைவைப்பு எனும் இழிவை நிலைநாட்டிடும் வெறியோடும் வேட்கையோடும் ஹிந்துவின் கணவர் அபூசுப்யான் பெரும் படையொன்றைத் திரட்டிக்கொண்டு பாளையம் இறங்கியிருந்தார். பத்ரு எனும் இடத்தில் முஸ்லிம்கள் சந்தித்த முதல் அதிகாரப்பூர்வ யுத்தம் அது. இஸ்லாத்தின் எதிரிகள் ஆயுளெல்லாம் அவமானப்பட்டு நிற்கும் அளவுக்கு தோல்வியைச் சந்தித்தனர். ஹிந்துவின் தந்தை உத்பா, சிறிய தந்தை ஷய்பா, சகோதரர் வலீத் பின் உத்பா ஆகியோர் முஸ்லிம்களின் வாள் வீச்சுக்கு தம் கழுத்தைத் தந்துவிட்டு பிணங்களாய்ப் போனார்கள்.

வெல்ல முடியாத வீரர்களாக மக்காவின் வீதிகளில் நெஞ்சில் நிறைந்து வழிந்த மமதை

யோடு நடமாட்டம் போட்டுக் கொண்டிருந்தவர்கள், இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் வீழ்த்துகிறோமா இல்லையா பார் என்று ஆணவத்தின் உச்சத்தில் நின்று அகம்பாவக் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்தவர்கள் என எல்லோரும் அடியோடு சரிந்த மரங்களாய் சவமாகிப் போனார்கள். பத்ருக் களத்தில்.

தன் குடும்பத்தின் தூண்களெல்லாம் காணாமல் போனது கண்டு ஹிந்துவுக்கு சோகக் கவிதைப் பாடுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. கணவர் அபூசுப்யான் உயிரோடு திரும்பி வந்தது ஹிந்துவுக்கு ஆறுதலாய் இருந்தாலும் துக்கம் அவரின் இதயத்தை நிறைத்திருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல ஹிந்துவின் சோகம் கோபமாக மாறியது. கோபம் கொலை வெறியாக வடிவெடுத்து நின்றது. என் குடும்பத்தின் தூண்களை சரித்து நொறுக்கிவிட்ட முஹம்மது (அல்லாஹ்வின் அருள் அவர்கள் மீது என்றென்றும் நிலவட்டும்)வுக்கு தக்கதோர் பாடத்தைக் கற்பிக்கிறேனா இல்லையா பார், என்று காண்போரிடமெல்லாம் கண்களில் வெறியோடும் குரலில் உறுதியோடும் கோபம் கொப்பளிக்கக் கூறிக் கொண்டிருந்தார் ஹிந்த்.

உஹது மலையின் அடிவவரத்தில் ஒரு பெரும் போர் முஸ்லிம்களுக்கும் இணை வைப்பாளர்களுக்கும் இடையே நடத்திட வேண்டும் என்பது ஏகநாயன் அல்லாஹ்வின் ஏற்பாடு. அந்த நாள் நெருங்கிற்று. ஹிந்துவின் கணவர் அபூசுப்யான் பத்ரில் கிடைத்த தோல்வியினை சரிக்கட்ட முழு வீச்சில் ஆயத்தப்பாடுகளோடு களம் இறங்கிடத் தயாரானார். இணை வைப்பாளர்களின் அணிக்கு தலைமை ஏற்றார். இந்த அணிக்கும் தம் பங்கினை சிறப்பாகத் தந்திட ஹிந்துவும் முனைப்பெடுத்துக் கொண்டார்.

போர் வெறியை ஊட்டிடும் கவிதைகளைப் பாடி ஆண்களைப் போருக்குக் கிளம்பிடத் தூண்டினார். பெண்களின் குழுவொன்றையும் தயார் படுத்தினார். மேளங்கள் தட்டி, பாட்டுக்கள் பாடி வீரர்களுக்கு போர் வெறியை ஊட்டவும், அதன் உக்கிரம் தணிந்துவிடாமல் கொதி நிலையிலேயே யுத்தம் இறுதிவதை நடக்கவும் இந்த மகளிர் குழு தன்னார் இயன்றதைச் செய்து கொண்டிருக்கும்.

இது ஒருபுறம் நடந்துகொண்டிருந்தது. மறுபுறம் தன் திட்டத்தை அரங்கேற்றிட ஒருவரைப் பிடித்தார். அவர் வஹ்ஷீபின் ஹர்பு. அடிமையான வஹ்ஷீயிடம் ஹிந்த் ஓர் ஒப்பந்தத்தை முன் வைத்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையும் அவர்களின் பால் குடிவழிச் சகோதரரும், அல்லாஹ்வின் சிங்கம் என்றும், அவனி போற்றும் திருத்தூதர் யாரை சிலாகித்துப் பாராட்டி புளகாங்கிதம் அடைந்தார்களோ அந்த ஹம்ஸா (ரழி) அவர்களைக் கொன்று அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறாத ரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஹிந்துவின் திட்டம். வஹ்ஷீ இதை செய்து முடித்தால் அவரின் விடுதலைக்கு ஏற்பாடு செய்திடவும் தயார் என்றார் ஹிந்த். வஹ்ஷீயின் இதயத்தில் பழி உணர்வை ஊட்டி இந்த பாதகத்தைச் செய்திட அவரை தயார் படுத்தினார்.

இந்த வஹ்ஷீ, ஜுபைர் பின் முத்இம் என்பவரின் அடிமையாவார். ஹழ்ரத் ஹம்ஸா (ரழி) அவர்கள் பத்ருப் போரில் துஆய்மா பின் அதீ என்பவரை கொன்றிருந்தார். அதற்குப் பழி தீர்ப்பதற்காக ஹம்ஸா (ரழி)யைக் கொல்ல வேண்டும் என்று துஅய்மாவின் சகோதரருடைய மகனான ஜுபைர் பின் முத்இம் முடிவெடுத்திருந்தார். தன் அடிமையான வஹ்ஷீயை அழைத்து என் சிறிய தந்தையின் கொலைக்குப் பழிக்குப் பழியாக நீ ஹம்ஸாவைக் கொன்றால் உன்னை அடிமைத் தளையிலிருந்து நான் விடுவிப்பேன் என்று வாக்களித்தார் எஜமான் ஜுபைர்.

இந்நிலையில் ஹிந்துவும் வஹ்ஷீயிடம் வந்து ஹம்ஸாவைக் நீ கொன்றால் உன் விடுதலைக்கு நான் ஏற்பாடு செய்வேன். அத்தோடு வெகுமதிகளையும் வாரி வழங்கிடுவேன் என உற்சாகப் படுத்தினார். அடிமைத் தலையிலிருந்து விடுதலை பெறுவதை விட அதிக பட்ச ஆசை ஒரு அடிமைக்கு வேறென்ன இருக்க முடியும். விடுதலை பெற்ற பின் சுகமானதோர் வாழ்வை அமைத்திட வசதியாக அன்பளிப்புகளும் கிடைக்கும் என்றால் அதைவிட வேறென்ன வேண்டும்?

இதோ வஹ்ஷீ பேசுகின்றார் :

“குரைஷிகளுடன் நானும் போர்க்களம் சென்றேன். மக்கள் போருக்காக அணி வகுத்து

நின்றனர். அப்போது சிபாஉ பின் அப்துல் உஸ்ஸா என்பவன் முன்னால் வந்து என்னோடு யாரேனும் தனியாக மோதத் தயாரா? என்று உரத்தக் குரலில் கேட்டான். அவனை நோக்கி ஹம்ஸா (ரழி) வந்து முன்னால் நின்றார்கள். அவனிடம் மக்காவின் பெண்களுக்கு கத்னா (விருத்தசேதனம்) செய்கின்ற வேலையைத் தொழிலாகக் கொண்ட உம்மு அம்மார் என்பவளின் மகனே... சிபாவே... நீ அல்லாஹ் வுடனும் அவனின் திருத்தூதருடனும் மோது வதற்காக வந்திருக்கிறாய்? என்று கேட்டுவிட்டு அவன்மீது பாய்ந்து ஒரே வீச்சில் தாக்கினார்கள். அவ்வளவுதான் கழிந்துவிட்ட நேற்றைய தினம் போல மறைந்துபோய் விட்டான் சிபாஉ என்பவன்.

நான் (வஹ்ஷீ) ஹம்ஸா (ரழி) அவர்களைக் கொன்றிட வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அவர்களுக்காக ஒரு பாறைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டேன். ஹம்ஸா (ரழி) அவர்கள் என்னை கவனிக்காமல் என் அருகே வந்தபோது எனது ஈட்டியை அவர்களின் தொப்புளுக்குக் கீழே எறிந்தேன். அது குத்திப் பாய்ந்து அவர்களின் பின்புறம் வழியாக வெளியேறியது. அதுதான் ஹம்ஸா (ரழி)யின் உயிரைக் குடித்தது.

பின்னொரு காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வஹ்ஷீயே மேற்கண்டவாறு கூறினார்.

அல்லாஹ்வின் பாதையில் ஏகத்துவ நெறியை நிலை நாட்டிடும் அறப்போரில் ஷஹீத் என்ற உயர்ப் பதவியை அடைந்த ஹம்ஸா (ரழி)யின் உடலருகே ஹிந்த் வந்தார். அவர்களின் வயிற்றை கிழித்து ஈரலை எடுத்து நறநறவென மென்று துப்பினார். ஒரு குன்றின் மீது ஏறி நின்று கொண்டு அடித்தொண்டையில் கத்தினார். "பத்ரு தினத்திற்கு இன்று நான் பழி தீர்த்துக் கொண்டேன்.." என்று தொடங்கி "எனது கப்ரில் என் எலும்புகள் மக்கிப் போகும்வரை ஆயுளெல்லாம் வஹ்ஷீக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்." என்று முடியும் ஹிந்துவின் வார்த்தைகள் கவிதைகளாகவே வெளிப் போந்தன. இணைவைப்பின் இழிவுக்குக் கிடைத்த அற்ப வெற்றியில் ஹிந்து குதூகலித்துக் கிடந்தார்.

இவரின் திறமையும் ஆற்றலும் மதிநுட்பமும் துணிச்சலும் தூய நெறியாம் இஸ்லாத்திற்குப் பயன்பட வேண்டும் என்பது எல்லாம்வல்ல அல்லாஹ்வின் நாட்டம். அது நடைபெற வேண்டிய காலம் வந்தது. ஹிந்துவின் கணவர் அபூசுப்யான் மக்கா வெற்றிகொள்ளப்பட்ட இரவின் மாலை நேரத்தில் ஊருக்கு வெளியே அண்ணல் நபியைச் சந்தித்துவிட்டு அவர்களிட மிருந்து மக்காவுக்குள் வந்து, "குரைஷிகளே... தெரிந்துகொள்ளுங்கள்... தூய நெறியாம் இஸ்லாத்தை நான் ஏற்றுக்கொண்டேன். நீங்களும் அதை ஏற்று நேர்வழியில் வாருங்கள். எல்லாம்வல்ல ஏக இறைவனின் திருத்தூதராம் நபி (ஸல்) அவர்கள் முன்னெப்போதும் நீங்கள் அறிந்திடாத அளவுக்கு பெரும் படையுடன் உங்களிடம் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே (அபூசுப்யானாகிய) என் வீட்டில் நுழைந்து கொண்டவரெல்லாம் பாதுகாப்புப் பெறலாம்" என்று அறிவித்தார்.

அதனைக் கேட்டதும் ஆவேசத்துடன் எழுந்தார் ஹிந்த். தன் கணவரின் மீசையைப் பிடித்து உலுக்கி, "நீ மகா மோசமானவன்" என்றார். "மக்கா வாசிகளே... இந்த அழுக்குப் பிடித்த, வலுவிழந்த, விழுங்கப்பட்ட மனிதரைக் கொன்று விடுங்கள். நம் கண்முன் தெரிகின்ற மனிதர்களிலெல்லாம் அற்பமானவர் இவரே" என்று கோபத்தில் குதித்தார் ஹிந்த். அதற்கு "மக்களே இவளின் பேச்சு உங்களை ஏமாற்றிவிட அனுமதிக்காதீர்கள். நிச்சயமாக பெரும் படை உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. என் வீட்டில் நுழைந்துகொண்டவரே பாதுகாப்புப் பெறலாம்" என்றார்கள் அபூசுப்யான் (ரழி). அதற்கு "நீர் இழிவடைவீராக உம் வீடு தரும் பாதுகாப்பு எங்களுக்குத் தேவையில்லை" என்றனர் மக்காவாசிகள்.

யார் தன் வீட்டுக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக் கொள்கிறாரோ அவருக்கும், கஃபா எனும் திரு ஆலயத்தினுள் நுழைந்து கொள்வோருக்கும் பாதுகாப்புக் கிடைக்கும் என்று அபூசுப்யான் (ரழி) அறிவித்த உடன் அவ்வாறே அபயம் தேடி மக்கள் நுழைந்துகொண்டனர்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட இரண்டாம் நாள் தன் கணவரிடம் மெதுவாக வந்தார் ஹிந்த். கனிவான குரலில் உறுதியாகச் சொன்னார் :

"முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்தை தழுவிட என் மனம் விரும்புகின்றது.

என்னை அவர்களிடம் அழைத்துச் செல்வீர்களா?" இதைக்கேட்டு ஆச்சரியத்தின் உச்சத்துக்கே போய்விட்டார்கள் அபூசுப்யான் (ரழி) அவர்கள். "நேற்றுவரை இந்த மார்க்கத்தை கடுமையாக வெறுத்துக் கொண்டிருந்தாயே என்ன திடீர் மாற்றம்" என்று வினவினார். அதற்கு ஹிந்த், "முஸ்லிம்கள் இந்த இரவில் கஃபா எனும் திரு ஆலயயத்தில் வணங்குகின்ற காட்சியினைக் கண்டேன். நின்றபடியும் குனிந்தவண்ணமாகவும் ஸஜ்தாவின் வீழ்ந்த வாறும் முஸ்லிம்கள் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டே இருந்தார்கள். யாரும் இந்த இறை யில்லத்தில் அல்லாஹ்வை இப்படி முறைப்படி வணங்கிடுவதை இதுவரை நான் கண்டதே-யில்லை" என்றார் ஹிந்த்.

அபூசுப்யான் (ரழி) ஹிந்துவிடம் "நீ இஸ்லாத்துக்கு எதிராக பயங்கரவாரதச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாய். எனவே நான் உன்னை நபியிடம் அழைத்துச் செல்வதைவிட உன் குலத்தைச் சார்ந்த வேறு ஒரு முஸ்லிமுடன் நீ செல்வதே சரியானதாக இருக்கும்" என்றார். உடனே ஹழ்ரத் ஸ்மான் (ரழி) அவர்களின் அண்ணல் நபியைத் சந்தித்து இனிய இஸ்லாத்தை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டார் ஹிந்த்.

அந்த மணித்துளி முதல் (ரழி) அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர் என்ற பெரும் பாக்கியம் பெற்றவர்களின் அணியில் அழகாய் இணைந்தார். கருணையின் வடிவான எம்மான் (ஸல்) அவர்கள் ஹிந்த் (ரழி)யை கசடற மன்னித்தார்கள். அண்ணலாரின் மன்னிக்கும் மாண்புயர் குணத்துக்கு இதை சிறந்த சான்றாக சரித்திரம் சாற்றிக் கொண்டிருக்கிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார் ஹிந்த் (ரழி). அல்லாஹ்வுக்கு யாரையும் எதையும் இணையாக்கக்கூடாது. திருடக் கூடாது, விபச்சாரம் செய்யக்கூடாது, உங்கள் குழந்தைகளை கொலை செய்யக்கூடாது என்று நபிகளார் (ஸல்) அவர்கள் கூறிக்கொண்டே வரும்போது இடையிடையே தன் கருத்துக் களையும் கூறி சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றுக் கொண்டார்.

திருடக்கூடாது என்று கூறியபோது என் கணவர் அபூசுப்யான் தேவையைவிடக் குறைவாகவே குடும்பச் செலவுக்கு பணம் தருகிறார். எனவே அவரின் சட்டைப் பைக்குள்ளிருந்து நான் பணம் எடுத்தால் அது திருட்டு ஆகுமா? என்று கேட்டார் ஹிந்த். அதற்கு, நீதமான முறையில் உனக்கும் உன் குழந்தைகளுக்கும் போதுமான அளவுக்கு (மட்டும் ஆடம்பரத்துக்கா அல்ல) எடுத்தால் அது திருட்டு அல்ல என்றார்கள்.

விபச்சாரம் செய்யக்கூடாது என்று கூறிய போது, ஒரு சுதந்திரமான பெண் விபச்சாரம் கூடச் செய்வாளா? என்று வியப்புடன் வினவினார்கள்.

உங்கள் குழந்தைகளை (வறுமைக்கு அஞ்சியோ வேறு காரணங்களுக்காவே) கொல்லக்கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, எங்களின் குலக்கொழுந்துகள் யாரையும் பத்ருப் போரில் நீங்கள் கொல்லாமல் மிச்சம் வைத்துள்ளீர்களா? என்று நபியைப் பார்த்துக் கேட்டுவிட்டு நம் குழந்தைகள் சிறு வயதினராக இருக்கும்போது பாதுகாப்பாக பராமரித்து பின்னர் பெரியவர்களான உடன் அவர்களை நாமே கொன்று விடுகின்றோம் என்றார் ஹிந்த் (ரழி) வேதனை கலந்த கிண்டலுடன்.

ஹிந்த் (ரழி)வின் மேற்கண்ட பேச்சுக்கள் இஸ்லாத்தின் வழியின்படி வாழ்வதில் அவர் களுக்கிருந்த ஆர்வத்தையும் ஒழுக்கத்தின் மீது அவர்களுக்கிருந்த பிடிப்பையும் மனதில் பட்டத்தை ஒளிவு மறைவின்றிப் பேசும் குணத்தையும் தெள்ளெனச் சொல்கின்றன.

இந்தத் திறமைகளையும் நற்குணங்களையும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத் தந்திட முன்வந்தார் ஹிந்த் (ரழி). இஸ்லாம் உருவாக்கிய முன்மாதிரி முஸ்லிம் பெண்மணியாக வரலாற்றில் இடம் பிடித்தார். இஸ்லாத்தையும் அதன் ஆட்சியையும் அதன் கலாச்சாரத்தையும் காத்திட தன் இன்னுயிரையும் தந்திடத் துணிந்தார்.

கி.பி.634ஆம் ஆண்டு உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் சிலுவை வணங்கிகளான ரோமானிய பைசாண்டியப் பேரரசுக்கு எதிராக நடந்த பிரபலமான யர்மூக் யுத்தத்தில் தம் கணவர் அபூசுப்யான் (ரழி)யுடன் பங்கேற்றார் ஹிந்த் (ரழி) அவர்கள். இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பைசாண்டிய வீரர்களை எதிர்த்து

வெறும் நாற்பதாயிரம் முஸ்லிம்கள் போரிட்டு வெற்றிவாகை சூடிய அந்த யர்மூக் போரில் ஹிந்த் (ரழி) அவர்கள் விழுப்புண்களை ஏற்றார்கள். 'அல்லாஹ்வின் அடிமைகளே... அல்லாஹ்வின் எதிரிகளை நோக்கி கொடு வாளைக் கையில் ஏந்தி விரைந்து தாக்குங்கள் என்று கம்பீரமாக முழங்கிக்கொண்டே முஸ்லிம் வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந் தார்கள் ஹிந்த் (ரழி) அவர்கள்.

தன் வாழ்நாளில் எஞ்சிய பகுதி முழுவதையும் இறைவழிப் போரில் கழித்திடவே ஆர்வம் காட்டி நின்றார் அவர். ஹிஜ்ரி பதிநான்காம் ஆண்டு உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே எல்லாம் வல்ல ஏக இறைவனின் அழைப்பை ஏற்று அவனிடம் சென்று சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி.


ஆரம்பக் காலத்தில் அக்கிரமக் கொள்கையை நிலைநாட்டிட உழைத்த ஹிந்த். பின்னாளில் தூய அறநெறிக்காக தன் உயிரையும் தந்திடத் துணிந்தார். இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிடும் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் விடுதலையையும் அறிந்துணரும் எந்தப் பெண்ணும் இதைவிடச் சிறந்த வேறெந்த மார்க்கத்தையும் காண மாட்டாள்.

எனவே இந்த மார்க்கத்தை பரவச் செய்யவே தன் உழைப்பைத் தருவாள். அதற்கு ஹிந்த் (ரழி)யின் வாழ்க்கை ஓர் உன்னதச் சான்று.

ஒரு சமுதாயத்தின் கவுரவச் சின்னமான பெண் இனத்தை ஆபாச உடைதரித்து அழகுப் பதுமையாக்கி விற்பனைச் சரக்காக ஆக்கிட முனையும் பொல்லாத போக்கிரிகளை இனம் காண வேண்டும். முஸ்லிம் பெண்மணிகளின், போராட்டம் என்ற பெயரில் பெண் இனத்தை சந்திக்கு இழுத்து சந்தைப் பொருளாக ஆக்கிடும் சதிக்கு ரோஷமுள்ள தாய்மார்கள் பலியாக மாட்டார்கள் என்பது திண்ணம்.



## இப்போது பரபரப்பான விற்பனை



# சிலுவைப் போர்கள் 2.0 தொடர்...

ஆங்கிலம் : **JOHN FEFFER**  தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




*ஜான் பெஃபர் கூறுகின்றார்...*

**இஸ்லாமோ ஃபோபியாவை -** *பிரச்சாரம் செய்பவர்கள் - பெரிய ஆபத்தாக ஒன்றை கருதுகின்றார்கள். அது இஸ்லாமிய இயக்கம்தாம்.*

*இந்த இஸ்லாமிய இயகக்த்தை சார்ந்தவர் களைத்தான்* Mainstream *பொது தளத்தில் இயங்கும் முஸ்லிம்கள் என அறிவித்து வருகின்றார்கள். (பார்க்க அடிக்குறிப்பு-1)*

இஸ்லாம், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், அரசியல் ரீதியான முன்னேற் றங்களையும் தடுக்கும் என்ற பிரச்சாரம் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கு மறுப்பாக பல வரலாற்றுத் தடங்கள். மொத்த ஐரோப்பாவும் இருட்டிலிருந்தபோது இஸ்லாம் விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டது. இன்றைய மேலைநாட்டு விஞ்ஞான வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தந்தது இஸ்லாம்தான். இது வரலாற்று உண்மை.

*உண்மையை மறுக்க முடியாத, இஸ்லாமோ ஃபோபிஸ்ட்டுகள் (இஸ்லாத்தை வெறுப்பவர்கள்) ஒரு சப்பைக் கட்டை பதிலாகத் தருகின்றார்கள்.*

*அது, அன்றைக்கு இஸ்லாம் விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டது என்பது உண்மைதான். ஆனால் இன்றைக்கு இஸ்லாம் பிற்போக்குத் தனமானது என்பதே உண்மை. இன்றைக்கு மேலைநாடுகள்தாம் விஞ்ஞான கண்டுபிடிப்பு களில் முன்னே நிற்கின்றது.*

*இதனை பெர்நார்டு லுயிஸ், இப்படி குறிப்பிடுகின்றார். மத்திய காலக்கட்டத்தில் இஸ்லாம், இஸ்லாம் புதிய, புதிய கண்டு பிடிப்புகளைக் கண்டெடுத்து, உலகுக்குத் தந்தது என்பது உண்மைதான். இஸ்லாம் புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தந்த உற்சாகம் அலாதியானது. ஆனால், அன்றைய நாட்களில் மேலை நாடுகள் காட்டுமிராண்டிகளாக இருந்தன என்பதும் உண்மைதான். ஆனால் இன்றைய இஸ்லாம் புதிய கண்டுபிடிப்பு களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் ஒருபெரும் தடையாக இருந்து வருகின்றது என்பதுதான் உண்மை. (பார்க்க அடிக்குறிப்பு-2)*

*ஜான் பெஃபர் கூறுகின்றார்...*

*என்னைப் பொறுத்தவரை இஸ்லாத்தை வெறுப்பவர்களின் இந்தக்கூற்று நியாய மானதல்ல.*

*குறிப்பாக சிலுவைப்போர் 2.0 நடக்கும். இந்தக் காலக்கட்டத்தில் இது நிச்சய நியாயமான குற்றச்சாட்டல்ல.*

*நமது கண்களின் முன்னே துருக்கி ஒரு*

ஜனநாயக நாடாக வளர்ந்து வருகின்றது. அதுதான் வெளிநாட்டு உறவுகளும் கொள்கை களும் சிறப்பானதாக இருக்கின்றது. அது உலக நாடுகளின் வெளிநாட்டு கொள்கைகளின் மேல் ஆதிக்கம் செலுத்துவதாக இருக்கின்றது.

இந்தோனேசியாதான் உலகிலேயே அதிகமான முஸ்லிம்கள் வாழும் நாடு. அதுதான், இன்று தென்கிழக்கு நாடுகளின் மிகப்பெரிய பொருளதார நாடு. உலக அரங்கில் பொருளா தார வரிசையில் 18 பதினெட்டாவது வரிசையில் இருக்கின்றது.

இந்த இரண்டு நாடுகளிலும், இஸ்லாத்தால் ஊட்டம் பெற்ற நாடுகள் எல்லாத் துறைகளிலும் நன்றாகவே செயல்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் தாங்கள் வளர்ந்த பின் ஜனநாயகத்தை புறந்தள்ளி விடவில்லை.

தேர்தல்களின்போதும், இந்த இரண்டு நாடுகளும் எல்லாவிதிகளையும், முறையாகவே பின்பற்றின. தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் அதே விதிகளையே பின்பற்றின. 1990 முதலே இந்த நாடுகள் நெறிபிறழா ஜனநாயக நாடுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

பிலிஃப் ஹாவர்டு (Philp Howard) என்பவர் எழுதுகின்றார் :

23 முஸ்லிம் நாடுகள், சிறந்த ஜனநாயக நிறுவனங்களை நிறுவி இருக்கின்றன. நியாயமான முறையில் தேர்தல்களை நடத்தி இருக்கின்றன. தரமான அரசியல் கட்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்திருக்கின்றன. மக்களுக்கு அதிகமான உரிமைகளைத் தந்திருக்கின்றன. (Greater Civil Liberties) அதேபோல் பத்திரிகை யாளர்களுக்கு சிறந்த பாதுகாப்புகளைத் தந்திருக்கின்றன. இந்தக் கருத்துகளை பிலிப் ஹாவர்டு தான் எழுதிய The Digital Origins of Disctatorship and democracy என்ற நூலில் விவரித்திருக்கின்றார்.

அமெரிக்கா, தீவிரவாத இயக்கங்கள் என பட்டியலிடுகின்ற பல இயக்கங்கள், அரசியலில் ஈடுபடுவது என முடிவெடுத்துள்ளன. எடுத்துக் காட்டாக ஹிஸ்புல்லாஹ்வையும், ஹமாஸ்-ஐயும் குறிப்பிடலாம். இந்த இரண்டு அமைப்புகளும், பொதுமக்களை ஒருங்கிணைப்பதில் மகத்தான பங்காற்றியுள்ளன. ஹிஸ்புல்லாஹ் லெபனானில் இதைச் செய்தது. ஹமாஸ் காஸாவில் இதைச் செய்தது. பொதுமக்கள் சேவையில் இணையற்று நின்றன.

இந்த இரண்டு அமைப்புகளும் தீவிரவா தத்தைக் கைவிட்டுவிட்டு அரசியலில் அதிகக் கவனம் செலுத்தின. 1992இல் ஹிஸ்புல்லாஹ் தேர்தலில் கலந்துகொண்டது. அன்றிலிருந்து லெபனானின் நாடாளுமன்றத்தில், அங்கம் வகித்து வருகின்றது. பல நேரங்களிலும் லெபனானி அரசில் பல பொறுப்புகளையும் ஏற்றது. சிறப்பாகப் பணியாற்றியது.

ஹமாஸ், 2006 காஸாவின் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றது. காஸாவின் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஜனநாயக வெற்றியை அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அமைப்பின் மீது கெடுபிடிகளைக் கட்டவிழ்த்துவிட்டன. அரசியல் ரீதியாகவும் இந்த இயக்கங்களையும் புறக்கணித்தார்கள்.

ஹமாஸ்-வும் ஹிஸ்புல்லாஹ்வும் இராணுவப் பிரிவு ஒன்றை வைத்திருக்கின் றார்கள். ஆனால் அவர்கள் தற்கொலை தாக்குதல்களை நிறுத்திவிட்டார்கள். அவர்களின் 90% வேலைகள் சமுதாய சேவைகள், நல்வாழ்வு திட்டங்கள், கலாச்சார மேம்பாட்டுப் பணிகள் கல்வி உதவிகள் என்றாகிவிட்டன. அவர்களிடம் இராணுவப் பிரிவு இருந்தாலும், அரசியல் வாய்ப்புக் கிடைத் தால் அதைப் பயன்படுத்திட அவர்கள் தயங்கிடவில்லை நன்றாகவே பயன்படுத்தி னார்கள். - தொடரும் இன்ஷாஅல்லாஹ்

**குறிப்பு-1**

மேலை நாடுகள் எப்போதும், ஜனநாய கத்தைத் தூக்கிப் பிடிப்பது வழக்கம். ஆனால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய நாடுகளில் ஜனநாயகம் வேண்டும் என வேண்டுவதில்லை. இந்த வேண்டிய நாடுகள் எனப்படுபவை. அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளுக்கு அடிமைப் பட்டுக்கிடப்பார்கள். குறிப்பாக, அரபு நாடுகள். அவர்கள் இஸ்லாமியவாதிகளை, அதாவது, இஸ்லாத்தை நிலைநாட்டுவதை தங்கள் இலட்சியமாகக் கொண்டவர் களைத் தங்கள் எதிரிகளாகக் கருது

கின்றார்கள். அல்லாமல் தங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் மன்னராட்சி களை அல்ல.

இது - இந்த அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளின் இரட்டை நிலையை உறுதிபடுத்துகின்றன.

**குறிப்பு-2**

Bernard Lewis; Islam might have encouraged innocation in the middle ages, when the west was in ts barbaric infancy.

முஸ்லிம் உலகம் ஒரு காலக்கட்டத்தில் சொகுசான வாழ்க்கையில், தன் கவனத்தை முழுக்க முழுக்க திருப்பிக் கொண்டது. ஆடம்பரம், அதிகரிக்க, அதிகரிக்க அறிவுத் தேடலில் அக்கறை அற்றுப் போயிற்று.

அவர்கள் இஸ்லாத்தின் அரிய கருத்து களிலிருந்து தங்களை அப்புறப்படுத்திக் கொண்டார்கள். இஸ்லாத்தை சில சடங்கு சம்பிரதாயங்கள் - தொழுகை - நோன்பு - முதலாயக் கடமைகள் என்ற அளவில் நிறுத்திக் கொண்டார்கள்.

மேலை நாட்டவர்களில் தொடர்ந்து முஸ்லிம்களுக்கெதிராக சதிகளை நிறைவேற்றி வந்தார்கள் கொடூரம் நிறைந்த கொலைகளை செய்யும், ஆயுதங் களைக் கண்டுபிடித்தார்கள். அவற்றைக் கொண்டு முஸ்லிம் நாடுகளைத் தங்கள் அடிமைகளாக நடத்தினார்கள். இந்த முஸ்லிம் நாடுகளில் உள்ள கனிம வளங்கள் ஏகபோக உரிமையாளர்களாக ஆனார்கள். சவுதி அரேபியா, ஈரான், ஈராக், சிரியா இப்படிப் பல நாடுகளைக் குறிப்பிடலாம்.

இந்த மேலைநாடுகள் அடித்த அடியில் முகிழ்ந்த இஸ்லாமிய இயக்கங்கள்தாம் இஸ்லாத்தின் ஆரம்பகால கண்டுபிடிப்பு களைத் தொடர்ந்தன. ஆனால் மன்னராட் சிகளும், சுல்தான்களும் சுகபோக வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்ததால் அவர்கள், அறிவுத்துறையின் வாயல்கள் அனைத்தையும் அடைத்துவிட்டார்கள்.

இவர்களை லாவகமாகக் கையகப் படுத்திக் கொண்ட மேலை நாடுகள் - இவர்களுக்கு உல்லாசபுரிகள் அமைத்துத் தந்து, சொகுசு கார்களைத் தயாரித்துக் தந்து கவனத்தை வேறு பக்கமே வைத்திருந்தார்கள்.

இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள் தலையெடுத்தபோது, இந்த நாடுகள் விஞ்ஞானத்தில் வளர்ந்தன.

துருக்கி, ஈரான், மலேசியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இதில் முன்னுக்கு வந்தன.

அமெரிக்காவின் ஆய்வு நிறுவனம் தருகின்ற தகவல்களின்படி இந்த நாடுகளிலிருந்து வருடத்திற்கு 15,000 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிருக்கின்றன. ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்கா முதற் கொண்ட நாடுகளிலிருந்து எந்த ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்த வில்லை. Mantrix Institute Radioma

இந்த ஆய்வை வைகறை வெளிச்சம்,
இதழிலும் விரிவாக
வெளியிட்டிருக்கின்றோம்.





நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து

# 48வது சென்னை புத்தகக் காட்சியில் வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடுகள்
















PERIYAR BOOKS






637
DRAVIDIAN STOCK
REDMI NOTE 12 PRO 5G


116
பனுவல்
Rs.180/-
Rs.200/-
Rs.180/-
Rs.250/-
தாய்
REDMI NOTE 12 PRO 5G


40% கழிவு
பலி கடாக்கள்
தாய்
40%




# இவர்களுக்கு மட்டும்தான் சர்க்கரை நோய் வராது..

Dr. S. அருண் சொருபி, M.D.(S),M.A., (Yoga), சித்த மருத்துவர்

மருத்துவர் **கு.சிவராமன்**

**7 வயதுடைய** ஒரு பெண் குழந்தை. பேரழகான கற்பனைக்கு எட்டாத அழகிய குழந்தை. அந்தக் குழந்தைக்கு மூளையின் உட்பகுதியில் ஒரு கட்டி. "புகைப்பிடித்தால் புற்றுநோய் வரும், மது அருந்தினால் குடலில் பிரச்னை வரும் என்று சொன்னீர்கள், என்ன ஐயா பண்ணினது என் குழந்தை, ஏன் இப்படி நடந்தது?" என்று குழந்தையின் தாய் மருத்துவரிடம் கண்ணீருடன் கேட்கிறார். அப்படி ஒரு கட்டியை அக்குழந்தைக்குக் கொடுத்ததில் நமக்கும் பங்கு இருக்கிறது.

சர்க்கரை நோயை வெல்ல வேண்டும் என்றால் மருந்துகள் மட்டும் போதாது. அது நவீன மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், சித்த மருத்துவம், யோகா என எந்த மருத்துவமாக இருந்தாலும் சரி, அதை வைத்து மட்டும் நோயை வெல்ல முடியாது. மருந்துகள் தற்காலிகமாகக் குறைத்து வைக்கும். கஷாயங்களும் அப்படித் தான், யாரொருவர் காலை உணவு, மதிய உணவு. இரவு உணவு இப்படித்தான் என்று உணவில் கட்டுப்பாட்டுடனும் பிடிவாதமாகவும் இருக்கிறார்களோ அவர்கள் மட்டும்தான் தொற்றா நோய்களை (NCD) வென்றுகொண்டு வருகிறார்கள்.

யார் சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்? உணவில் கட்டுப்பாடு உள்ளவர்கள் மட்டும்தான். "ஐயா, மைத்துனர் வீட்டுத் திருமணம், மைசூர் பாக் வேண்டாம் என்று எப்படிச் சொல்வது?" என்பவரால் சர்க்கரையைக் கட்டுப்படுத்த முடியாது.

கட்டுப்படாத சர்க்கரை நோயாளிகள், கட்டுப்படாத ரத்த அழுத்த நோயாளிகளுக்கு அவர்களின் ஆயுட்காலத்தில் 30 வருடம் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் இருந்தால், அந்த 30 வருடத்தில் கடைசி 10 வருடம் சிறுநீரகச் செயலிழப்பு, விழித்திரை நோய், மாரடைப்பு, புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம்.

"நேற்றுவரை நல்லாத்தான் இருந்தார் ஐயா. இன்றைக்குத் திடீரென்று இறந்துவிட்டார். அதற்கு முன்னால் நாங்கள் ஒன்றாகத்தான் தேநீர் குடித்தோம். நினைத்தாலே பயமாக இருக்கிறது, எனக்கும் அதேபோல் லேசாக நெஞ்சு வலிக்கிறது" என்று சொல்லிக்கொண்டு நிறைய பேர் வருவார்கள். அப்படியான மரணங்களை நாம் எல்லோரும் பார்த்திருப்போம். செய்தித் தாள்களில் 34 வயதே ஆன இளைஞர்



முந்தைய தினம் படுத்து மறுநாள் காலையில் எழவில்லை" என்று பார்க்கிறோம். அதுகுறித்துத் திருநெல்வேலியைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் டாக்டர் மாணிக்கம் என்பவர் 45 அறிஞர் களுடன் சேர்ந்து ஒரு முக்கியமான ஆய்வறிக் கையை வெளியிட்டார்.

இந்தியா முழுவதும் 2022 அக்டோபரிலிருந்து மார்ச் 2023 வரை எத்தனை மரணங்கள் நிகழ்ந்தன? முந்தைய நாள் நன்றாக இருந்து மறுநாள் காலை எழவில்லை என இந்தியா விலுள்ள மருத்துவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு ஆய்வை வெளியிட்டார்கள். அப்படி மொத்தம் 22,500 பேர் இறந்திருக்கிறார்கள். ஒருவேளை கொரோனா காரணமாக இருக்குமோ? கொரோனா தடுப்பூசியினால்தான் நிகழ்ந்ததோ? இப்படி அனைவருக்கும் ஒரு சந்தேகம் ஓடிக்கொண்டே இருக்கிறது. அதையும் ஒரு மையமாக வைத்து ஆராய்ச்சி செய்கிறார்கள்.

அப்படி இறந்துபோனவர்களில் 250 பேரைத் தேர்ந்தெடுத்து, அதே வயது, அதே பாலினம் (ஆண் / பெண்), கிட்டத்தட்ட அதே வாழ்வியல் (அலுவலகப் பணி, விவசாயம், வணிகம்) என உயிரோடு இருப்பவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 4 - 5 முக்கியத் தகவல்கள் கிடைத்தன.

1. கொரோனா தடுப்பூசியால் நிகழ்ந்தது போலத் தெரியவில்லை

2. இறந்தவர்களின் குடும்பத்தில் அல்லது உறவினர்களில் யாரோ ஒருவர் 45 வயதில் இறந்திருக்கிறார்கள்

3. அவர்களின் மரபில் ரத்தநாளச் செயல்பாடு 45 வயதில் பாதிக்கப்பட்டிருந்தால் நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதில் நமக்கான செய்தி என்ன வென்றால், நம் குடும்பத்தில் யாராவது 40-45 வயதில் மாரடைப்பு வந்து ஒரு பெரிய மரணம் அல்லது நோய் பெற்றிருந்த சூழல் அமைந்திருந்தால் நாம் 45 வயதில் சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

**திடீர் மரணங்களின் காரணங்களைப் பார்க்கும்போது...**

- நாளையே சல்மான்கான்போல் ஆறு அல்லது எட்டு பேக் தசைகள் வைக்க வேண்டும் என்று நினைத்து இறந்து போனவர்கள் - 10%
- கடும் உடல் உழைப்போடு உடற்பயிற்சி நிலையத்துக்குச் சென்று 2-3 மணி நேரம் உடற்பயிற்சி செய்து இறந்துபோனவர்கள் - 10%
- பிஞ்ச் டிரிங்கிங் (அளவுக்கதிகமான மதுப்பழக்கம் - குறுகிய காலத்தில் அதிக அளவு மது அருந்துவது) - 13%
- கட்டுப்பாடில்லாத சர்க்கரை நோயாளிகள் - 10%

மது அருந்துவதே தவறு; அதில் அளவுக்கு அதிகமாக அருந்துவது மிகப்பெரிய தவறு. இப்படி மது அருந்துபவர்கள் 12% பேர். மற்ற 10% பேர் யார் தெரியுமா? கட்டுப்பாடு இல்லாத சர்க்கரை நோயாளிகள். "நான் நன்றாக இருக்கிறேன். இவர்கள்தான் எனக்கு ரத்த அழுத்தம், சர்க்கரை என்று சொல்லி மருந்து எடுக்கச் சொல்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள். அவர்களும் இறந்துவிட்டார்கள்.

இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது... நம்முடைய அடுத்த தலைமுறையினரோ, நம் இளைஞர்களோ, நம் குழந்தைகளோ இத்தகைய ரத்த அழுத்தம், சர்க்கரை நோயின் பிடியில் சிக்காமல் இருக்க, குறைந்த கிளைசீமிக் குறியீட்டு (Glycemic Index) உணவுகள், கீட்டோ உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**கீட்டோ உணவுகள் என்றால் என்ன?**

- புரதம்கூடுதலாக இருக்கக்கூடிய உணவுகள்
- சர்க்கரையை வேகமாக ரத்தத்தில்

சேர்க்காத உணவுகள்

மிகவும் முக்கியமாக, புற்றுநோயின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. உலகப் புற்றுநோய் தினத்தின்போது வெளியான புள்ளிவிவரங்களின்படி...

- மார்பகப் புற்றுநோய்
- முன்னிற்கும் கரப்பி (Prostate) புற்றுநோய்
- பெருங்குடல் (Colon) புற்றுநோய்

ஆகியவை அதிகரித்துள்ளன.

இதில் நாம் புரிந்துகொள்ள வேண்டியவை...

- பெரும்பாலான புற்றுநோய்களுக்குக் காரணங்கள் மரபு ரீதியானவை அல்ல.
- 10-15%மட்டுமே மரபு சார்ந்த காரணங்கள்
- 85% சுற்றுச்சூழலும் உணவுமே காரணம்

நம் உணவுகளிலும் சூழலிலும் இருக்கக் கூடிய மாசுக்கள்தான் 'எபிஜெனெடிக் சேதம்' (Epigenetic Damage) என்கிற மரபணு மாற்றமில்லாமல் ஜீனைப் பாதிக்கக்கூடிய தன்மையை உருவாக்குகிறது. இந்த வறட்சிக் காலத்தையும் சிறிது யோசித்துப் பாருங்கள். வறட்சிக்காலத்தில் விளையக்கூடிய காய்கறிகளிலும் தானியங்களிலும் சேர்ந்திருக்கக்கூடிய நச்சு ரசாயனங்கள் நமக்குள் ஒரு பிரச்னையை உருவாக்கும்.

**முக்கியப் பரிந்துரைகள்**


1. உணவுக் கட்டுப்பாடு மிக முக்கியம்


2. குடும்ப மருத்துவ வரலாற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

3. தவறான பழக்கவழக்கங்களைத் தவிர்க்க வேண்டும்

4. முறையான உடற்பயிற்சி அவசியம்

5. தொடர் மருத்துவப் பரிசோதனை அவசியம். ஆரோக்கியமான வாழ்க்கை முறையே நோய்களைத் தடுக்கும் சிறந்த வழி. நமது முன்னோர்கள் சொன்னதுபோல், 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்பதை மனத்தில் கொள்வோம். **- நன்றி முதுமை எனும் பூங்காற்று**





உண்மைச் சம்பவம்




# ஆன்லைன் மோசடியிலிருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பினேன்!

பத்மஸ்ரீ டாக்டர் **வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர்

**ஆன்லைன் மோசடி (Cyber Crime) என்றால் என்ன ?**

**ஒரு** தனிநபரையோ, ஒரு குழுவில் உள்ள நபர்களையோ நவீன காலத் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கிலோ, உடல் அல்லது மனதுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ துன்பம் தரும் குற்றங்களை ஆன்லைன் மோசடி எனலாம்.

சுமார் 10 நாட்களுக்கு முன்பு ஒரு வியாழக் கிழமை மாலை 4 மணி அளவில் எனது செல்போனில் ஓர் அழைப்பு வந்தது. அதில் மகாராஷ்ட்ரா, மும்பை என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. "சார் உங்கள் பெயர் டாக்டர் வி.எஸ்.நடராஜனா? (ஆங்கிலத்தில் உரையாடல்) நீங்கள் சமீபத்தில் மும்பை வந்து, உங்கள் ஆதார் நம்பரை வைத்து ஒரு சிம் கார்டு வாங்கி யிருக்கிறீர்களா? நான் தொலைத்தொடர்பு துறை, மத்திய அலுவலகம், மும்பையிலிருந்து பேசுகிறேன்" என்றார். "நான் மும்பை வந்து பல வருடங்கள் ஆகின்றன" என்றேன். "டாக்டர் சார் இது விஷயமாக நான் உங்களிடம் மறுபடியும்

பேச வேண்டும், எப்பொழுது" என்றார். நான் "நாளை காலை 10 மணி அளவில் பேசுங்கள், எனது செகரட்டிரியும் உடன் இருப்பார்" என்று கூறி போனைத் துண்டித்துவிட்டேன்.

அடுத்த நாள் காலை சரியாக 10 மணிக்கு அதே குரல். தற்பொழுது தமிழிலும் பேச ஆரம்பித்தார். தனது பெயரையும் குறிப்பிட் டார். "டாக்டர் சார், நேற்று மாலையில் பேசினேன், அதே நபர் நான்தான். நீங்கள் 23.03.2023ம் தேதி மும்பையில் உங்கள் ஆதார் நம்பரைக் காட்டி ஒரு சிம் கார்டு வாங்கிய தாகவும், அதிலிருந்து சுமார் 21 மோசமான அழைப்புகள் வந்துள்ளதாக பேண்ட் நகர், மும்பை போலீஸ் ஸ்டேஷனில் புகார் வந்துள்ளது. அதைப் பற்றிப் போலீஸ் உதவி ஆய்வாளர் உங்களிடம் தற்பொழுது பேசுவார். அவர் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில் அளிக்கவும். இது விஷயமாக நீங்கள் மும்பைக்கு நேரில் வந்து காவல் நிலையத்தில் பதில் அளிக்க வேண்டியிருக்கும்" என்றார்.

"எனக்கு 85 வயது, நான் இதுவரை யாருக்கும் எனது ஆதார் நம்பரைக் கொடுக்கவில்லை,

இதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆகையால் மும்பை வர முடியாது" என்றேன். "டாக்டர் சார் உங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டேன். தற்பொழுது மும்பை

உதவி ஆய்வாளர் பேசுவார். இந்த விஷயம்

யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாக உங்களின் செகரட்ரிக்கு, உங்கள் அறைக்கு நீங்கள் வந்துவிடுங்கள், அறையில் யாரும் இருக்கக்கூடாது. அப்படி யாராவது இருந்தால் நீங்கள் ஒட்டுக் கேட்கிறீர்கள்' என்று ஒரு வழக்குப்பதிவு செய்யப்படும். அறைக் கதவை நன்றாக மூடிக்கொள்ளுங்கள். இந்தப் பேச்சு வார்த்தை சுமார் முக்கால் மணிநேரம் நீடிக்கும்" என்று கூறிவிட்டுப் போன் இணைப்பைத் துண்டித்துவிட்டார்.

எனக்கு ஒரே படபடப்பாக இருந்தது. அவர் கூறிய அத்தனையையும் தவறாமல் கடைப்பிடித்து, காவல் உதவி ஆய்வாளரின் கேள்விக்குப் பதில் சொல்ல நான் தயாராக இருந்தேன். சிறிது நேரம் கழித்துக் காவல் உதவி ஆய்வாளர் அவருடைய காவல் உடையில் மிகக் கம்பீரமாகத் தோன்றினார். அங்கு மும்பை காவல் நிலையம் என்ற படமும். சுவற்றில் ஜனாதிபதி மற்றும் பாரதப் பிரதமர் படமும் இருந்தன. என் மனதில் ஒருவிதப் பயம் ஏற்பட உடல் சற்று வேர்க்க ஆரம்பித்துவிட்டது.

நான் எனது அறைக்குச் செல்வதற்கு முன் உதவியாளரிடம் இதைப் பற்றிக் குறிப்பிட்டு, திரு.இராஜசேகரன் அவர்களிடம் இதைத் தெரிவிக்கும்படிக் கூறியிருந்தேன்.

மும்பை காவல் உதவி ஆய்வாளர் மிகக் கம்பீரத்துடன் என்னைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். நான் முழு மனத்தோடு பதிலளித்து வந்தேன். அதுவரை இது ஒரு ஆன்லைன் மோசடிப் பிரிவிலிருந்து, மோசடி செய்கிறார்கள் என்று சிறிதும் நினைக்கவே இல்லை. அப்பொழுதுதான் எனது உதவியாளர் திடீரென்று கதவைத் திறந்து, 'உடனே செல்போனைத் துண்டித்து விடுங்கள், அது ஒரு ஆன்லைன் மோசடிக் கும்பல்" என்று சைகை காட்டினார். உடனே இணைப்புத் துண்டிக்கப்பட்டு அந்த நம்பரும் முடக்கி விடப்பட்டது. மறுபடியும் மும்பையிலிருந்து அழைப்பு ஏதுவும் வரவில்லை.

நான் தொடர்ந்து பேசியிருந்தால் என்ன நடந்திருக்கும்? "டாக்டர் சார், உங்கள் வயதைக் கருதி நாங்கள் உங்களுக்கு உதவ வந்துள்ளோம். சுமார் ஒரு லட்சம் நான் கொடுக்கும் எண்ணுக்கு அனுப்பி வைத்தால், உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராமல் சுமுகமாக முடித்து விடலாம்" என்று கூறியிருப்பார்கள். நான் அதை நம்பிச் செயல்பட்டிருந்தால் சுமார் ஒரு லட்சம் ஒரு விநாடியில் பறிபோயிருக்கும் !

இதற்கு அடுத்த நாள் சென்னையில் ஒருமுன்னாள் மூத்த காவல் அதிகாரியின் மனைவி ரூ.90,000 பணத்தை ஆன்லைன் மூலம் இழந்துவிட்டதாகப் பத்திரிகையில் படித்தேன்.

முதியோர்களின் வீட்டுக்கே வந்து கொள்ளையடிப்பதை நிறுத்திவிட்டு. தங்களுடைய இடத்திலிருந்தே முதியோர்களிடம் ஆன்லைன் மூலம் மோசடி செய்வது இப்பொழுது ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. நாம்தான் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

ஆன்லைன் மோசடி (Cyber Crime) குறித்துப் புகார் செய்ய வேண்டிய உதவி எண்: 1930





நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல - ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து

# தவக்குல்

"அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். அவனே (எங்களுக்குச்) சிறந்த பாதுகாவலன்"

(ஆலஇம்ரான் : 173)

"(நபியே) அல்லாஹ்வையே நீர் சார்ந்திருப்பீராக. அல்லாஹ்வே (உமக்குப்) பாதுகாவலனாக இருக்கப் போதுமானவன்." (அல்அஹ்காப் : 3)

"நிச்சயமாக அல்லாஹ் (தன்னிடம்) பொறுப்பை ஒப்படைப்பவர்களை மிகவும் நேசிக்கின்றான்."

(ஆலஇம்ரான் : 159)

அல்லாஹ்வை முழுமையாக சார்ந்து தன்னுடைய அனைத்து காரியங்களையும் இறைவனிடம் ஒப்படைப்பது தான் தவக்குல் ஆகும். ஒருசில மனிதர்கள் இறைவனை சார்ந்திருக்கிறோம். எங்களுடைய எல்லா காரியங்களையும் இறைவனிடம் ஒப்படைத்து விட்டோம். இனி எங்களுடைய காரியங்கள் அனைத்தையும் இறைவன் பார்த்துக்கொள்வான் என்று கூறி அதற்காக எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளாமல், நாங்கள் துஆ மட்டும் செய்வோம், வேறு எதுவும் செய்ய மாட்டோம் என்று சோம்பேறியாக தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய தூதர் முஹம்மது நபி (ஸல்) இப்படிப்பட்ட தவக்குலை நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. மாறாக, முஹம்மது நபி (ஸல்) பறவைகளை உதாரணமாகக் கூறுகிறார்கள். "பறவைகள் ஒட்டிய வயிற்றுடன் காலையில் கிளம்பிச் செல்லக்கூடிய பறவைகள் வயிறு நிரம்பிய வண்ணம் மாலையில் திரும்புகிறது." இந்த பறவைகளில் எடுத்துக்காட்டில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், "இறைவன் உணவளிப்பான் என்பதற்காக பறவை கூட்டினுள் அதற்கு தேவையான உணவு பறவையின் கூட்டினை வந்தடைவதில்லை. பறவை உணவைத் தேடிச் செல்கிறது. அதற்கு உணவு கிடைக்கிறது. இதைபோன்றுதான் மனிதனும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்கான பலனை இறைவன் வழங்குவான்.

வெறும் இறை நம்பிக்கை மட்டும் போதாது. அதனுடன் சேர்த்து முயற்சியும் இருக்க வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"நீ இறைவனை நம்பு. ஆனால், உன் ஒட்டகத்தை கட்டி வை" என்றார்கள்.

இன்று நாம் வாழ்கின்ற பகுதியிலும் ஏன் உலகம் முழுவதிலும் முஸ்லிம்கள் சொல்லொனா துன்பங்களைச் சகித்துக்கொண்டு இருக்கின்றார்கள். தங்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முற்படும்போது யாரெல்லாம் எதிர்த்துப் போராடி இறை நம்பிக்கையோடு முயற்சியும் செய்து வருகிறார்களோ அல்லாஹ் அவர்களுக்கு வெற்றி அளிக்கிறான். ஒருசில கூட்டம் எந்த முயற்சியும் வேண்டாம், நாம் வெறும் பிரார்த்தனை மட்டும் செய்வோம். நம்முடைய எல்லா பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று மக்களை கோழைகளாக மாற்றி வருகிறார்கள். அவர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இருந்து

படிப்பினை பெற வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் துஆ கேட்டாலே இறைவன் அங்கீகரித்து விடுவான். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த நபிகள் நாயகம் (ஸல்) மக்காவின் ஆரம்ப காலக்கட்டத்தில் ஸஹாபாக்கள் சொல்லொனா துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது இன்னும் எப்போது இறைவனுடைய உதவி வரும் என்று எதிர்பார்த்து இருந்தபோது, முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்விடம் பிரார்த்தனை மட்டும் செய்துவிட்டு இருந்துவிடவில்லை.

மாறாக, இந்த மக்களை எப்படி காப்பது இவர்களை இந்த கொடுமைகளிலிருந்து எப்படி விடுவிப்பது என்று யோசித்தார்கள், முயற்சி செய்தார்கள். முதல் முறையாக அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்ய வைத் தார்கள். இரண்டாவது முறை மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ய வைத்தார்கள். ஸஹாபாக் களை மக்கத்துக் குறைஷிகளின் துன்பங்களி லிருந்து காத்தார்கள். மீண்டும் குறைஷிகள் போர் தொடார்ந்தார்கள். அப்போதும் முஹம்மது நபி (ஸல்) பிரார்த்தனையோடு நின்றுவிடவில்லை. ஸஹாபாக்களை போருக்கு தயார்படுத்தினார்கள். போர் செய்தார்கள், வெற்றி பெற்றார்கள். தொடர்ந்து இந்த பூமியில் தீனை நிலை நாட்டும் வரை முயற்சி செய்துகொண்டே இருந்தார்கள். இறைவன் அவர்களுக்கு உதவி புரிந்தான். வெற்றி பெற்றார்கள் தீனை நிலைநாட்டினார்கள். மக்காவை வெற்றி பெற்றார்கள்.

சகோதரர்களே! அல்லாஹ் நம்முடைய காரியங்களில் நம்முடைய சொல், செயல் இரண்டையும் பார்க்கின்றான். ஆகையால், நாம் வெறும் பிரார்த்தனையோடு நின்று விடாமல் அதற்கான முயற்சியிலும் ஈடுபட வேண்டும். இப்படிப்பட்ட "இறைநம்பிக்கை யாளர்களுக்கு உதவி செய்வதை அல்லாஹ் தன்மீது கடமையாக்கிக் கொண்டான்" ஆகையால் நாம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய அந்த ஸஹாபாக் களைப் போன்று வீரமிக்க, விவேகமிக்க சமூகமாக மாற நாம் முயற்சி செய்வோம். அல்லாஹ் நம்முடைய முயற்சிக்கு உதவி புரிவானாக. ஆமீன்.


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

– இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் – பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்



# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | **- ரூ.450.00** |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | **- ரூ.50.00** |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | **- ரூ.20.00** |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | **- ரூ.30.00** |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | **- ரூ.15.00** |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | **- ரூ.50.00** |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | **- ரூ.40.00** |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | **- ரூ.30.00** |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | **- ரூ.50.00** |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | **- ரூ.60.00** |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | **- ரூ.70.00** |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | **- ரூ.100.00** |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | **- ரூ.80.00** |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | **- ரூ.220.00** |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | **- ரூ.20.00** |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | **- ரூ.10.00** |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | **- ரூ.10.00** |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | **- ரூ.25.00** |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | **- ரூ.20.00** |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | **- ரூ.25.00** |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | **- ரூ.60.00** |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | **- ரூ.20.00** |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | **- ரூ.30.00** |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | **- ரூ.30.00** |

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | **- ரூ.400.00** |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | **- ரூ.150.00** |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | **- ரூ.120.00** |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | **- ரூ.400.00** |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | **- ரூ.300.00** |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | **- ரூ.20.00** |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | **- ரூ.100.00** |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | **- ரூ.20.00** |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | **- ரூ.50.00** |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | **- ரூ.50.00** |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | **- ரூ.40.00** |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | **- ரூ.60.00** |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | **- ரூ.60.00** |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | **- ரூ.25.00** |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | **- ரூ.20.00** |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | **- ரூ.50.00** |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | **- ரூ.100.00** |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | **- ரூ.100.00** |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | **- ரூ.170.00** |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | **- ரூ.140.00** |
| 05. | **பலி கடாக்கள்** | **- ரூ.300.00** |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.325.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE**<br>**LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** **Vaigarai Velicham Official**

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002